# 5

# வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

## 5.1 பொதுநோக்கு

*மிகச் சிறந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிலைமைகளின் தூண்டுதலுடன் நிதியியல் கணக்கிற்கு ஏற்பட்ட உயர்ந்த உட்பாய்ச்சல்களின் காரணமாக சென்மதி நிலுவைகளின் மீதான அழுத்தம் தளர்வடைந்தமையினால் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கையின் வெளிநாட்டுத் துறை படிப்படியாக மேம்பட்டது. இவ்வாண்டுப்பகுதியில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு பின்னடைவினைக் கொண்டிருந்த போதும், உயர்வடைந்த முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் உள்நாட்டு பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் மேம்பாடடைந்த உறுதிப்பாடு என்பன நிதியியல் கணக்கிற்குக் கணிசமானளவு உயர்ந்த தொகையினைக் கொண்ட வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலைக் கவர்வதற்கு உதவியது. வணிகப்பொருட்களின் ஏற்றுமதியில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை பெரும்பாலும் வானிலையுடன் தொடர்புபட்ட இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் விஞ்சியமை, உயர்ந்த வட்டி மற்றும் பங்கிலாபக் கொடுப்பனவுகள், சுற்றுலா வருவாய்களில் காணப்பட்ட மிதமான தன்மை மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களில் காணப்பட்ட வீழ்ச்சி என்பன ஒன்றுசேர்ந்து இவ்வாண்டுப்பகுதியில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையில் விரிவினைத் தோற்றுவித்தன. எனினும், வெளிநாட்டு நேரடி முதலீடுகள் வாயிலாக நிதியியல் கணக்கிற்கான வெளிநாட்டுச் செலாவணியின் பாய்ச்சல், அரச பிணையங்கள் சந்தை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் காணப்பட்ட முதலீடுகள் அதேபோன்று அரசாங்கம் மற்றும் தனியார் துறைக்கான ஏனைய உட்பாய்ச்சல்கள் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை எதிரீடு செய்ய உதவிய வேளையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டத்தினை மீளநிரப்புவதற்குப் பங்களித்ததுடன் கூடியளவிற்குச் சந்தையை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீதக் கொள்கையினைப் பேணுவதற்கும் வசதியளித்தன.*

*2016இல் மொ.உ.உற்பத்தியின் 2.1 சதவீதத்திற்கு வகைகூறிய நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது விரிவடைந்த பற்றாக்குறை, சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான வருவாய்கள் மிதமடைந்தமை என்பனவற்றின் காரணமாக 2017இல் மொ.உ.உற்பத்தியின் 2.6 சதவீதத்திற்கு விரிவடைந்தது. 2017ஆம் ஆண்டு இரட்டை இலக்க வளர்ச்சியுடன் கூடிய முன்னெப்பொழுதுமில்லாத மிக உயர்ந்த ஏற்றுமதி வருவாய்களைக் காட்டிய போதும், வர்த்தகப் பற்றாக்குறை 2016இன் மொ.உ.உற்பத்தியில் 10.9 சதவீதத்திலிருந்து 2017இல் மொ.உ.உற்பத்தியின் 11.0 சதவீதத்திற்கு விரிவடைந்தமைக்கு குறிப்பாக எரிபொருள், அரிசி, தங்கம் என்பனவற்றின் மிகுந்த இறக்குமதிகளே காரணமாகும். உயர்வடைந்த ஏற்றுமதிகளுக்கு முன்னேற்றம் கண்ட நாடுகளில் காணப்பட்ட சமகால வளர்ச்சியும் ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட திட்டம் (GSP) + வசதி மீண்டும் கிடைக்கப் பெற்றமை, வலுவான மற்றும் கொள்கை ஆதரவு என்பன உதவியாக அமைந்த வேளையில், இறக்குமதியில் ஏற்பட்ட உயர்விற்கு வானிலையுடன் தொடர்பான நிலைமைகளினால் உள்நாட்டு உற்பத்தியின் வெற்றிடத்தினை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட உயர்ந்த அரிசி இறக்குமதி, நீர்மின்வலு உருவாக்கத்தில் ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் இறக்குமதி என்பன பெருமளவு காரணமாக அமைந்தன. வர்த்தகப் பற்றாக்குறையின் தாக்கத்தினை ஈடுசெய்த சுற்றுலாப் பயணிகளின் வருவாய்களும் தொழிலாளர் பணவனுப்பல்களும் கூட 2017இல் மிதமடைந்தமையின் மூலம் நடைமுறைக் கணக்கின் மீது எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தின. 2017இல் வானூர்திநிலையத்தின் ஓடுபாதைக்கு மேற்தரையிடல் வேலைகளுக்காக வானூர்திநிலையம் மூடப்பட்டமை, அதேபோன்று டெங்கு தொற்றுநோய் பரவியமை, பணிகளின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் காணப்பட்ட மிதமான வளர்ச்சி என்பனவற்றினைத் தொடர்ந்து*

*இவ்வாண்டுப்பகுதியில் சுற்றுலாத் துறை பின்னடைவொன்றினைப் பதிவுசெய்தது. 2017இல் தொழிலாளர் பணவனுப்பல்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் பொருளாதார நடவடிக்கைகள் மந்தமடைந்தமையும் தேர்ச்சிபெற்ற அனைத்து வகை தொழிலாளர் புலம்பெயர்வில் காணப்பட்ட வீழ்ச்சியும் ஓரளவிற்குக் காரணங்களாயமைந்தன.*


*மாறாக, 2017இன் உயர்ந்த வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்களின் காரணமாக 2017 முதற் காலாண்டுப்பகுதியில் அழுத்தத்தின் கீழ் காணப்பட்ட சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கு அதன் பின்னர் கணிசமாக மேம்பாடடைந்தது. 2017இல் இலங்கை வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக்காட்டி, நாட்டில் இதுவரை பதிவுசெய்யப்பட்ட அளவினை விஞ்சிக் காணப்பட்டது. அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலும் குறிப்பாக, ஆண்டின் இறுதி மூன்று காலாண்டுகளிலும் வெளிநாட்டு முதலீடுகளில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தின. மேலும், நிதியியல் கணக்கானது பதினோராவது நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகள், வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகள், ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் இரண்டு தொகுதிகள் கிடைக்கப்பெற்றமை மற்றும் அரச, தனியார் துறைகளுக்கு உட்பாய்ந்த வெளிநாட்டு நாணயங்கள் என்பனவற்றின் காரணமாக நிதியியல் கணக்கு உயர்வடைந்தது. நிதியியல் கணக்கில் ஏற்பட்ட இம்முன்னேற்றங்கள் சென்மதி நிலுவையின் ஒட்டுமொத்த செயலாற்றத்தில் பிரதிபலித்தது. சென்மதி நிலுவையானது இரண்டாண்டு தொடர்ச்சியான பற்றாக்குறைகளைத் தொடர்ந்து 2017இல் ஐ.அ.டொலர் 2.1 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க மிகையினைப் பதிவுசெய்தது.*



*இவ்வாண்டுப்பகுதியில், மத்திய வங்கியின் செலாவணி வீதக் கொள்கையானது, வெளிநாட்டுச் செலாவணிக்கான நிரம்பல் மற்றும் கேள்வியின் அடிப்படையில் ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியினை நிர்ணயிப்பதில் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையினை உள்ளடக்குவதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. சந்தையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையில் பற்றாக்குறை காணப்பட்டமைக்கு மத்தியிலும் ரூபாவின் மீதான தேய்வு அழுத்தத்திற்கு பதிலிறுத்தும் விதத்தில் ஆண்டின் முதற்காலாண்டுப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்குக் கணிசமானளவு வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை நிரம்பல் செய்த மத்திய வங்கி, அதன் பின்னர் அதன் தலையீட்டு உபாயத்தினை மாற்றிக் கொண்டு, பன்னாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியினைக் கொள்வனவு செய்ததன் மூலம் செலாவணியினை ஈர்த்துக் கொள்ளத் தொடங்கியது. இந்நடவடிக்கையானது கடன்படாத ஒதுக்குகளின் அளவினைக் கட்டியெழுப்புவதற்கு மத்திய வங்கிக்கு உதவிய வேளையில் நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 8.0 பில்லியன் மட்டத்திற்கு அதிகரித்தது. இது 4.6 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகும். மேலும், இவ்வுபாயமானது செலாவணி வீத நடத்தை சுமுகமடைய வசதியளித்ததன் மூலம் நீண்ட ஊசலாட்டத்துடன் கூடிய தளம்பல்களையும் தவிர்த்தது. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி ஓப்பீட்டு ரீதியில் உறுதியானதாகக் காணப்பட்டு 2017இல் ஐ.அ.டொலருக்கெதிராக 2.0 சதவீதத்தினால் மாத்திரம் தேய்வடைந்தது. உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களும் தேய்வடைந்து 2017 இறுதியில் 100 சுட்டெண் புள்ளியினைப் படிப்படியாக அடைந்து, நாட்டின் வெளிநாட்டு போட்டித்தன்மையில் முன்னேற்றமொன்று ஏற்பட்டமையினை எடுத்துக்காட்டியது.*

*2017ஆம் ஆண்டுப்பகுதியில் வெளிநாட்டுத் துறை சில சாதகமான உத்வேகத்தன்மையினைக் கொண்டிருந்த போதும், மேம்பட்ட வர்த்தக நிலுவை மற்றும் உயர்ந்த வெளிநாட்டு முதலீடுகள் என்பனவற்றுடன் நடைமுறைக் கணக்கினைச் சீராக்குவதனூடாக வெளிநாட்டுத் தாங்கிருப்பினைக் கட்டியெழுப்புவது வெளிநாட்டு அதிர்வுகளினால் நாடு பாதிக்கப்படும் தன்மையினைக் குறைப்பதற்கு இன்றியமையாததாகும். வெளிநாட்டு நாணயக் கணக்கின் மேம்பாடுகள் வர்த்தகப் பற்றாக்குறையினை குறுக்குவதில் பெருமளவிற்கு தங்கியிருப்பதனால் அனைத்தையுமுள்ளடக்கிய ஏற்றுமதி உபாயமொன்றினை நடைமுறைக்கிடுவது முன்னுரிமைக்குரிய கொள்கையாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது. இதற்கமைய, வணிக ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்துவதும் செலவுச் சிக்கனத்தினை அடையும் நோக்குடன் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதும் அதேவேளையில் புதிய ஏற்றுமதி நாடுகளைக் கண்டறிவதில் கவனம் செலுத்துவதும் ஏற்றுமதி வருவாய்களை உத்வேகப்படுத்த முக்கியமானவைகளாகும். நாட்டின் தேர்ச்சிபெற்ற மனித மூலவளத்தளத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் பணிகளின்*

வரைபடம் 5.1
சென்மதி நிலுவை




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.1
செனமதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை

| விபரம் | ஐ.அ.டொ. மில்லியன் | | ரூபா. மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2016 (அ) | 2017 (ஆ) | 2016 (அ) | 2017 (ஆ) |
| **நடைமுறை கணக்கு (தேறிய)** | **-1,742** | **-2,309** | **-254,159** | **-350,695** |
| **வர்த்தக நிலுவை** | **-8,873** | **-9,619** | **-1,293,627** | **-1,466,133** |
| ஏற்றுமதிகள் | 10,310 | 11,360 | 1,500,766 | 1,732,440 |
| இறக்குமதிகள் | 19,183 | 20,980 | 2,794,393 | 3,198,572 |
| **பணிகள் (தேறிய)** | **2,879** | **3,338** | **419,338** | **508,790** |
| பெறுகைகள் | 7,138 | 7,760 | 1,039,283 | 1,182,738 |
| கொடுப்பனவுகள் | 4,259 | 4,421 | 619,945 | 673,949 |
| **முதன்மை வருமானம் (தேறிய)** | **-2,202** | **-2,355** | **-319,652** | **-357,668** |
| பெறுகைகள் | 127 | 160 | 18,499 | 24,414 |
| கொடுப்பனவுகள் | 2,329 | 2,515 | 338,151 | 382,082 |
| **இரண்டாந்தர வருமானம் (தேறிய)** | **6,453** | **6,327** | **939,782** | **964,316** |
| இரண்டாந்தர வருமானம்: வரவு | 7,260 | 7,175 | 1,057,281 | 1,093,607 |
| தொழிலாளர் பணவலுப்பல்கள் | 7,242 | 7,164 | 1,054,489 | 1,091,972 |
| அரசாங்க மாற்றல்கள் | 19 | 11 | 2,792 | 1,634 |
| இரண்டாந்தர வருமானம்: செலவு | 807 | 848 | 117,498 | 129,291 |
| **மூலதன கணக்கு (தேறிய)** | **25** | **11** | **3,745** | **1,667** |
| மூலதன கணக்கு : வரவு | 56 | 40 | 8,269 | 6,125 |
| மூலதன கணக்கு : செலவு | 31 | 29 | 4,525 | 4,458 |
| **நடைமுறை மற்றும் மூலதன கணக்கு (தேறிய)** | **-1,717** | **-2,298** | **-250,414** | **-349,028** |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **-2,182** | **-2,184** | **-317,181** | **-336,145** |
| **நேரடி முதலீடு : சொத்துக்கள்** | **237** | **72** | **34,476** | **8,162** |
| **நேரடி முதலீடு : பொறுப்புகள்** | **897** | **1,375** | **131,839** | **210,361** |
| **சொத்துப் பட்டியல் முதலீடு : சொத்துக்கள்** | **-** | **-** | **-1** | **-12** |
| படுகடன் பிணையங்கள் | - | - | -1 | -12 |
| **சொத்துப் பட்டியல் முதலீடு : பொறுப்புக்கள்** | **993** | **1,772** | **144,665** | **271,168** |
| பங்கு மூலதனம் | 24 | 359 | 3,684 | 54,606 |
| படுகடன் பிணையங்கள் | 969 | 1,413 | 140,981 | 216,562 |
| நிதியியல் பெறுதிகள் | - | - | - | - |
| **ஏனைய முதலீடு : சொத்துக்கள்** | **266** | **102** | **38,245** | **16,297** |
| நாணயம் மற்றும் வைப்புகள் | 5 | 78 | 538 | 12,094 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | -118 | 54 | -17,114 | 8,322 |
| கிடைக்க வேண்டிய ஏனைய கணக்குகள் | 379 | -31 | 54,821 | -4,119 |
| **ஏனைய முதலீடு : பொறுப்புகள்** | **323** | **1,981** | **47,806** | **303,543** |
| நாணயம் மற்றும் வைப்புகள் | -609 | -228 | -87,671 | -33,698 |
| கடன்கள் | 793 | 1,839 | 114,419 | 280,407 |
| மத்திய வங்கி | -123 | 184 | -17,234 | 28,630 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | -507 | 271 | -75,495 | 40,156 |
| மத்திய அரசாங்கம் | 1,287 | 1,215 | 188,365 | 185,577 |
| ஏனைய துறைகள் | 136 | 170 | 18,783 | 26,044 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 84 | 309 | 12,466 | 47,019 |
| செலுத்த வேண்டிய ஏனைய கணக்குகள் | 55 | 61 | 8,592 | 9,815 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | - | - | - |
| **ஒதுக்கு சொத்துக்கள்** | **-472** | **2,771** | **-65,593** | **424,480** |
| நாணய தங்கம் | - | - | - | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | -5 | 2 | -685 | 354 |
| ப.நா.நி இல் ஒதுக்கு நிலைமை | - | - | - | - |
| ஏனைய ஒதுக்கு சொத்துக்கள் | -467 | 2,768 | -64,907 | 424,126 |
| நாணயம் மற்றும் வைப்புகள் | -1,267 | 393 | -183,495 | 60,087 |
| பிணையங்கள் | 800 | 2,375 | 118,582 | 364,025 |
| **தேறிய பிழைகளும் தவறுகளும்** | **-465** | **114** | **-66,767** | **12,883** |
| **திரண்ட நிலுவை (இ)** | **-500** | **2,068** | **-46,013** | **330,004** |
| **மொ.உ.உ. இன் சதவீதமாக** | | | | |
| வர்த்தக நிலுவை | -10.9 | -11.0 | | |
| பொருட்கள் மற்றும் பணிகள் | -7.3 | -7.2 | | |
| நடைமுறை கணக்கு | -2.1 | -2.6 | | |
| நடைமுறை மற்றும் மூலதன கணக்கு | -2.1 | -2.6 | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திரண்ட நிலுவையைக் கணிப்பிடுவது தொடர்பில் அட்டவணை 5.12 பார்க்குக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

*ஏற்றுமதியாளராக நாடு, பயன்படுத்தப்படாத உள்ளார்ந்த வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் கொள்கைகள் நெறிப்படுத்தப்படல் வேண்டும். நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு வெளிநாட்டுக் கடன்பாடுகளில் தங்கியிருப்பதனைக் குறைப்பதும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் போன்ற நீண்ட கால வெளிநாட்டு முதலீடுகளூடாகப் பன்னாட்டு ஒதுக்குகளின் இருப்பினைக் கட்டியெழுப்புவதும் 2019 - 2023 காலப்பகுதியில் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ஒன்றுசேர்வதன் பின்னணியில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எதிர்காலப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை வலியுறுத்தும் விதத்தில் உபாயமல்லா பொதுச் சொத்துக்களை வர்த்தகப்படுத்துவதிலிருந்தான குறிப்பிடத்தக்கப் பெறுகைகள், பொறுப்பு முகாமைத்துவ மசோதா பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டமை மற்றும் 2019 - 2023 காலப்பகுதிக்கான நடுத்தரகாலப் படுகடன் உபாயத்தின் தயாரிப்பு போன்ற நடவடிக்கைகளின் காரணமாக சில முன்னேற்றங்கள் அடையப்பட்ட போதும் இவ்வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலை உயர்ந்த முன்னுரிமையுடன் விரைவுபடுத்துவது வெளிநாட்டுப் படுகடன் முகாமைத்துவத்தினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு இன்றியமையாததாகும். எனவே, உலகின் எப்பாகத்திலிருந்தும் தோன்றுகின்ற அதிர்வுகளுக்குப் பொருளாதாரம் தாக்குப்பிடிக்கக் கூடியதாக இருக்கச் செய்யும் பொருட்டு வெளிநாட்டுத் துறையில் காணப்படும் கடுமையான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பல்முனை கொண்ட கொள்கை முன்னெடுப்புக்களை நடைமுறைக்கிடுவது இன்றியமையாததாகும்.*

5

## 5.2 வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள் அபிவிருத்தி மற்றும் நிறுவன ரீதியான ஆதரவு

**உலகளாவிய சந்தைகளுடன் பெருமளவிற்கு இணைக்கப்படுவதனை நோக்கி அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட முயற்சிகள், வெளிநாட்டு வர்த்தகத்தினை ஊக்குவிப்பதற்கும் அதனை வசதிப்படுத்துவதற்குமாக கூடியளவிற்கு அனைத்தையுமுள்ளடக்கிய வர்த்தகக் கொள்கைக் கட்டமைப்பினை மீளவடிவமைத்தமை மற்றும் வர்த்தகத்தினை வசதிப்படுத்துவதற்காக நிறுவன ரீதியான ஆதரவினை ஒழுங்குமுறைப்படுத்தி உயர்த்துவதனை நோக்கி எடுக்கப்பட்ட வழிமுறைகள் என்பன 2017இல் வெளிநாட்டு வர்த்தக கொள்கை சூழலை மாற்றியமைக்கும் விதத்தில் எடுக்கப்பட்ட குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளாகும்.** 2017 மேயில் ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை மீள நிறுவப்பட்டமையானது ஐரோப்பிய ஒன்றியத்திற்கான 7,200 விடயங்கள் தொடர்பில் தீர்வையற்ற வசதிகளை வழங்குவதனால் இது நாட்டிற்குக் கிடைத்த குறிப்பிடத்தக்கதொரு சாதனையாகும். பெருமளவிற்கு அனைத்தையுமுள்ளடக்கிய வர்த்தகக் கொள்கை, சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக

உடன்படிக்கையின் பேச்சுவார்த்தைகள் இறுதிப்படுத்தப்பட்டமை என்பனவும் முக்கிய சாதனைகளிடையே இடம்பெற்றிருக்கின்றன. மேலும், தற்பொழுது பேச்சுவார்த்தையின் கீழ் இருக்கும் சீனாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையூடாகவும் இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை வலுப்படுத்துவதனூடாகவம் பிராந்திய ஒருங்கிணைப்பினை மேலும் வலுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, கூடியளவிற்கு அனைத்தையுமுள்ளடக்கிய தேசிய ஏற்றுமதி உபாயமொன்றினை நோக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆர்வலர்களுடனான விரிவான ஆலோசனைகளைத் தொடர்ந்து ஆறு முக்கிய துறைகளும் நான்கு வர்த்தக ஆதரவளிக்கும் தொழிற்பாடுகளும் தேசிய ஏற்றுமதி உபாயத்தில் அடையாளம் காணப்பட்டிருப்பதுடன் இதற்கான அமைச்சரவையின் ஒப்புதலை இனிமேல் தான் பெற வேண்டியுள்ளது. மேலும், உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின்படி தேசிய ஒரே கூரையின் கீழான நிலையம் மற்றும் வர்த்தக தகவல் நுழைவாயில் போன்ற முன்னெடுப்புக்களை வடிவமைக்கின்ற வேலைகள் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன.

**2017ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமையிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்டது.** ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியாக, கனடா, யப்பான், ருஷியா கூட்டமைப்பு மற்றும் துருக்கி உள்ளிட்ட பல அபிவிருத்தியடைந்த நாடுகளினால் வழங்கப்பட்ட முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட திட்டத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்டது. குறிப்பாக, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டங்களின் கீழான ஏற்றுமதிகள் 2017இல் கணிசமாகப் பங்களித்தன. 2016 யூலையில் இலங்கை அரசாங்கத்தினால் செய்யப்பட்ட கோரிக்கையினைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியமானது ஐரோப்பிய ஒன்றிய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்டம்+ இனை 2017 மேயில் மீண்டும் வழங்கியது. ஐரோப்பிய ஒன்றிய முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட திட்டம் மொத்தத் தீர்வைத் தொடர்களில் 66 சதவீதத்திற்கு முன்னுரிமை அணுகுமுறைகளை வழங்குவதுடன் ஐரோப்பிய ஒன்றியம் - முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட திட்டம்+ புடவைகள், ஆடைகள், மீன் உற்பத்திகள் உட்பட இலங்கையின் ஏற்றுமதிக் கூடையிலுள்ள பரந்தளவிலான உற்பத்திகளுக்கான தீர்வைகளை முழுமையாக அகற்றுவதனை உள்ளடக்கியிருக்கிறது. அதேவேளை, ஐக்கிய அமெரிக்காவினால் வழங்கப்பட்ட முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்டம் 2017 திசெம்பரில் 31இல் காலாவதியாகிறது. எனினும், 2018 மாச்சு 23ஆம் திகதி ஐக்கிய அமெரிக்க அரசாங்கம், கடந்த காலப்பகுதியிலும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு இறக்குமதியாளர்கள் முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட முறைமை சலுகையினைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாகும் விதத்தில் மீளளிப்புக்களை வழங்குவதற்கேதுவாகப் பின்னோக்கிய கிளை வாசகங்களுடன் 2020 திசெம்பர் 31 வரை இம்முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட திட்டத்திற்கு மீள அதிகாரமளித்தது. அதேவேளை, வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய முறைமை உடன்படிக்கையின் கீழ், இலங்கையின் ஏற்றுமதிகள் 2017இல் அதிகரித்ததுடன் கறுவா ஏற்றுமதிகள் இதில் முன்னுரிமை பெற்றிருந்தன. அபிவிருத்தியடைந்த நாடுகளிலுள்ள வர்த்தக பங்காளர்களினால் வழங்கப்பட்ட ஏனைய பல முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட திட்டங்களின் கீழான நன்மைகளை இலங்கை தொடர்ந்தும் அனுபவித்த போதும் குறுகிய ஏற்றுமதித் தளம் மற்றும் உற்பத்தி உள்ளடக்கம் என்பனவற்றின் காரணமாக 2017இல் அத்தகைய முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் பரந்தளவிலான உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய தவறவிட்டமையானது நாடு முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்டத்திலிருந்தான நன்மைகளை நாடு பெற்றுக்கொள்வதனைத் தடை செய்தது.

அட்டவணை 5.2
முன்னுரிமை உடன்படிக்கைகளுக்கு கீழான இலங்கையின் ஏற்றுமதிகள்

| முன்னுரிமை உடன்படிக்கை | 2016 | 2017 (அ) | | |
|---|---|---|---|---|
| | பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்) | பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்) | வளர்ச்சி (%) | பங்கு (%) |
| பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறைமை (ஜி.எஸ்.பீ) | 3,346.0 | 3,851.2 | 15.1 | 83.1 |
| இதில் ஐரோப்பிய ஒன்றியம் (ஜி.எஸ்.பீ + உள்ளடங்களாக) (ஆ) | 2,243.5 | 2,473.9 | 10.3 | 53.4 |
| அமெரிக்கா | 608.5 | 782.1 | 28.5 | 16.9 |
| ருசிய கூட்டாட்சி | 160.3 | 188.3 | 17.5 | 4.1 |
| யப்பான் | 83.5 | 96.4 | 15.4 | 2.1 |
| கனடா | 60.1 | 90.5 | 50.6 | 2.0 |
| அவுத்திரேலியா | 60.9 | 81.4 | 33.7 | 1.8 |
| துருக்கி | 60.2 | 79.8 | 32.5 | 1.7 |
| இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 375.3 | 442.3 | 17.9 | 9.5 |
| ஆசிய - பசுபிக் வர்த்தக உடன்படிக்கை | 126.0 | 151.1 | 19.9 | 3.3 |
| வர்த்தக முன்னுரிமைகளுக்கான உலகலாவிய முறைமை | 45.1 | 81.2 | 79.9 | 1.8 |
| பாக்கித்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 51.6 | 60.3 | 16.9 | 1.3 |
| தெற்காசியா சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 7.5 | 41.1 | 446.2 | 0.9 |
| தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை | 3.4 | 4.5 | 32.2 | 0.1 |
| **மொத்தம்** | **3,955.0** | **4,631.7** | **17.1** | **100.0** |

(அ) தற்காலிகமானது
(ஆ) ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொருட்களின் இறக்குமதிகள் மீதான தீர்வைகள் 66 வீதமானவைக்கு ஐரோப்பிய ஒன்றிய ஜீ.எஸ்.பீ. முன்னுரிமையான நுழைவை வழங்கும் அதே வேளையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொருட்களின் இறக்குமதிகள் மீதான அதே தீர்வைகளிந்கு பூச்சிய தீர்வை நுழைவை ஜீ.எஸ்.பீ. + வழங்குகிறது.
(இ) ருஸ்ஸியா,பெலறூஸ் மற்றும் கசாக்த்தான் உள்ளடங்கலாக

*மூலம்:* வணிகத் திணைக்களம்

**உள்ளார்ந்த சந்தைகளை முக்கிய கவனத்திற் கொண்ட புதிய வர்த்தக உடன்படிக்கைகளினூடாக உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளினூடாக நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கத்தின் முன்கூட்டிய செயற்பாட்டு நடவடிக்கைளில்**

**2017 காலப்பகுதியிலும் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தது.** இலங்கையும் சிங்கப்பூரும் எட்டுச் சுற்றுப் பேச்சுவார்த்தைகளை 2016 ஓகத்தில் நிறைவுசெய்து கொண்டதுடன் இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 2018 சனவரியில் கையெழுத்தாயிற்று. அனைத்தையுமுள்ளடக்கிய இருபுடை உடன்படிக்கையான இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பணிகளிலுள்ள வர்த்தகம், முதலீடுகள், வர்த்தக நிவாரணங்கள், தொலைத்தொடர்பூட்டல், இ-வர்த்தகம், அரசாங்க கொள்வனவுகள், போட்டித்தன்மை, புலமைச் சொத்துரிமை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பன தொடர்பிலான வேறுபட்ட துறைகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. தற்பொழுது சிங்கப்பூர் பொருட்கள் தீர்வைத் தொடர்களில் 99 சதவீதத்திற்கு மேற்பட்டவை தீர்வையற்ற சந்தைகளை அணுகும் வாய்ப்பினை வழங்கியுள்ளமையினால் பணிகளை ஏற்றுமதிசெய்து சிங்கப்பூரிலிருந்து முதலீடுகளைக் கவரக்கூடியதாக இருப்பதன் மூலம் இலங்கை இவ்வுடன்படிக்கையிலிருந்து முக்கியமான நன்மைகளைப் பெற்றுக்கொள்கிறது. இ-வர்த்தகம் மீதான அத்தியாயமானது இலங்கை சிங்கப்பூர் ஊடாக ஆசியான் சந்தைகளை அணுகுவதற்கு கருத்தில் கொள்ளத்தக்க உள்ளார்ந்தத்தினை வழங்குகின்றது. இலங்கைக்கும் சீனாவிற்குமிடையில் 2014 செத்தெம்பரில் கையெழுத்தான புரிந்துணர்வு உடன்படிக்கையினைத் தொடர்ந்து உத்தேச சீனா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பில் இரண்டு நாடுகளும் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தின. சீனா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது, சீனச் சந்தையை அணுகுவதற்கு முன்னுரிமையினை அனுபவிக்கின்ற ஆசியான் பிராந்தியத்திலுள்ள போட்டியாளர்களிடையே சமவாய்ப்புக்களை இலங்கைக்கு வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. பொருட்களிலுள்ள வர்த்தகத்திற்குப் புறம்பாக, சீனா- இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையும் பணிகளிலுள்ள வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு என்பனவற்றை உள்ளடக்குகிறது. சீன இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பில் தற்பொழுது இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் 2018இல் இறுதிப்படுத்தப்பட்டு 2018இல் கையெழுத்தாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, புதிய முன்னுரிமை வாய்ந்த உடன்படிக்கைகளின் தொடர்ச்சியான மதிப்பீடுகள், அபிவிருத்தி உபாயம் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சு மற்றும் வர்த்தகத் திணைக்களம் என்பனவற்றின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டன. முன்னுரிமை உடன்படிக்கையிலிருந்து தோன்றுகின்ற பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பல மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்ட வேளையில், பல்புடை வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்காக ருஷியா மற்றும் கட்டார் போன்ற நாடுகளுடன் கூட்டு துணைக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. மேலும், இலங்கை வங்காளதேசம், மலேசியா, தென்கொரியா மற்றும் தாய்லாந்து என்பனவற்றுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதன் சாத்தியம் பற்றியும் பரிசீலித்து வருகின்றது.

**தற்பொழுதுள்ள வர்த்தக உடன்படிக்கைகளின் வர்த்தக உருவாக்கம் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவாக இருப்பதனால், தற்பொழுதுள்ள இருபுடை வர்த்தக உடன்படிக்கைகளின் பயன்பாட்டினை மேலும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** 2000ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறையிலிருந்துவரும் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இரண்டு நாடுகளுக்குமிடையிலான இருபுடை வர்த்தகத்தினை அதிகரிப்பதற்குப் பங்களித்திருக்கிறது. இந்தியா - இலங்கைக்கிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் பயன்பாடு இலங்கைக்குச் சாதகமாக இருப்பதுடன், இலங்கையின் ஏற்றுமதிகளில் 64 சதவீதம் இந்தியாவிற்கு ஏற்றுமதியாவதுடன் அவற்றுள் விலங்குத்தீன், பாக்கு கழிவு, கடதாசி கழிவு மற்றும் துண்டுக்கடதாசிகள், வாசனைத்திரவியங்கள் மற்றும் காப்பிடப்பட்ட செப்புக் கம்பிகள் மற்றும் வடம்கள் என்பன முதன்மையானவையாக விளங்கிய வேளையில் இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்தியாவிலிருந்து ஏறத்தாழ 6 சதவீத இறக்குமதிகளே இலங்கைக்குத் தருவிக்கப்பட்டன. இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான உத்தேச பொருளாதார மற்றும் தொழில்நுட்பவியல் ஒத்துழைப்பு உடன்படிக்கை தொடர்பாக தற்பொழுது இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் இவ்வாண்டுப்பகுதியிலும் தொடர்ந்ததுடன் 2017 திசெம்பரில் ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நிறைவடைந்தது. இப்பேச்சுவார்த்தைகளின் போது, இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான தீர்வையல்லா வழிமுறைகள் தொடர்பான பிரச்சனைகளும் மீளாய்வு செய்யப்பட்டன. இது தொடர்பில், இலங்கை அதிகாரிகள் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் ஆடை உற்பத்திகள், கரும் மிளகு, தேங்காய்த்துருவல் போன்ற சில இலங்கை ஏற்றுமதிகள் மீது விதிக்கப்படுகின்ற அளவுக் கட்டுப்பாட்டினை அகற்ற வேண்டிய அவசியம் பற்றி வலியுறுத்தினர். பொருளாதார மற்றும் தொழில்நுட்பவியல் ஒத்துழைப்பு உடன்படிக்கை 2018இல் இறுதிப்படுத்தப்பட்டு கையெழுத்தாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, 2005 இலிருந்து நடைமுறையிலிருந்துவரும் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையும் இரண்டு நாடுகளுக்குமிடையிலான இருபுடை வர்த்தகம் அதிகரிக்கப் பங்களித்தது. பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ், இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்கள், வெற்றிலை, தேங்காய் உற்பத்திகள், எம்டிஎவ் பலகைகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் கராம்பு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. எனினும், 2017இல் பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் பயன்பாடு அதிகரித்த போதும் உற்பத்திகளின் பன்முகப்படுத்தல் தன்மை போதாமல் இருப்பது, அவ்வப்போது செய்யப்படும் கொள்கை மாற்றங்கள் போன்ற தீர்வையல்லா தடைகள் நடைமுறைகளில் காணப்படும் தாமதம் என்பன பாகிஸ்தானுக்கான ஏற்றுமதிகளின் தாழ்ந்த ஏற்றுமதிகளுக்கான தடைகளாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

**பிராந்தியங்களுக்கிடையேயான வர்த்தகம் மற்றும் பணிகளின் வலையமைப்பு என்பனவற்றின் ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பில் பிராந்திய மற்றும் பல்புடை முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகள் அதிகரித்தளவில் முக்கியத்துவத்தினைப் பெற்று வருகின்றன.** 2006இல் நடைமுறைப்படுத்தப்பட்ட தென்னாசிய சுதந்திர வர்த்தகப் பிரதேசம் மீதான உடன்படிக்கையானது முன்னுரிமை வர்த்தகத்தின் ஊக்குவிப்பு ஊடாக சார்க் பிராந்தியத்திலுள்ள பொருளாதாரத்தின் ஒருங்கிணைப்பினை மேலும் அதிகரிப்பதனை நோக்காகக் கொண்டிருந்தது. இது 1995இல் அறிமுகப்படுத்தப்பட்ட தென்னாசிய முன்னுரிமை வர்த்தகப்படுத்தல் உடன்படிக்கையினை மேலும் வலுப்படுத்துமொரு நடவடிக்கையாகும். எனவே, காலப்போக்கில் தென்னாசிய முன்னுரிமை வர்த்தகப்படுத்தல் உடன்படிக்கையின் கீழான தீர்வை முன்னுரிமையின் பயன்பாட்டினைப் படிப்படியாகக் குறைப்பதன் மூலம் தென்னாசிய முன்னுரிமை வர்த்தகப்படுத்தல் உடன்படிக்கையினை தென்னாசிய சுதந்திர வர்த்தகப் பிரதேசம் உடன்படிக்கையின் மூலம் படிப்படியாப் பதிலீடு செய்யப்படும். தென்னாசிய சுதந்திர வர்த்தகப் பிராந்தியம் மீதான உடன்படிக்கையின் வர்த்தக தாராளமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது கட்டம் 2015 நவெம்பரில் இலங்கையினால் பூர்த்தி செய்யப்பட்டது. வர்த்தக தாராளமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில், 2018 திசெம்பர் 31ஆம் திகதியளவில் இலங்கை அதன் ஆரம்ப உணர்வுபூர்வபட்டியல்களைக் குறைந்தபட்சம் 20 சதவீதத்தினால் குறைப்பதற்கு எதிர்பார்க்கிறது. எனினும், தென்னாசிய சுதந்திர வர்த்தகப் பிரேதசத்தின் கீழான ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் குறைவாக விளங்கியதுடன் தென்னாசிய சுதந்திர வர்த்தகப் பிரதேசத்தின் கீழான ஏற்றுமதிகளில் 80 சதவீதம் மிளகாகக் காணப்பட்டது. 2012 நவெம்பரில் வலுப்படுத்தப்பட்ட பணிகளிலுள்ள வர்த்தகத்தின் மீதான சார்க் உடன்படிக்கையானது உறுப்பினர் நாடுகளின் கடப்பாடுகளின் தேசிய அட்டவணைப்படுத்தலை இறுதிப்படுத்தும் செயற்பாட்டில் காணப்பட்டது. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் முக்கிய ஏற்றுமதி விடயங்களான கருந்தேயிலை, தெங்கு உற்பத்திகள் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட ஆடைகள் என்பனவற்றைக் கொண்ட ஏற்றுமதிகள் 2017இல் அதிகரித்தன. இந்துமா சமுத்திரத்திலமைந்துள்ள நாடுகளிடையே பிராந்திய ஒத்துழைப்பினை வலுப்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்ட அரசாங்க அமைப்புக்களுக்கிடையேயான இந்திய ஒன்றியம் அசோசியேஷன் அமைப்பின் முதலாவது தகவல்களின் உச்சிமாநாடு 2017 மாச்சில் இந்தோனேசியாவில் நடைபெற்றது. பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பின் மூத்த அலுவலர்களின் 17ஆவது மற்றும் 18ஆவது சுற்றுக்கூட்டங்களும் அமைச்சரவை மட்டத்திலான கூட்டத்தின் 15ஆவது சுற்றும் 2017இல் நடைபெற்றன. இக்கூட்டங்களின் போது, மேலோட்டமாக குறிப்பிடப்பட்ட நெறிமுறைகளை வரைந்து கொள்ளும் தீவிரமான முயற்சிகளும் கோவா கூட்டத்தின் போது தலைவர்களினால் இணங்கிக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் நிகழ்ச்சிநிரலிலும் உறுதிப்படுத்தப்பட்டன.

5

**1995இல் இது நிறுவப்பட்டதிலிருந்தும் உலக வர்த்தக அமைப்பின் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியொன்றாக விளங்கும் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கை தொடர்பான இலங்கையின் ஈடுபாடுகள் 2017ஆம் ஆண்டுப்பகுதியிலும் தொடர்ந்தன.** இலங்கை 2016 மேயில் வர்த்தகத்திற்கான வசதிப்படுத்தல் உடன்படிக்கையினை உறுதிப்படுத்தியதுடன் உலக வர்த்தக அமைப்பின் மூன்றிலிரண்டு உறுப்பினர்களின் (110) உறுதிப்படுத்தல்கள் நிறைவடைந்ததினைத் தொடர்ந்து 2017 பெப்புருவரியில் நடைமுறைக்கு வந்தது. உள்நாட்டு இணைப்புக்களை வசதிப்படுத்தும் பொருட்டும் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் ஏற்பாடுகளையும் மற்றைய வர்த்தகப்படுத்தல் வசதி முன்னெடுப்புக்களையும் நடைமுறைப்படுத்தும் விதத்திலும் 2017 மேயில் உலக வங்கிக் குழுமத்தின் உதவியுடன் தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழுவிற்காக செயலகமொன்று நிறுவப்பட்டது. இதன் விளைவாக, தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழு தேசிய ஒரே கூரையின் கீழான நிலையம் மற்றும் வர்த்தக தகவல் நுழைவாயில் என்பனவற்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தது. வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கை வர்த்தக வசதிப்படுத்தல் கடப்பாடுகளை மேற்கொள்ளுமாறு உலக வர்த்தக அமைப்பு உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டது. இது, மூன்று வகைகளாக தொகுதிப்படுத்தப்பட்டுள்ளது. வகை 'ஏ' வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கை நடைமுறைக்கு வந்ததும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது, வகை பீ மாறிச் செல்லும் காலத்திற்குப் பின்னர் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ள வேளையில் வகை 'சி' வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் உதவி மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்பப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவற்றினூடாகப் பெறப்பட்ட இயலாற்றல்கள் கட்டியெழுப்பப்பட்ட பின்னர் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் கொண்டிருக்கிறது. இதன் விளைவாக, இலங்கை வகை 'ஏ' இன் கடப்பாடுகளை உலக வர்த்தக அமைப்பிற்கு 2014 யூலையில் அறிவித்த வேளையில் 'பீ' மற்றும் 'சி' வகைகளின் கடப்பாடு பற்றிய அறிவித்தலும் அவை நடைமுறைப்படுத்தப்படும் நிச்சயமான திகதிகளும் 2018 பெப்புருவரியில் உலக வர்த்தக அமைப்பிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. மேலும், ஆஜென்ரினாவில் நடத்தப்பட்ட உலக வர்த்தக அமைப்பின் 11ஆவது அமைச்சரவை மட்டத்திலான மாநாடு வேளாண்மை, மீன்பிடி உதவுதொகைகள் மற்றும் பணிகள் போன்ற உணர்வுபூர்வமான விடயங்கள் தொடர்பில் பொதுவான அமைச்சரவைப் பிரகடனமோ அல்லது தீர்மானமோ இல்லாமல் 2017 திசெம்பரில் நிறைவடைந்தது.

**ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கு வலுவான நிறுவன ரீதியான ஆதரவின் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்ற விதத்தில், கொள்கைச் சூழலையும் நிறுவன ரீதியான இயலாற்றலையும் வலுப்படுத்துவதற்காக அரசாங்கம் பல புதிய வழிமுறைகளை முன்னெடுத்தது.** அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சு நான்கு முக்கிய கூறுகளான உள்நாட்டு கொள்கைச் சீர்திருத்தங்களூடான போட்டித்தன்மை; சந்தையை அணுகும்தன்மை மற்றும் வர்த்தக வசதிப்படுத்தல்; பேரண்டப் பொருளாதார நிலுவைகள், கொள்கை மற்றும் இணக்கம் மற்றும் நிறுவனங்கள் மற்றும் மக்களின் சீராக்கம் என்பன தொடர்பில் புதிய வர்த்தக கொள்கையினை வடிவமைத்தது. 2017 ஓகத்தில், அமைச்சரவை தேசிய வர்த்தகக் கொள்கையினை அங்கீகரித்தது. மேலும், பன்னாட்டு வர்த்தகத்தில் இலங்கையின் போட்டித்தன்மையினை ஊக்குவித்தல் மற்றும் உபாயங்களுக்கான முக்கிய முகவராக விளங்கி வருகின்ற அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சு முதலீட்டுச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பன உள்ளிட்ட முயற்சிகளிடையே நிறுவன ரீதியான இசைவுத்தன்மையினை மேம்படுத்துவதற்காக பல கொள்கை வழிமுறைகைள முன்னெடுத்தது. இம்முன்னெடுப்புக்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் முதலீட்டுச் சபை அடையாளம் காணப்பட்ட 24 முக்கிய தொடர்புபட்ட முகவர்களிடையேயான தொடர்புகளை மேம்படுத்துவதனூடாக முதலீட்டு ஒப்புதல் செயன்முறையினை விரைவுபடுத்துவதற்காக விண்ணப்பங்களைச் செயன்முறைப்படுத்தும் முறைமையினை இயலுமைப்படுத்தும் வெப்தளத்துடன் கூடிய ஒரே கூரையின் கீழ் அனைத்தையும் கொள்வனவு செய்யும் நிலையமொன்றினை நடைமுறைப்படுத்தும் செயன்முறையில் ஈடுபட்டு வருகின்றது. மேலும், அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சு இலங்கையின் வியாபாரம் செய்யுங்கள் தொடர்பான ஒட்டுமொத்த தரத்தினை தற்போதைய மட்டமான 110 இலிருந்து 2020இல் 70 இற்கு முன்னேறுவதனை நோக்கிய முதலீட்டுச் சூழலின் சீர்திருத்தங்களுக்காக வழிகாட்டலொன்றினை உருவாக்கியிருக்கிறது. 2022 அளவில் வணிகப்பொருட்கள் மற்றும் பணிகளிலிருந்து ஐ.அ.டொலர் 27 பில்லியன் கொண்ட ஏற்றுமதி இலக்கினை எய்துவதற்காக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் தேசிய ஏற்றுமதி உபாயங்கள் வடிவமைத்தல் 2017இலும் தொடர்ந்தன. ஆர்வலர்களின் விரிவான ஆலோசனைகளைத் தொடர்ந்து, ஏற்றுமதிச் செயலாற்றத்தினை மேலும் அதிகரிப்பதற்காக உள்ளார்ந்த வளத்துடன் கூடிய 6 கவனத்தில் கொள்ள வேண்டிய துறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவையாவன தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பம்; வியாபாரச் செயன்முறை முகாமைத்துவம்; உடல் நலச் சுற்றுலா; படகு கட்டுதல்; இலத்திரனியல் மற்றும் கூறுகள்; பதனிடப்பட்ட உணவு மற்றும் குடிபானங்கள் மற்றும் வாசனைத்திரவியங்கள் மற்றும் கூட்டுக்கள். மேலும், வர்த்தகத் தகவல்கள் மற்றும் ஊக்குவிப்புக்கள், தேசிய தர உட்கட்டமைப்பு, அதேபோன்று வசதி ஏற்பாடுகள் மற்றும் களஞ்சியப்படுத்தல் போன்ற வர்த்தக ஆதரவு வழங்கல் தொழிற்பாடுகளில் அபிவிருத்திகளை மேற்கொள்வதும் இன்றியமையாதவையென அடையாளம் காணப்பட்டுள்ளன. தேசிய ஏற்றுமதி உபாயத்தினை நடைமுறைப்படுத்துவது அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றதும் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**2017இல் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான உபாயங்களை நடைமுறைப்படுத்துவதனை நோக்கி மேலும் வலுவான நிறுவன ரீதியான ஆதரவுகள் வழங்கப்பட்டன.** தேசிய ஏற்றுமதி உபாயத்திற்கு முன்னுரிமையளிக்கின்ற விதத்தில் ஏற்றுமதி அபிவிருத்திச்சபை 2017இல் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்திய வேளையில், ஏற்றுமதியினை ஊக்குவிப்பது தொடர்பில் பல்வேறு நடவடிக்கைளை மேற்கொண்டது. இது தொடர்பில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இ-வர்த்தகத் தகவல்களையம் ஊக்குவிப்பு தளத்தினையும் நிறுவுவதற்கு எதிர்பார்க்கிறது. இது ஏற்றுமதியாளர்கள் வர்த்தக ஊக்குவிப்பு சாதனங்களையும் உபாய நேரத்தில் நம்பகமான வர்த்தகத் தகவல்களையும் பெற்றுக்கொள்வதனை அனுமதிக்கிறது. பிரதேச வாரியாக 2000 சிறிய நடுத்தர தொழில்முயற்சியாளர்களைக் கவர்வதற்கும் ஏற்றுமதியாளர்களாக அவர்களை மாற்றுவதற்குமான தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்று யாழ்ப்பாணத்தில் 2017 மார்ச்சில் ஆரம்பிக்கப்பட்ட வேளையில், பெண் முயற்சியாளர்களை ஊக்குவிக்கின்ற நிகழ்ச்சித்திட்டமொன்று கிளிநொச்சியில் தொடங்கப்பட்டன. இது, "ஒரு கிராமம் ஒரு உற்பத்தி" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகள் தொடர்பில் வேளாண்மையாளர் கொத்தணிகளை ஏற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தக பொருட்காட்சிகளில் பங்கேற்றல், உள்முக மற்றும் வெளிமுக வர்த்தகப் பேராளர்களுக்கு வசதியளித்தல், வர்த்தகத்துடன் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான ஏற்றுமதியாளர் அரங்கங்களை நடத்துதல் மற்றும் விருது வழங்கல் வைபவங்களூடாக ஏற்றுமதியாளர்களை பாராட்டுதல் போன்ற வர்த்தக ஊக்குவிப்புக்கள் மற்றும் வசதிப்படுத்தல்கள் தொடர்பாக வழமையான நடவடிக்கைகள் 2017 காலப்பகுதியிலும் தொடர்ந்தன. வர்த்தக சம்மேளனம் ஆண்டு முழுவதும் ஏற்றுமதி ஊக்குவிப்பிற்குப் பங்களித்ததுடன் இது அரச மற்றும் வியாபார துறைகளிடையே தொடர்புகளை ஏற்படுத்துகின்ற கருவியாகவும் விளங்கியது. வர்த்தக சம்மேளனங்கள் ஆர்வலர்களுடனான ஆலோசனைகள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், ஏற்றுமதியாளர்களிடையே இயலளவினைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவற்றுடன் தொடர்புபட்டிருந்தன. அதேவேளை, இலங்கைச் சுங்கம் கொள்கலன்களைப் பரிசோதனை செய்தல் மற்றும் அவற்றை விடுவிக்கும் செயன்முறைகள், மீளளிப்பு மற்றும் எடுப்பனவு நடைமுறைகள் போன்ற அவர்களின் செயன்முறைகளையும் நடவடிக்கை

5

முறைகளையும் ஒழுங்குமுறைப்படுத்தியது. மேலும், வங்கி உத்தரவாத முகாமைத்துவ முறைமையொன்று சுங்கத்தின் ஆசிக்குடா உலக முறைமைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில், துறைமுகப் பணிகள் சுமுகமாக இடம்பெறுவதனை வசதிப்படுத்தும் பொருட்டு பொருட்களை வைக்கும் மண்டபங்களைத் தெரிவுசெய்யும் நடைமுறைகள் மற்றும் கொள்கலன்களற்ற பொருள் ஏற்றும் களஞ்சியசாலைகளின் செயன்முறைகள் போன்ற பல நடைமுறைகள் தன்னியக்கப்படுத்தப்பட்டன.

**வரவு செலவுத்திட்டம் - 2018 பல்வேறு வர்த்தக ஆதரவு வழிமுறைகளை முன்மொழிந்துள்ள வேளையில், 2017இல் அறிமுகப்படுத்தப்பட்ட வர்த்தக மற்றும் தீர்வை கொள்கைகள் மற்றும் சட்ட ரீதியான திருத்தங்கள் வரி அமைப்பினை மேலும் ஒழுங்குமுறைப்படுத்துவதன் மீதும் இலகுபடுத்துவதன் மீது சந்தை வர்த்தகத்தினை ஊக்குவிப்பதன் மீதும் கவனம் செலுத்தின.** வரவு செலவுத்திட்டம் - 2018 சூழல் சான்றுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தினை வலுப்படுத்துவதற்கும் தகவல் தொழில்நுட்பப் பணிகளின் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கு தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கும் பன்னாட்டுச் சந்தைகளை அணுகுவதற்கு தேசிய ஏற்றுமதி உபாயங்களின் கீழ் முன்னுரிமைத் துறைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் "ஏற்றுமதிச் சந்தையினை அணுகுவதற்கான ஆதரவு" நிகழ்ச்சித்திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கும் தேசிய வர்த்தக கொள்கையினால் ஆலோசனை வழங்கப்பட்ட வர்த்தகச் சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தின் பகுதியொன்றாகவும் ஏற்றுமதித் துறையினை மேம்படுத்துவதற்கான உற்பத்தி அபிவிருத்தி உதவியை வழங்குவதற்காகவும் ரூ.800 மில்லியன் ஒதுக்கப்பட்டன. முக்கியமாக பிராந்திய மற்றும் உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகள் (அதாவது பன்னாட்டு உற்பத்தி பகிரிடல் வலையமைப்புகளுக்குள் நுழைவது) தொடர்பிலான வெளிநாட்டு முதலீடுகளுக்கு இலங்கையில் ஊக்குவிக்கும் நோக்குடன் வரி முறைமையினை எதிர் வரிவிதிப்பு பிரயோகத்தினை படிப்படியாக நீக்குவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இதனுடன், நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் மற்றும் எதிர்பாராத இறக்குமதி அதிகரிப்புக்களிலிருந்து உள்நாட்டுக் கைத்தொழில்களைப் பாதுகாக்கும் பொருட்டு 2018ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டம் 2018 மாச்சில் இயற்றப்பட்டது. மேலும், வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை தயாரிக்கும் பொருட்டு சுங்கக் கட்டளைகளைத் திருத்தும் செயன்முறைகளில் இலங்கைச் சுங்கம் ஈடுபட்டு வருகிறது.

**வெளிநாட்டு வர்த்தகம் அதன் உத்வேகத்தினை அடைந்து வருகின்ற போதும், உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பிரச்சனைகளும் சவால்களும் வர்த்தகத்தின் மேம்பட்ட செயலாற்றத்திற்கு தொடர்ந்தும் முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றன.** வரலாற்றிலேயே மிக உயர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள், நெகிழ்ச்சித்தன்மை மிக்க செலாவணி வீதம் காரணமாக அதிகரித்த போட்டித்தன்மை என்பன 2017இல் வெளிநாட்டு வர்த்தகத்தின் மேம்பட்ட செயலாற்றத்தினைப் பிரதிபலித்தன. அதேநேரம், அனைத்து முன்னணி பொருளாதாரங்களிலும் காணப்பட்ட சமகால வளர்ச்சி 2017இல் ஏற்றுமதிக்கான கேள்வி குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு வழிவகுத்த வேளையில் ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான மீன் உற்பத்திகளின் ஏற்றுமதி மீதான தடை மற்றும் ஐரோப்பிய ஒன்றிய முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட திட்டம்+ வசதிகள் இடைநிறுத்தப்பட்டமை போன்ற குறிப்பிட்ட முக்கியமான தடைகள் 2016இலும் 2017இலும் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டன. மேலும், புதிய அனைத்தையுமுள்ளடக்கிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினூடாக சிங்கப்பூருடனான வர்த்தக உறவுகள் வலுப்படுத்தப்பட்ட வேளையில், பல்வேறு வர்த்தகப் பங்காளர்களுடன் சுதந்திரமான வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன. அதேவேளை, அரசாங்கத்தின் தொலைநோக்கு - 2025, தேசிய வர்த்தகக் கொள்கை, தேசிய ஏற்றுமதி உபாயங்கள் மற்றும் ஆர்வலர்களின் பரந்தளவு ஆலோசனைகளுடன் கூடிய முதலீட்டாளர் வழிகாட்டல் என்பனவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அனைத்தையுமுள்ளடக்கிய உள்நாட்டு கொள்கைக் கட்டமைப்பு முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. எனினும், தாழ்ந்த போட்டித்தன்மையினை ஏற்படுத்துகின்ற உயர்ந்த உற்பத்திச் செலவு, தேவையான தொழிலாளர்கள் குறைவாகவுள்ளமை போன்ற வழங்கல்பக்க தடைகளுக்குத் தீர்வு காண்பது உயர்ந்த முன்னுரிமைக்குரிய விடயமாக வலியுறுத்தப்படல் வேண்டும். மேலும், பிரித்தானிய வெளியேற்றத்தினால் ஏற்படக்கூடிய சாத்தியமான தாக்கம் மற்றும் முன்னேற்றம் கண்ட நாடுகளின், குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்புக் கொள்கைகளின் தாக்கம் மற்றும் இலங்கை உயர் நடுத்தர வருமான நிலையினைப் பெற்றதும் முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவான திட்டம் கிடைக்காமல் போகக்கூடியதன்மை என்பன தடைக்கான இடர்நேர்வுகளாகக் காணப்படுகின்றன. இச்சவால்களை எதிர்கொள்வதற்கு, உற்பத்திப் பகிர்வு வலையமைப்பிற்கு வர்த்தக வசதிப்படுத்தல் மற்றும் நுழைவுத்தன்மை போன்ற மீட்சி வழிமுறைகள் இன்றியமையாதனவாகும். மேலும், வர்த்தகத்தில் நீடித்தநிலையான விரிவாக்கத்திற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினால் வழிகாட்டப்படும் ஏற்றுமதிக் கலாச்சாரமொன்றினை உருவாக்குவதற்கு முன்னுரிமையளிக்கப்படல் வேண்டும். மேலும், முதலீட்டாளர் சிநேகபூர்வ சூழலொன்றினை உருவாக்கும் விதத்தில் நிறுவன ரீதியான கட்டமைப்பொன்றினை ஒழுங்குமுறைப்படுத்துவதுடன் சேர்ந்த விதத்தில் அணிசாரா வெளிநாட்டுக் கொள்கையுடன் இசைந்து செல்லும் நிலையான உள்நாட்டுக் கொள்கையினைப்

5

பேணுவது அவசியமாகவுள்ளது. புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை அதேபோன்று அதிகரித்த பொருளாதார ஒத்துழைப்பு என்பனவற்றினூடாக சந்தைகளை அணுகும் தன்மையினை அதிகரிப்பதற்குத் தொடர்ந்து முயற்சிக்கும் வேளையில், சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் வெற்றிகரமான பேச்சுவார்த்தைக்கும் நடைமுறைப்படுத்தலுக்கும் வர்த்தக பேச்சுவார்த்தைகள் மற்றும் வர்த்தக உறவுகள் தொடர்பான இயலாற்றலைக் கட்டியெழுப்புவதனை மேலும் மேம்படுத்துவது அவசியமாகும்.


## 5.3 பொருட்களிலான வர்த்தகம், வர்த்தக நிலுவை, வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகத்தின் போக்கு

### 5.3.1 ஏற்றுமதிச் செயலாற்றம்

**கடந்த இரண்டு காலாண்டுப் பகுதிகளில் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஏற்றுமதிச் செயலாற்றம் 2017இல் வலுவாக மீட்சியடைந்து வரலாற்றிலேயே மிக உயர்ந்த வருவாய்களுக்கான பெறுமதியினைப் பதிவுசெய்தது.** ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வலுவான வளர்ச்சிக்கு ஐரோப்பின ஒன்றியத்தின் முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட திட்டம்+ வசதி, வெளிநாட்டுக் கேள்வியின் மீட்சி, ஏற்றுமதியுடன் தொடர்பான கைத்தொழில்களில் காணப்பட்ட முதலீடுகளில் ஏற்பட்ட விரிவாக்கம், பன்னாட்டுச் சந்தைகளில் அதிகரித்த பண்ட விலைகள், வலுவான நிதியியல் ஆதரவுடன் கூடிய தூண்டுதலளிக்கும் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள் மற்றும் மத்திய வங்கியினால் பேணப்பட்ட நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதக் கொள்கை என்பன பக்கபலமாக விளங்கின. இதன்படி, ஆண்டின் பின்னரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட தொடர்ச்சியான இரட்டை இலக்க வளர்ச்சியுடன், ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2016இன் ஐ.அ.டொலர் 10,310 மில்லியனிலிருந்து 2017இல் ஐ.அ.டொலர் 11,360 மில்லியனுக்கு 10.2 சதவீதத்தினால் அதிகரித்தது. 2017இல் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் அதனைத் தொடர்ந்து ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தன.


**மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ நான்கில் மூன்று பங்கிற்கு வகைகூறும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017இல் ஐ.அ.டொலர் 8,542 மில்லியனுக்கு 7.6 சதவீதத்தினால் அதிகரித்தது.** மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 44 சதவீதத்திற்கு வகைகூறிய புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வரலாற்றில் முதற்றடவையாக இலக்கிடப்பட்ட ஐ.அ.டொலர் 5 பில்லியனை விஞ்சி கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பெருமளவிற்குப் பங்களித்தன. 2017இன் முதலரைப் பகுதியில் வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்ட போதும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில், புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 3.0 சதவீதத்தினால் அதிகரித்து 2017இல் ஐ.அ.டொலர் 5,032 மில்லியனை அடைந்து, 2017 மேயிலிருந்து முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட முறைமை+ வசதி மீண்டும் கிடைக்கப்பட்டமையினைத் தொடர்ந்து ஐரோப்பிய சந்தையிலிருந்தான கேள்வி மேம்பட்டமையினைப் பிரதிபலித்தது. இதற்கமைய, ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டின் பின்னரைப்பகுதியில் தொடர்ந்தும் அதிகரித்து 4.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து (ஆண்டுக்காண்டு) 2017 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,982 மில்லியனாக விளங்கிய வேளையில் மொத்த ஆடை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 42 சதவீதத்திற்குப் பங்களித்தது. ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1.7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அவுஸ்திரேலியா, இந்தியா, கனடா, ஹொங்கொங் மற்றும் மெக்சிக்கோ உள்ளிட்ட பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான அவற்றின் ஏற்றுமதிகள் இவ்வாண்டுப்பகுதியில்

வரைபடம் 5.2
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் - 2017




*மூலம்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.3
ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிஸ்பி/ ஜிஎஸ்பி + திட்டத்தின் கீழான ஏற்றுமதிகள்




*மூலம்:* வணிகத்திணைக்களம்

3.9 சதவீதத்தினால் அதிகரித்தன. பெற்றோலிய ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017இல் ஐ.அ.டொலர் 434 மில்லியனுக்கு 51.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு நீர்க்கல எரிபொருளின் உயர்ந்த சராசரி விலைகள் மற்றும் ஏற்றுமதி அளவுகள் இரண்டினதும் இணைந்த தாக்கமே முக்கிய காரணமாகும். பன்னாட்டுச் சந்தைகளில் நிலவிய உயர்ந்த எரிபொருள் விலைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நீர்க்கல எரிபொருளின் சராசரி ஏற்றுமதி விலைகள் இவ்வாண்டுப்பகுதியில் 28.3 சதவீதத்தினால் அதிகரித்தன. 2017 யூலையிலிருந்து இந்தியாவில் நீர்க்கல எரிபொருள் மீதான அமைப்பியல் வரியில் அதிகரிப்பினைத் தொடர்ந்து இலங்கையின் நீர்க்கல எரிபொருளுக்கான கேள்வி அதிகரித்தமையின் காரணமாக ஏற்றுமதி செய்யப்பட்ட நீர்க்கல எரிபொருளின் அளவுகள் 16.3 சதவீதத்தினால் அதிகரித்தன. 2017இல் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 393 பில்லியனுக்கு 21.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு காய்கறிகள், பழவர்க்கங்கள் மற்றும் காய்களின் தயாரிப்புக்கள் குறிப்பாக, திரவ தேங்காய்ப்பால் மற்றும் தேங்காய் கிறீம் போன்ற தேங்காயுடன் தொடர்பான உற்பத்திகளில் பதிவுசெய்யப்பட்ட ஆரோக்கியமான செயலாற்றமே காரணமாகும். பெரும்பாலும் அனைத்துத் துணை வகைகளிலும், குறிப்பாக, டயர், அறுவைச் சிகிச்சை மற்றும் ஏனையவற்றிற்கான கையுறைகள் என்பனவற்றின் மேம்பட்ட செயலாற்றத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இறப்பர் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2017இல் ஐ.அ.டொலர் 835 மில்லியனுக்கு 8.8 சதவீதத்தினால் அதிகரித்தன. பொறிகள் மற்றும் எந்திரசாதனங்கள், போக்குவரத்துக் கருவிகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் மற்றும் மரம் மற்றும் தாள் உற்பத்திகளின் ஏற்றுமதி வருவாய்களும் கைத்தொழில் ஏற்றுமதிகளின் உத்வேகத்திற்குப் பங்களித்தன. அதேவேளை, இவ்வாண்டுப்பகுதியில் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும்



அட்டவணை 5.3
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்[1]

| வகை | 2016 | | 2017 (அ) | | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்காண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **2,326.1** | **22.6** | **2,767.2** | **24.4** | **441.1** | **19.0** | **42.0** |
| தேயிலை | 1,269.0 | 12.3 | 1,529.8 | 13.5 | 260.8 | 20.5 | 24.8 |
| இறப்பர் | 32.7 | 0.3 | 38.9 | 0.3 | 6.3 | 19.1 | 0.6 |
| தெங்கு | 366.0 | 3.5 | 347.9 | 3.1 | -18.1 | -4.9 | -1.7 |
| வாசனைப் பொருட்கள் | 317.1 | 3.1 | 406.2 | 3.6 | 89.2 | 28.1 | 8.5 |
| மரக்கறிகள் | 26.5 | 0.3 | 28.5 | 0.3 | 2.0 | 7.5 | 0.2 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 31.2 | 0.3 | 36.5 | 0.3 | 5.3 | 17.1 | 0.5 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 114.1 | 1.1 | 138.7 | 1.2 | 24.6 | 21.6 | 2.3 |
| கடல் உணவு | 169.6 | 1.6 | 240.6 | 2.1 | 71.0 | 41.9 | 6.8 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **7,940.1** | **77.0** | **8,541.9** | **75.2** | **601.8** | **7.6** | **57.3** |
| புடவைகளும் ஆடைகளும் | 4,884.1 | 47.4 | 5,031.9 | 44.3 | 147.9 | 3.0 | 14.1 |
| இறப்பர் உற்பத்திகள் | 767.9 | 7.4 | 835.4 | 7.4 | 67.5 | 8.8 | 6.4 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 286.9 | 2.8 | 434.3 | 3.8 | 147.5 | 51.4 | 14.0 |
| இரத்தினம், வைரம் மற்றும் ஆபரணங்கள் | 273.9 | 2.7 | 257.5 | 2.3 | -16.4 | -6.0 | -1.6 |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 323.7 | 3.1 | 392.7 | 3.5 | 69.0 | 21.3 | 6.6 |
| பொறி மற்றும் இயந்திர துணைக்கருவிகள் | 317.6 | 3.1 | 370.8 | 3.3 | 53.2 | 16.7 | 5.1 |
| அச்சு கைத்தொழில் உற்பத்திகள் | 42.4 | 0.4 | 48.8 | 0.4 | 6.5 | 15.3 | 0.6 |
| போக்குவரத்துக் கருவிகள் | 131.5 | 1.3 | 162.3 | 1.4 | 30.8 | 23.4 | 2.9 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 165.6 | 1.6 | 158.4 | 1.4 | -7.2 | -4.4 | -0.7 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 34.4 | 0.3 | 33.7 | 0.3 | -0.7 | -1.9 | -0.1 |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் | 712.2 | 6.9 | 816.1 | 7.2 | 103.8 | 14.6 | 9.9 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **29.0** | **0.3** | **34.5** | **0.3** | **5.5** | **19.0** | **0.5** |
| **வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **14.5** | **0.1** | **16.9** | **0.1** | **2.3** | **16.0** | **0.2** |
| **மொத்த ஏற்றுமதிகள் (ஆ) (இ)** | **10,309.7** | **100.0** | **11,360.4** | **100.0** | **1,050.7** | **10.2** | **100.0** |
| **ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் (ஈ)** | **145.60** | | **152.46** | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் ஏற்றுமதிகள் நீங்கலாக
(இ) சீராக்கப்பட்டது
(ஈ) ரூபா/ஐ.அ.டொலர் செலாவணி வீதம்

*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

1. நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் - மீளாய்வு 4இன் அடிப்படையில் வர்த்தக புள்ளி விபரவியலைத் தொகுத்தலை இலங்கை மத்திய வங்கி ஆரம்பித்தது. நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் - மீளாய்வு 4இன் அடிப்படையிலான ஏற்றுமதியின் செயலாற்றம் பின்னிணைப்பு அட்டவணை 68 மற்றும் 69இல் வெளியிடப்பட்டுள்ளது.

ஆபரண ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 6.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து அனைத்துத் துணை வகைகளிலும் அறிவிக்கப்பட்ட மோசமான செயலாற்றத்தினைப் பிரதிபலித்தது. இரத்தினக்கல் அகழும் பிரதேசங்களில் காணப்பட்ட பாரிய மழைவீழ்ச்சி மற்றும் இரத்தினக்கல் அகழ்விற்கான உரிமங்களை வழங்குவது தடைசெய்யப்பட்டமை என்பனவற்றின் காரணமாக இரத்தினக்கல் உற்பத்தி குறைவடைந்தமை இவ்வீழ்ச்சிக்குப் பங்களித்தது. எனினும், இரத்தினக்கல் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பட்டை தீட்டப்படாத வடிவத்திலான குறைந்த ஏற்றுமதிகளே முக்கிய காரணமாக அமைந்த வேளையில், பெறுமதிகூட்டப்பட்ட இரத்தினக்கற்களின் ஏற்றுமதிகள் அதிகரித்தன. 2017இல் தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 158 மில்லியனுக்கு 4.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை காலணி ஏற்றுமதிகளின் அளவு குறைவடைந்தமையே காரணமாகும். அத்துடன், மட்பாண்ட உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு தரை ஓடுகள் மற்றும் மேசைப்பொருட்கள், வீட்டு உபயோகப்பொருட்கள் மற்றும் நலப்பொருட்களில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சியே காரணமாகும்.

**வேளாண்மை ஏற்றுமதிகள் அவற்றின் வளர்ச்சி உத்வேகத்தினை ஆண்டு முழுவதும் பேணும் விதத்தில் அவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017இல் ஐ.அ.டொலர் 2,767 மில்லியனுக்கு 19.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன.** பன்னாட்டுச் சந்தையில் குறிப்பாக, தேயிலைக்குக் காணப்பட்ட சாதகமான விலைகள் இவ்வளர்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தன. தேயிலையின் ஏற்றுமதி அளவுகள் பெரும்பாலும் மாற்றமின்றிக் காணப்பட்ட போதும் 2017இல் தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,530 மில்லியனுக்கு 20.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு உலகளாவிய நிரம்பல், குறிப்பாக கென்யாவிலிருந்தான நிரம்பல் குறைவடைந்தமையினால் தூண்டப்பட்ட பன்னாட்டுச் சந்தையின் உயர்ந்த விலைகளினைத் தொடர்ந்தும் சராசரி ஏற்றுமதி விலைகள் உயர்வடைந்தமையே காரணமாகும். இதன்படி, தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை கி.கிராமொன்றிற்கு முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4.39 இலிருந்து 2017இல் கி.கிராமொன்றிற்கு ஐ.அ.டொலர் 5.29 இற்கு 20.5 சதவீதத்தினால் அதிகரித்தது. ஆண்டின் தொடக்கப்பகுதியில் நிலவிய வரண்ட வானிலை நிலைமைகளின் தாக்கத்தினால் 2017 ஏப்பிறல் வரை தேயிலையின் ஏற்றுமதி அளவுகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்த போதும், அதிகரித்த தாழ்நிலை தேயிலை உற்பத்தியின் காரணமாக ஆண்டின் பிற்பகுதியில் ஏற்றுமதி அளவுகள் மீட்சியடைந்தன. இதன்படி, 2017இல் தேயிலையின் ஏற்றுமதி அளவுகள் 0.1 சதவீதத்தினால் அதிகரித்து 289 மில்லியன் கி.கிராம்களை அடைந்தன. 2017இல் துருக்கி, ருஷியா, ஈரான், ஈராக் மற்றும் ஐக்கிய அரவு எமிரேட்ஸ் என்பன முக்கிய தேயிலை ஏற்றுமதி நாடுகளாக விளங்கி மொத்த தேயிலை ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ 48 சதவீதத்திற்குப் பங்களித்தன. மேலும், 2017இல் வாசனைத்திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 406 மில்லியனுக்கு 28.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து கறுவா, கராம்பு மற்றும் மிளகு என்பனவற்றின் மேம்பட்ட செயலாற்றத்தினைப் பிரதிபலித்தன. 2017இல் கறுவா ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 27.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உயர்ந்த ஏற்றுமதி அளவுகளும் சராசரி ஏற்றுமதி விலைகளுமே தூண்டுதலாக அமைந்தன. இவ்வாண்டுப்பகுதியில் சராசரி ஏற்றுமதி விலைகளில் குறைப்புக் காணப்பட்ட போதும், கராம்பு மற்றும் மிளகு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு உயர்ந்த ஏற்றுமதி அளவுகளே காரணமாகும். அதேவேளை 2016 யூனிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான மீன் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் மீதான தடைகள் அகற்றப்பட்டமையின் சாதகமான தாக்கத்தினையம் முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட முறைமை+ மீண்டும் கிடைக்கப் பெற்றமையினையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2017இல் கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 241 மில்லியனுக்கு 41.9 சதவீதத்தினால் அதிகரித்தன. ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 67 மில்லியனுக்கு 112.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்தது. மேலும், ஐ.அமெரிக்கா, வியட்னாம், தாய்லாந்து, ஹொங்கொங் மற்றும் தாய்வான் போன்ற மற்றைய நாடுகளிலிருந்து இலங்கையின் கடலுணவிற்கு ஏற்பட்ட உயர்ந்த கேள்வியும் கடலுணவு ஏற்றுமதிகளில் ஏற்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சிக்குச் சாதகமான முறையில் பங்களித்தன. மேலும், 2017இல் சிறுவேளாண்மை உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 139 மில்லியனுக்கு 21.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு வெற்றிலை (168.2 சதவீதம்), பழவர்க்கங்கள் (19.6 சதவீதம்) மற்றும் பாக்கு (10.6 சதவீதம்) என்பனவற்றிலிருந்தான உயர்ந்த வருவாய்களே காரணமாகும். மேலும், இறப்பர், தயாரிக்கப்படாத புகையிலை மற்றும் காய்கறிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் வேளாண்மை ஏற்றுமதிகளின் அதிகரிப்பிற்குப் பங்களித்தது. அதேவேளை, தேங்காயிலிருந்தான எற்றுமதி வருவாய்கள் 2017இல் ஐ.அ.டொலர் 348 மில்லியனுக்கு 4.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தெங்கின் உள்ளீடு அல்லா உற்பத்திகளில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும் தெங்கின் உள்ளீட்டு உற்பத்திகளின் செயலாற்றம் குறைவடைந்து காணப்பட்டமையே காரணமாகும். தேங்காய்த் துருவல், தேங்காய் எண்ணெய் மற்றும் உலர்த்திய தேங்காய் போன்ற தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் சராசரி ஏற்றுமதி விலைகள் இவ்வாண்டுப்பகுதியில் கணிசமாக அதிகரித்த போதும் மோசமான வானிலை நிலைமைகளின் காரணமாக

குறைவடைந்த தேங்காய் உற்பத்திகள் ஏற்றுமதி அளவுகளில் சுருக்கத்தினை ஏற்படுத்தின. எனினும், தெங்கு உள்ளீடு அல்லா உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 158 மில்லியனுக்கு 5.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு தேங்காய் தும்பு மற்றும் உடன் தேங்காய்களின் விலைகளில் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும்.

**2017இல் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 34 மில்லியனுக்கு 19.0 சதவீதத்தினால் அதிகரித்து மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 0.3 சதவீதத்திற்கு மாத்திரம் வகைகூறியது.** கற்கள் அதனைத் தொடர்ந்து இரும்புத்தாது, கழிவு இரும்பு மற்றும் சாம்பல் கட்டிகள், விலையுயர்ந்த உலோகங்கள் என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் இவ்வளர்ச்சிக்குப் பங்களித்தன.


### 5.3.2. இறக்குமதிச் செயலாற்றம்

**இறக்குமதிகள் மீதான செலவினம் 2016இல் பதிவுசெய்யப்பட்ட சிறிதளவு அதிகரிப்பு மற்றும் 2015இல் காணப்பட்ட சுருக்கம் என்பனவற்றுடன் ஒப்பிடுகையில் 2017இல் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்து மோசமான வானிலை நிலைமைகளின் கசிகின்ற தாக்கத்தினையும் பன்னாட்டு பண்டங்களின் உறுதியான விலையினையும் பிரதிபலித்தன.** 2017இல் இறக்குமதிகள் மீதான செலவினம் 9.4 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 20,980 மில்லியனுக்கு அதிகரித்து, வரலாற்றிலேயே மிக உயர்ந்த இறக்குமதிப் பெறுமதியினைப் பதிவுசெய்தமைக்கு உயர்ந்த எரிபொருள் இறக்குமதிகளே காரணமாகும். 2017இல் எரிபொருள் அல்லா இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 17,552 மில்லியனுக்கு 5.1 சதவீதத்தினால் அதிகரித்தன.

5

**இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு இடைநிலைப்பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய தூண்டுதலாக அமைந்தது.** 2017இல் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 55 சதவீதத்திற்கு வகைகூறி ஐ.அ.டொலர் 11,436 மில்லியனாக விளங்கி 15.9 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம், அனைத்துத் துணை வகைகளான மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் நிலக்கரி என்பனவற்றின் மீதான உயர்ந்த செலவினம் காரணமாக இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 3,428 மில்லியனுக்க 38.2 சதவீதத்தினால் அதிகரித்தன. எரிபொருள் இறக்குமதிகளில் ஏற்பட்ட உயர்ந்த பங்களிப்பு சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளிலிருந்து கிடைத்தது. நாட்டில் நிலவிய வரண்ட வானிலை நிலைமைகளைக் கருத்திற் கொண்டு உள்நாட்டு வலு உருவாக்க துறையிலிருந்தான உயர்ந்த கேள்வியின் காரணமாக இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் காரணமாக எரிபொருள் இறக்குமதிகள் 45.9 சதவீதத்தினால் அதிகரித்தன. பன்னாட்டுச் சந்தையின் உயர்ந்த எண்ணெய் விலைகளும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதிகளின் மீதான செலவினம் உயர்வடையப் பங்களித்தன. நிலக்கரி மீதான இறக்குமதிச் செலவினம் 32.9 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மசகெண்ணெய் இறக்குமதி மீதான செலவினம் 18.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இறக்குமதி அளவுகள் குறைவடைந்த போதும், மிக உயர்ந்த விலைகள் காரணமாக அமைந்தன. பெற்றோலிய ஏற்றுமதி நாடுகள் அமைப்பினால் விதிக்கப்பட்ட வழங்கல் கட்டுப்பாடுகள் அதேபோன்று ஆரோக்கியமான உலகளாவிய பொருளாதார வளர்ச்சியின் பின்னணியில் உத்வேகமடைந்த கேள்வி என்பன 2017இல் பன்னாட்டு எண்ணெய் விலைகள் உறுதியடையக் காரணமாயின. இதன்படி, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலை 2016இன் பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 46.30 இலிருந்து 2017இல் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 57.79 இற்கு 24.8 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை வைரங்கள், பெறுமதிமிக்க கற்கள் மற்றும் உலோகங்கள் என்பன மீதான இறக்குமதிச் செலவினம் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமைக்கு அதிகரித்த தங்க இறக்குமதிகள் காரணமாக அமைந்தன. 2016 சனவரியிலிருந்து தங்க இறக்குதி மீதான துறைமுக மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வை அகற்றப்பட்டமையினைத் தொடர்ந்து இவ்வாண்டுப்பகுதியில் தங்க இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 650 மில்லியனுக்கு 73.7 சதவீதத்தினால் அதிகரித்தது. இருப்பினும்கூட, உள்நாட்டு ஆபரண உற்பத்திகளிலோ அல்லது ஆபரண ஏற்றுமதிகலோ குறிப்பிடத்தக்க அபிவிருத்தி காணப்படாததுடன் இந்தியா மற்றும் இலங்கைக்கிடையிலான தீர்வை வித்தியாசத்தின் சட்டத்திற்கு முரணான நடுத்தீர்ப்பினை பிரதிபலித்தது.

வரைபடம் 5.4
இறக்குமதிகளின் உள்ளடக்கம் - 2017




*மூலம்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.4
**இறக்குமதிகளின் உள்ளடக்கம்**[2]

| வகை | 2016 | | 2017 (அ) | | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்காண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு (ஆ) % | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **4,319.0** | **22.5** | **4,502.5** | **21.5** | **183.6** | **4.3** | **10.2** |
| உணவும் குடிபானங்களும் | 1,627.4 | 8.5 | 1,841.1 | 8.8 | 213.6 | 13.1 | 11.9 |
| அரிசி | 12.8 | 0.1 | 300.9 | 1.4 | 288.1 | 2,244.7 | 16.0 |
| சீனி மற்றும் சீனி இனிப்பு வகை | 344.6 | 1.8 | 258.0 | 1.2 | -86.6 | -25.1 | -4.8 |
| பால் உற்பத்திகள் | 249.3 | 1.3 | 315.8 | 1.5 | 66.5 | 26.7 | 3.7 |
| பருப்பு வகை | 139.4 | 0.7 | 114.4 | 0.5 | -25.0 | -17.9 | -1.4 |
| ஏனையவை | 881.3 | 4.6 | 851.9 | 4.1 | -29.4 | -3.3 | -1.6 |
| உணவல்லாத நுகர்வுப் பொருட்கள் | 2,691.5 | 14.0 | 2,661.5 | 12.7 | -30.0 | -1.1 | -1.7 |
| வாகனங்கள் | 794.8 | 4.1 | 772.7 | 3.7 | -22.1 | -2.8 | -1.2 |
| மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 525.8 | 2.7 | 520.0 | 2.5 | -5.8 | -1.1 | -0.3 |
| வீட்டுப் பாவனைப் பொருட்கள் | 270.7 | 1.4 | 258.2 | 1.2 | -12.6 | -4.6 | -0.7 |
| புடவைகள் மற்றும் துணைப் பொருட்கள் | 365.8 | 1.9 | 369.0 | 1.8 | 3.2 | 0.9 | 0.2 |
| ஏனையவை | 734.4 | 3.8 | 741.6 | 3.5 | 7.3 | 1.0 | 0.4 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **9,870.0** | **51.5** | **11,435.8** | **54.5** | **1,565.8** | **15.9** | **87.1** |
| எரிபொருள் | 2,481.0 | 12.9 | 3,427.9 | 16.3 | 946.8 | 38.2 | 52.7 |
| புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 2,704.9 | 14.1 | 2,724.2 | 13.0 | 19.3 | 0.7 | 1.1 |
| வைரங்கள், அருமையான கற்கள் மற்றும் உலோகங்கள் | 514.4 | 2.7 | 772.4 | 3.7 | 258.0 | 50.1 | 14.4 |
| இரசாயன உற்பத்திகள் | 856.3 | 4.5 | 834.5 | 4.0 | -21.8 | -2.5 | -1.2 |
| கோதுமை மற்றும் சோளம் | 249.2 | 1.3 | 356.6 | 1.7 | 107.4 | 43.1 | 6.0 |
| வளமாக்கி | 136.9 | 0.7 | 102.8 | 0.5 | -34.0 | -24.9 | -1.9 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 2,927.3 | 15.3 | 3,217.3 | 15.3 | 290.1 | 9.9 | 16.1 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4,980.8 (ஆ)** | **26.0** | **4,894.7** | **23.3** | **-86.1** | **-1.7** | **-4.8** |
| கட்டடப் பொருட்கள் | 1,568.7 | 8.2 | 1,591.4 | 7.6 | 22.7 | 1.4 | 1.3 |
| போக்குவரத்துக் கருவிகள் | 662.9 (ஆ) | 3.5 | 674.9 | 3.2 | 12.0 | 1.8 | 0.7 |
| பொறியும் கருவியும் | 2,740.7 | 14.3 | 2,620.6 | 12.5 | -120.1 | -4.4 | -6.7 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 8.5 | ... | 7.8 | ... | -0.7 | -7.8 | ... |
| **வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **13.1** | **0.1** | **146.8** | **0.7** | **133.7** | **1,024.6** | **7.4** |
| **மொத்த இறக்குமதிகள் (இ) (ஈ)** | **19,182.8 (ஆ)** | **100.0** | **20,979.8** | **100.0** | **1,797.0** | **9.4** | **100.0** |
| **ஆண்டுச்சராசரி செலாவணி வீதம் (உ)** | **145.60** | | **152.46** | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) மீள் இறக்குமதிகள் நீங்கலாக
(ஈ) சீராக்கப்பட்டது
(உ) ரூபா/ ஐ.அ.டொ. நாணயமாற்று வீதம்

*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

2. நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் - மீளாய்வு 4இன் அடிப்படையில் வர்த்தக புள்ளி விபரவியலைத் தொகுத்தலை இலங்கை மத்திய வங்கி ஆரம்பித்தது. நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் - மீளாய்வு 4இன் அடிப்படையிலான ஏற்றுமதியின் செயலாற்றம் பின்னிணைப்பு அட்டவணை 81 மற்றும் 82இல் வெளியிடப்பட்டுள்ளது.

2017இல் அடிப்படை உலோக உற்பத்திகளின் இறக்குமதி மீதான செலவினமும் ஐ.அ.டொலர் 629 மில்லியனுக்கு 37.8 சதவீதத்தினால் அதிகரித்து இரும்பு மற்றும் உருக்கின் பாரியளவு இறக்குமதிகளைப் பிரதிபலித்தது. கோதுமையின் சராசரி இறக்குமதி விலைகள் குறைவடைந்த போதும், கோதுமை மற்றும் சோளம் மீதான செலவினம் 2017இல் ஐ.அ.டொலர் 357 மில்லியனுக்கு 43.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு கோதுமையின் உயர்ந்த இறக்குமதி அளவுகளே காரணமாகும். மேலும், 2017இல் உணவு தயாரிப்புக்கள் மீதான இறக்குமதிச் செலவினமும் உயர்வடைந்தமைக்கு, உள்நாட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்தி குறைவடைந்தமை மற்றும் தாவர எண்ணெய் இறக்குமதி மீது விதிக்கப்பட்டிருந்த இறக்குமதித் தீர்வை குறைக்கப்பட்டமை என்பனவற்றின் விளைவாக ஏற்பட்ட உயர்ந்த கேள்வியின் காரணமாக தாவர எண்ணெய் இறக்குமதிகள் 75.6 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, வேளாண்மை உள்ளீடுகள், புடவை மற்றும் புடவைப்பொருட்கள் மற்றும் பிளாத்திக்கு மற்றும் அவற்றுடன் தொடர்பான பொருட்கள் என்பனவற்றின் மீதான இறக்குமதிச் செலவினங்கள் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தன.

**வளமாக்கி, இரசாயன உற்பத்திகள் மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்து இறக்குமதிச் செலவினம் மீதான அழுத்தத்தினை ஓரளவிற்குக் குறைந்தது.** 2017இல் வளமாக்கி இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 103 மில்லியனுக்கு 24.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, குறிப்பாக யூறியா மற்றும் சுப்பபொசுப்பேற்று போன்ற வளமாக்கிகளின் இறக்குமதி அளவு குறைவடைந்தமையே காரணமாக விளங்கியது. அதேவேளை, இரசாயன உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் 2.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பெரும்பாலும்

5

அட்டவணை 5.5
முக்கிய இறக்குமதிகளின் அளவு

மெ.தொ '000

| விடயம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 (அ) |
|---|---|---|---|---|---|
| **அரிசி** | **23** | **600** | **286** | **30** | **748** |
| 1ஆம் காலாண்டு | 9 | 6 | 176 | 6 | 259 |
| 2ஆம் காலாண்டு | 6 | 102 | 91 | 9 | 79 |
| 3ஆம் காலாண்டு | 4 | 145 | 9 | 6 | 160 |
| 4ஆம் காலாண்டு | 4 | 348 | 9 | 8 | 250 |
| **கோதுமை (ஆ)** | **895** | **1,179** | **1,208** | **948** | **1,250** |
| 1ஆம் காலாண்டு | 197 | 271 | 242 | 171 | 291 |
| 2ஆம் காலாண்டு | 326 | 324 | 342 | 326 | 334 |
| 3ஆம் காலாண்டு | 170 | 291 | 373 | 271 | 359 |
| 4ஆம் காலாண்டு | 201 | 292 | 251 | 179 | 265 |
| **சீனி** | **548** | **520** | **624** | **651** | **498** |
| 1ஆம் காலாண்டு | 126 | 131 | 169 | 147 | 108 |
| 2ஆம் காலாண்டு | 175 | 162 | 161 | 144 | 158 |
| 3ஆம் காலாண்டு | 118 | 152 | 156 | 179 | 101 |
| 4ஆம் காலாண்டு | 129 | 75 | 137 | 181 | 132 |
| **மசகு எண்ணெய் (ஆ)** | **1,743** | **1,824** | **1,763** | **1,685** | **1,591** |
| 1ஆம் காலாண்டு | 482 | 548 | 369 | 372 | 282 |
| 2ஆம் காலாண்டு | 545 | 365 | 355 | 456 | 376 |
| 3ஆம் காலாண்டு | 315 | 462 | 472 | 384 | 464 |
| 4ஆம் காலாண்டு | 401 | 449 | 567 | 473 | 469 |
| **சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் (ஆ)** | **2,907** | **3,385** | **3,321** | **3,885** | **4,895** |
| 1ஆம் காலாண்டு | 673 | 970 | 799 | 830 | 1,275 |
| 2ஆம் காலாண்டு | 756 | 762 | 952 | 1,163 | 1,123 |
| 3ஆம் காலாண்டு | 791 | 1,006 | 744 | 749 | 1,336 |
| 4ஆம் காலாண்டு | 687 | 647 | 826 | 1,142 | 1,161 |
| **வளமாக்கி** | **600** | **765** | **873** | **527** | **399** |
| 1ஆம் காலாண்டு | 61 | 202 | 163 | 139 | 78 |
| 2ஆம் காலாண்டு | 139 | 190 | 244 | 135 | 73 |
| 3ஆம் காலாண்டு | 187 | 95 | 189 | 126 | 129 |
| 4ஆம் காலாண்டு | 214 | 277 | 277 | 127 | 119 |

(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டது

*மூலங்கள்:* இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை
வரையறுக்கப்பட்ட செரண்டிப் (தனியார்) மா ஆலை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி



அனைத்துத் துணை வகைகளிலும் ஏற்பட்ட குறைவு காரணமாக அமைந்த வேளையில், கனிப்பொருள் உற்பத்திகளின் இறக்குமதி மீதான செலவினம் 4.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு சீமெந்து சூளைக்கற்களின் இறக்குமதிகளில் காணப்பட்ட சுருக்கம் காரணமாக அமைந்தது.

**2017இல் நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 4,503 மில்லியனுக்கு 4.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உணவு மற்றும் குடிபானங்கள் உயர்ந்தளவு இறக்குமதிகளே காரணமாகும்.** உணவு மற்றும் குடிபானம் மீதான இறக்குமதிச் செலவினம் 13.1 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 1,841 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு அரிசி இறக்குமதியே காரணமாகும். அரிசியின் சராசரி இறக்குமதி விலைகளில் குறைப்புக்கள் பதிவுசெய்யப்பட்ட போதும், 2017இல் அரிசி இறக்குமதிகள் மீதான செலவினம் 2016இன் ஐ.அ.டொலர் 13 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 301 மில்லியனுக்குக் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. அரிசி இறக்குமதியில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பு, முன்னைய இரண்டு பயிர்ச்செய்கை காலங்களில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகளின் காரணமாக தீவிரமடைந்த உள்நாட்டுச் சந்தையின் பற்றாக்குறையினைப் பூர்த்தி செய்வதற்காக அரிசி இறக்குமதி மீது விதிக்கப்பட்ட சிறப்புப் பண்டத் தீர்வை குறைக்கப்பட்டமையின் தாக்கத்தினைப் பிரதிபலிப்பதாக இருந்தது. இதன்படி, இறக்குமதிச் செய்யப்பட்ட அரிசியின் அளவு 2016இல் பதிவுசெய்யப்பட்ட 30 மில்லியன் கி.கிறாம்களிலிருந்து 2017இல் 748 மில்லியன் கி.கிறாம்களுக்குக் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. மேலும், பாற்பண்ணை உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினமும் 2017இல் ஐ.அ.டொலர் 316 மில்லியனுக்கு 26.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பால்மாவின் மீது உறப்பட்ட உயர்ந்த செலவினமே முக்கிய காரணமாகும். பால்மாவின் இறக்குமதி அளவில் சிறிதளவு குறைப்புக் காணப்பட்ட போதும் பால்மா இறக்குமதிகள் மீதான செலவினம் 27.6 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 294 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு அனைத்து முக்கிய உற்பத்தி நாடுகளினதும் பாற்பண்யை உற்பத்திகளின் மட்டுப்படுத்தப்பட்ட வழங்கல்களின் காரணமாக பால்மா இறக்குமதிகளின் விலைகள் உயர்வடைந்தமையே காரணமாகும். மேலும், இவ்வாண்டுப்பகுதியில் பழவர்க்கங்கள், எண்ணெய் மற்றும் கொழுப்பு என்பன மீதான இறக்குமதிச் செலவினம் முறையே 14.9 சதவீதத்தினாலும் 28.1 சதவீதத்தினாலும் அதிகரித்தன. எனினும், சீனி இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 256 மில்லியனுக்கு 25.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை சீனியின் சராசரி இறக்குமதி விலைகள் மற்றும் அளவு என்பனவற்றின் வீழ்ச்சியின் இணைந்த தகாகமே காரணமாகும். மேலும், 2017இல் வாசனைத்திரவியங்கள், கடலுணவு மற்றும் குடிபானம் என்பனவற்றின் இறக்குமதி மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தது.

**2017இல் உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 2,661 மில்லியனுக்கு 1.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இவ்வகையின் கீழான பெரும்பாலான இறக்குமதிகள் குறைவடைந்தமையே காரணமாகும்.** தனிப்பட்ட உந்து ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 773 மில்லியனுக்கு 2.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு உந்து ஈருருளிகள், அதிகரிப்புக் காணப்பட்ட போதும், உந்து ஊர்திகளின் இறக்குமதியில் பதிவுசெய்யப்பட்ட 16.2 சதவீதம் கொண்ட குறைப்பே முக்கிய காரணமாகும். 2017இல் இறப்பர் உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 94 மில்லியனுக்கு 15.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு, அனைத்து துணை வகைகளினதும் குறிப்பாக டயர் மற்றும் டியூப் என்பனவற்றின் குறைந்த இறக்குமதிகளே காரணமாகும். மேலும், இவ்வாண்டுப்பகுதியில் வீட்டுச்சாதனங்கள் (4.6 சதவீதம்),


அழகுச்சாதனங்கள் மற்றும் குளியலறைப்பொருட்கள் (10.8 சதவீதம்) மற்றும் மருத்துவ, மருந்தாக்கல் உற்பத்திகள் (1.1 சதவீதம்) என்பனவற்றின் மீதான செலவினத்தில் சுருக்கங்கள் பதிவுசெய்யப்பட்டன. மாறாக, 2017இல் தொலைத்தொடர்பூட்டல் கருவிகள், வீட்டு உபயோக தளபாடப்பொருட்கள் மற்றும் ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தது.

**2017இல் முதலீட்டுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்து பொறிகள் மற்றும் கருவிகளின் இறக்குமதிகள் குறைவடைந்தமையினைப் பிரதிபலித்தது.** மொத்த இறக்குமதிச் செலவினத்தில் ஏறத்தாழ 23 சதவீதத்திற்கு வகைகூறும் முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2017இல் ஐ.அ.டொலர் 4,895 மில்லியனுக்கு 1.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பொறிகள் மற்றும் சாதனங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 2,621 மில்லியனுக்கு 4.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமையானது வேளாண்மை மற்றும் புடவைக் கைத்தொழிலுடன் தொடர்பான பொறிகள், மின்னியல் உந்திகள் மற்றும் மின் உருவாக்கிகள், பொறிகள் மற்றும் கருவிகளின் உதிரிப்பாகங்கள் மற்றும் வெப்ப வலு உருவாக்கிகள் என்பனவற்றில் ஏற்பட்ட குறைப்பினைக் குறிப்பிடத்தக்களவிற்கு பிரதிபலித்தது எனினும், கட்டடப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2017இல் ஐ.அ.டொலர் 1,591 மில்லியனுக்கு 1.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இரும்பு மற்றும் உருக்கின் உயர்ந்த இறக்குமதிகளே முக்கிய காரணமாகும். அதேவேளை, போக்குவரத்துச் சாதனங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 675 மில்லியனுக்கு 1.8 சதவீதத்தினால் அதிகரித்தது.

### 5.3.3 வர்த்தக நிலுவை

**வர்த்தக நிலுவையில் காணப்பட்ட பற்றாக்குறை 2017இல் விரிவடைந்தமைக்கு ஏற்றுமதி வருவாய்களை விஞ்சி அதிகரித்த இறக்குமதிகள் மீதான செலவினத்தின் உயர்ந்த அதிகரிப்புக்களே காரணமாகும்.** மோசமான வானிலை நிலைமைகளின் காரணமாக உறப்பட்ட உயர்ந்த இறக்குமதிச் செலவினத்தின் காரணமாக இவ்வாண்டின் தொடக்கப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்தது. எனினும், ஏற்றுமதிகளிலிருந்தான உயர்ந்த வருவாய்களின் காரணமாக ஆண்டின் பின்னரைப்பகுதியில் வர்த்தக நிலுவையில் காணப்பட்ட விரிவாக்கம் குறைவடைந்து முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட+ வசதி மீண்டும் கிடைத்தமையின் சாதகமான தாக்கத்தினைப் பிரதிபலித்தது. இதன் விளைவாக, 2017இல் வர்த்தகப் பற்றாக்குறை 2016இன் ஐ.அ.டொலர் 8,873 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 9,619 மில்லியனுக்கு விரிவடைந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வர்த்தகப் பற்றாக்குறை 2016இன் 10.9 சதவீதத்திலிருந்து 11.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

வரைபடம் 5.5
ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் வர்த்தக நிலுவை




*மூலம்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி


### 5.3.4 வர்த்தக மாற்று விகிதம்

**ஏற்றுமதி விலைச் சுட்டெண், இறக்குமதி விலைச் சுட்டெண்ணிலும் பார்க்க உயர்ந்த வீதத்தில் அதிகரித்தமையின் காரணமாக 2017இல் இலங்கையின் வர்த்தக மாற்று விகிதம் மேம்பட்டது.** 2017இல் பன்னாட்டுச் சந்தையில் பண்ட விலைகள் உயர்வடைந்தமையானது ஏற்றுமதி விலைச் சுட்டெண் 2.4 சதவீதத்தினால் 96.4 சுட்டெண் புள்ளிகளுக்கு அதிகரித்த வழிவகுத்த வேளையில், இறக்குமதி விலைச் சுட்டெண் 1.2 சதவீதத்தினால் 91.3 சுட்டெண் புள்ளிகளுக்கு அதிகரித்தது. இவ்வபிவிருத்திகளின் காரணமாக, வர்த்தக மாற்று விகிதம் 2016இன் 104.3 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2017இல் 105.5 சுட்டெண் புள்ளிகளுக்கு 1.2 சதவீதத்தினால் மேம்பட்டது.

**வேளாண்மை ஏற்றுமதிகளின் விலைகள் 11.9 சதவீதத்தினால் அதிகரித்தமையின் பெருமளவு காரணமாக ஒட்டுமொத்த ஏற்றுமதி விலைச் சுட்டெண் உயர்வடைந்தது.** 2017இல் தேயிலையின் ஏற்றுமதி விலைகள் 18.9 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் தெங்கு மற்றும்

5

வரைபடம் 5.6
வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகச் சுட்டெண்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## சிறப்புக்குறிப்பு 04
## பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் கீழ் பன்னாட்டு வர்த்தக புள்ளிவிபரங்களைத் தொகுத்தல்

### அறிமுகம்

இலங்கையில், பன்னாட்டு வர்த்தக புள்ளிவிபரங்கள், வர்த்தக உற்பத்திகளை வகைப்படுத்துவதற்குரிய பெயர்கள் மற்றும் இலக்கங்களின் ஓர் பன்னாட்டு தரப்படுத்தல் முறைமையாக இருக்கின்ற இணங்குவிப்பு முறைமை குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு அறிக்கையிடப்படுகின்றன. இவ்இணங்குவிப்பு முறைமைக் குறியீடானது ஒரு நாட்டினுடைய முக்கிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பொருட்களின் வகைப்படுத்தல்களுக்கு பொருத்தமான புள்ளிவிபரங்களைக் காட்டிநிற்கின்றன. இம்முறைமையானது வர்த்தக புள்ளிவிபரங்களின் பன்னாட்டு ஒப்பிடலை 6 இலக்க மட்டம் வரை செயல்படுத்தியதுடன் இணங்குவிப்பு முறைமை மாநாடானது தேசத்தின் தேவைகள் வசதிப்படுத்தலில் அவசியமான நெகிழ்ச்சித்தன்மையை பாதுகாக்கும் முகமாக 6 இலக்க மட்டங்களுக்கு அப்பால் புள்ளிவிபர விளக்கங்களை நாடுகள் அறிமுகப்படுத்துவதற்கு அனுமதிக்கின்றது.[1] மத்திய வங்கியானது இணங்குவிப்பு முறைமை மாநாட்டினால் வழிகாட்டப்படுகின்றதும் இணங்குவிப்பு முறைமை குறியீடுகளின் அடிப்படையிலுமான இணங்குவிப்பு முறைமை குறியீட்டு அடிப்படையிலும் பன்னாட்டு வர்த்தக புள்ளிவிபரங்களைத் தொகுத்து வெளியிடுகின்றது. மத்திய வங்கியானது இலங்கை சுங்கத் திணைக்களத்தின் 2010ஆம் ஆண்டின் தேசிய இறக்குமதி வழிகாட்டியை அடிப்படையாகக் கொண்டு 2011ஆம் ஆண்டில் நாட்டின் வர்த்தக கூடையை மீளவகைப்படுத்தியது.

மத்திய வங்கியானது மாதாந்த அடிப்படையில் வர்த்தக புள்ளிவிபரங்களை தொகுப்பதற்கு இலங்கை சுங்கத் திணைக்களத்திடமிருந்து இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தரவினைப் பெறுகின்றது. வர்த்தக புள்ளிவிபரங்களை தொகுக்கின்ற செயன்முறையில் மத்திய வங்கியானது, சில முக்கிய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பொருட்களுக்கு பொருத்தமானதாக தரவில் அவசியமான சீராக்கங்களைச் செய்கின்றது. இத்தகைய சீராக்கங்கள் காலத்திற்கு ஏற்றவகையில் நாட்டினுடைய வர்த்தக செயலாற்றத்தை இட்டுச்செல்வதற்கு பயனுள்ளதாக இருக்கின்ற தரவினை மிகவும் துல்லியமாக தொகுப்பதற்கு உதவுகின்றது. எனினும், இத்தகைய புள்ளிவிபரங்கள் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தின் போக்கு மற்றும் செயலாற்றம் தொடர்பான தகவல்களை வழங்குகின்ற போதிலும் வர்த்தக புள்ளிவிபரங்களின் வகைப்படுத்தலின் தற்கால முறையில் சில பற்றாக்குறைகள் குறிப்பாக பன்னாட்டு ஒப்பிடல் ரீதியானவையாகக் காணப்படுகின்றன. இலங்கையானது, ஆற்றல்மிக்க சந்தைகளை கண்டுபிடித்தல், ஏற்றுமதி அடிப்படை விரிவாக்கல், முக்கிய உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளில் நாட்டினை நிலை நிறுத்துதல், எஞ்சியிருக்கின்ற பாரிய தேவைப்பாடுகள், பன்னாட்டு சிறப்பு வாய்ந்த நடைமுறைகள் மற்றும் நியமங்கள் அடிப்படையில் தொகுக்கப்படுகின்ற, உயர்தரத்திலான தரவின் கிடைப்பனவு போன்ற பல்வேறுபட்ட கொள்கை ஆரம்ப முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடுகின்றது.

1 நாட்டின் குறிப்பிட்ட வகைப்படுத்தல்கள் அவற்றின் மட்டங்களுக்கப்பால் செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்ற வேளையில் வர்த்தக புள்ளிவிபரங்கள் ஆறு இலக்க மட்டம் வரை இணங்குவிக்கப்படுகின்றன.

### பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம்

பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தினை அடிப்படையாகக் கொண்ட வணிக வர்த்தக புள்ளிவிபரங்களின் வகைப்படுத்தலானது நாடுகள் முழுவதுமாக வர்த்தக புள்ளிவிபரத்தின் பன்னாட்டு ஒப்பீட்டலுக்காக பரந்தளவில் பயன்படுத்தப்படுகிறது. பன்னாட்டு நியமங்களை பின்பற்றுவதன் முக்கியத்துவத்தினை அங்கீகரிப்பதில் மத்திய வங்கியானது, பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியம அடிப்படையிலான வர்த்தக புள்ளிவிபரங்களின் தொகுப்பை ஆரம்பித்தது. இது, ஐக்கிய நாடுகள் சபையினால் பரிந்துரைக்கப்பட்ட பன்னாட்டு ரீதியாக நியமமாக்கப்பட்ட வர்த்தக புள்ளிவிபரங்கள் வகைப்படுத்தலின் ஒரு முறையாகும். பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமமானது மிகவும் துல்லியமான விற்பனை பொருள் குறிப்பிட்ட மட்டத்தில் பன்னாட்டு வர்த்தகத்தில் ஆகப்பிந்திய அபிவிருத்திகளின் நம்பத்தகுந்த தோற்றத்தினை வழங்குவதுடன் பன்னாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்களின் ஒப்பிடலுக்கும் உதவுகின்றது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தில் அடிக்கடி திருத்தங்கள் செய்யப்படுகின்றமை குறையத் தொடங்கியதிலிருந்து பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தலானது பன்னாட்டு வணிக வர்த்தகத்தில் நீண்ட காலப் போக்கினை ஆய்வுசெய்வதற்குப் பயன்படுத்த கூடியதாகவுள்ளது. எனவே, பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமமானது அதிக விஞ்ஞான ரீதியான மற்றும் வலுவான பகுப்பாய்வினை வசதிப்படுத்துவதாக இருப்பதுடன் இத்தகைய புள்ளிவிபரங்கள் கொள்கை உருவாக்குநர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயனுள்ளதாகவும் காணப்படுகின்றது.

### பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் கட்டமைப்பு

முதலாவது பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியம முறைமை 1950ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் வர்த்தகத்தின் தொகுதியில் அதிகரிப்பு மற்றும் மாற்றங்களானது புவியியல் மற்றும் பண்டங்களிலும் இடம்வகித்ததுடன் தொழில்நுட்ப மாற்றங்கள் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் பல்வேறுபட்ட திருத்தங்களுக்கு இட்டுச் செல்கின்றது. தற்காலத்தில், 2006இல் வெளியிடப்பட்ட 4ஆவது திருத்தமானது பன்னாட்டு ஒப்பிடல் மற்றும் வர்த்தக புள்ளிவிபரத்தின் பகுப்பாய்வுப் பெறுமானத்தை உறுதி செய்வதற்கு நாடுகளால் பயன்படுத்தப்படுகின்றது.

5

பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்திற்கு அமைவாக விரிவான பொருளாதார பகுப்பாய்வினை எளிதாக்கும் முகமாக, வர்த்தகப்படுத்தப்படுகின்ற உற்பத்திகள் தங்களுடைய மூலப்பொருட்கள் மற்றும் பௌதீக பண்புகள் சார்ந்து மட்டுமல்லாது, பொருளாதார செயற்பாடுகள் மற்றும் செயன்முறை நிலைகளுக்கு ஏற்பவும் வகைப்படுத்தப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு, பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் திருத்தம் 4 ஆனது ஒற்றை இலக்கக் குறியீடு 67 பிரிவுகள் (இரண்டு-இலக்க குறியீடு), 262 குழுக்கள் (மூன்று - இலக்கக் குறியீடு), 1,023 உபகுழுக்கள் (நான்கு - இலக்க குறியீடு) மற்றும் 2,970 அடிப்படை தலைப்புக்கள் (ஐந்து - இலக்க குறியீடு) ஆக குறிப்பிடப்பட்ட 10 பிரிவுகளைக் கொண்டுள்ளது. எனவே, பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமமானது வர்த்தகக் கூடையொன்றில் பொருட்களை வழங்குதலில் ஓர் படிநிலைக் கட்டமைப்பினை பின்பற்றுகின்றது.

பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் வகைப்படுத்தல் திட்டமானது அனைத்து வர்த்தகப்படுத்தப்படுகின்ற பொருட்கள் மற்றும் அவற்றின் படிநிலை கட்டமைப்பை வகைப்படுத்தல் ஆ 4.1 அட்டவணையில் கொடுக்கப்படுகின்றது.

### அட்டவணை சி.கு.4.1
### பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் - திருத்தம் 4இன் வகைப்படுத்தல் திட்டம்

| பகுதி இல. | பகுதி | பிரிவுகளின் எண்ணிக்கை | குழுக்களின் எண்ணிக்கை | உப குழுக்களின் எண்ணிக்கை | அடிப்படை தலைப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 0 | உணவு மற்றும் வாழும் விலங்குகள் | 10 | 36 | 132 | 335 |
| 1 | குடிப்பானங்கள் மற்றும் புகையிலை | 2 | 4 | 11 | 21 |
| 2 | எரிபொருட்கள் தவிர்ந்த பயன்படுத்தப்படாத பொருட்கள், உண்ணத்தகாதவை | 9 | 36 | 115 | 239 |
| 3 | கனியவள எரிபொருட்கள், மசகெண்ணெய் மற்றும் அவை சார்ந்த பொருட்கள் | 4 | 11 | 22 | 32 |
| 4 | விலங்கு மற்றும் மரக்கறி எண்ணெய்கள், கொழுப்புக்கள் மற்றும் மெழுகுகள் | 3 | 4 | 21 | 41 |
| 5 | இரசாயனங்கள் மற்றும் அவை சார்ந்த தயாரிப்புக்கள் (வே.கு.) | 9 | 34 | 132 | 467 |
| 6 | பொருட்களால் பிரதானமாக வகைப்படுத்தப்பட்ட உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் | 9 | 52 | 229 | 767 |
| 7 | இயங்திரங்கள் மற்றும் போக்குவரத்து கருவிகள் | 9 | 50 | 217 | 642 |
| 8 | ஏனைய உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் | 8 | 31 | 140 | 420 |
| 9 | பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின்படி வகைபடுத்தப்படாத பொருட்கள் மற்றும் பரிமாற்றங்கள் | 4 | 4 | 4 | 6 |
| **பிரிவுகள், குழுக்கள், உப குழுக்கள் மற்றும் அடிப்படை தலைப்புக்கள் (பொருட்கள்)** | | 67 | 262 | 1,023 | 2,970 |

மூலம் : பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் திருத்தம் 4, (2006) ஐக்கிய நாடுகள்

வே.கு. வேறெங்கும் குறிப்பிடப்படாதவை

### அட்டவணை சி.கு.4.2
### பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் - திருத்தம் 4இன் மரபு ரீதியான அமைப்பின் உதாரணம்

| மட்டம் | குறிப்பு | விபரம் |
|---|---|---|
| பகுதி | 0 | உணவு மற்றும் வாழும் விலங்குகள் |
| பிரிவு | 07 | கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத் திரவியங்கள் மற்றும் அவற்றின் உற்பத்திகள் |
| தொகுதி | 074 | தேயிலை மற்றும் தேயிலை போன்ற குடிபானம் |
| உப தொகு. | 074.1 | தேயிலை சுவையூட்டப்பட்டதோ அல்லாததோ |
| அடிப்படைத் தலைப்பு | 074.11 | பச்சைத் தேயிலை (புளிப்பேற்றாதது), 3 கிலோகிராமிற்கு மேலதிகமாகாதவாறு கொண்ட உட்பொருட்களின் உடனடியான கட்டுதல் |
| | 074.12 | ஏனைய பச்சைத் தேயிலை (புளிப்பேற்றாதது), சுவையூட்டப்பட்டதோ அல்லாததோ |
| | 074.13 | கறுத்தத் தேயிலை (புளிப்பேற்றியது) மற்றும் பகுதியளவில் புளிப்பேற்றிய தேயிலை, 3 கிலோகிராமிற்கு மேலதிகமாகாதவாறு கொண்ட உட்பொருட்களின் உடனடியான கட்டுதல், சுவையூட்டப்பட்டதோ அல்லாததோ |
| | 074.14 | ஏனைய கறுத்தத் தேயிலை (புளிப்பேற்றியது) மற்றும் பகுதியளவில் புளிப்பேற்றிய தேயிலை, சுவையூட்டப்பட்டதோ அல்லாததோ |

மூலம் : பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் திருத்தம் 4, (2006) ஐக்கிய நாடுகள்

வே.கு. வேறெங்கும் குறிப்பிடப்படாதவை

அட்டவணை ஆ 4.2 இல் படிநிலை கட்டமைப்புக்கு உதாரணமாக, இலங்கையின் பிரதான வேளாண்மை ஏற்றுமதிப் பொருளாக விளங்கும் நல்ல "தேயிலை"யைக் குறிப்பிடலாம். அதற்கமைவாக உணவு மற்றும் கால்நடைக்கு கீழ் 4ஆம் மட்டத்தின் துணைக் குழுவாக (தேயிலை, வாசனைப்படுத்தப்பட்ட அல்லது படுத்தப்படாத) இது எடுத்துக்காட்டுகின்றது. 5ஆவது மட்டத்தில் அதே பொருளானது ஒரே உற்பத்தியின் வெவ்வேறு வடிவங்களினை பிரதிபலிக்கின்ற அடிப்படை தலைப்புக்கள் 4இற்கு கீழே மேலும் வகைப்படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், தற்போதைய தேயிலை ஏற்றுமதி வர்த்தக வகைப்படுத்தல் வேளாண்மை ஏற்றுமதிகளுக்கு கீழே வகைப்படுத்தப்படுகின்றது.

#### வர்த்தக தரவின் ஒப்பீடு


மத்திய வங்கியினால் நடைமுறையில் பின்பற்றப்படுகின்ற வகைப்பாட்டிற்கு அமைவாக வர்த்தக புள்ளிவிபரங்கள் நான்கு மட்டங்களுக்கு கீழ் வகைப்படுத்தப்படுகின்றதுடன் அங்குள்ள ஒவ்வொரு பொருளும் முக்கிய வகை, சிறிய வகை, பொருள் மற்றும் உபபொருள் என அடையாளப்படுத்தப்படுகின்றன. பெறுமதிகூட்டல் மட்டத்தின் அடிப்படையில் அண்ணளவாக 8,000 ஏற்றுமதிப் பொருட்கள் முக்கிய வகைகளின் கீழ் வேளாண்மை ஏற்றுமதிகள், கைத்தொழில் ஏற்றுமதிகள், கனிய ஏற்றுமதிகள் மற்றும் வகைப்படுத்தாத ஏற்றுமதிகள் என வகைப்படுத்தப்படுகின்றன. மேலதிக பெறுமதியின் குறைந்த மட்டங்களுடன் ஒப்பிடுகையில் அல்லது முதன்மை வடிவத்தில் ஏற்றுமதி பொருட்கள் வேளாண்மை அல்லது கனிய ஏற்றுமதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றதுடன், அதேசமயம் மேற்கூறப்பட்ட பொருட்கள் மேலதிக பெறுமதியின் குறிப்பிடத்தக்க மட்டத்துடன் கைத்தொழில் ஏற்றுமதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றது. இறக்குமதியுடன் தொடர்புடைய

கிட்டத்தட்ட 13,000 இறக்குமதிப் பொருட்களானது நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள் மற்றும் வகைப்படுத்தாத பொருட்கள் என பிரதான இறக்குமதி வகைப்படுத்தலின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றதுடன் வகைப்படுத்தலுக்கான பிரதான அடிப்படையாக நிலவுகின்ற தீர்வை கட்டமைப்பு காணப்படுகின்றதுடன் அவை அத்தியாவசியப் பொருட்களாக கருதப்படுவதுடன் முதலீட்டு பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் மீது பூச்சிய வீதம் பிரயோகிக்கின்ற பொழுது நுகர்வுப் பொருட்களின் மிகை இறக்குமதிகளை ஊக்கமிழக்கச் செய்வதற்கு நுகர்வுப் பொருட்கள் மீது உயர்தீர்வை வீதங்கள் பொதுவாகப் பிரயோகிக்கின்றது. நடுத்தர தீர்வு வீதங்கள் பிரதானமாக இடைநிலைப் பொருட்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றது. மேலதிகமாக, இடைக்கால நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட இறக்குமதி பொருட்களாக உதாரணமாக புடவைகள் மற்றும் பெற்றோலியம் வகைப்படுத்தப்படுகின்ற பொழுது இறக்குமதி செய்யப்பட்ட இறுதிப் பொருட்கள் நுகர்வுப் பொருள் ஒன்றாகவோ அல்லது முதலீட்டு பொருளாகவோ வகைப்படுத்தப்படுகின்றது. (உதாரணம் பேரூந்துக்கள் முதலீட்டுப் பொருட்களுக்குள் உள்ளடக்கப்படுகின்றதுடன் மோட்டார் ஊர்திகள் நுகர்வுப் பொருட்களாக வகைப்படுத்தப்படுகின்றது). மேலும், பெறுமதிகூட்டல் உயர் மட்ட பொருட்கள் இடைநிலை பொருட்களாக வகைப்படுத்தப்படுகின்ற பொழுது அரை செயற்பாட்டு இறக்குமதி பொருட்கள் பெறுமதிகூட்டல் மட்டத்திற்கு இணங்க வகைப்படுத்தப்படுகின்றதுடன் அதன்மூலம் மேலதிகமாக ஒப்பீட்டளவில் குறைந்த பெறுமதியை கொண்டிருக்கின்ற இறக்குமதிப் பொருட்கள் இடைநிலைப் பொருட்களாக வகைப்படுத்தப்படுகின்றன. மத்திய வங்கியானது கொள்கை வடிவமைக்கும் நோக்கத்திற்காக பங்குதாரர்களின் நன்மை மற்றும் பொருத்தமான பகுப்பாய்வுகளை நடாத்துவதற்கும் வர்த்தக புள்ளிவிபர வெளியீட்டில் இவ்வகைப்பாட்டினை நிறுவுகின்றது. எனினும், பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் அடிப்படை முறைமையின்படி, பொருள் மற்றும் பௌதிக தயாரிப்புக்கள், செயற்பாட்டு நிலைகள், சந்தை நடைமுறைகள் மற்றும் உற்பத்திகளின் பயன்பாடுகள் உலக வர்த்தகத்தின் அடிப்படையில் பண்டங்களின் முக்கியத்துவம் மற்றும் தொழில்நுட்ப மாற்றங்கள் என்பவற்றின் அடிப்படையில் பொருட்கள் பத்து வகைக்குள் பிரதானமாக வகைப்படுத்தப்படுகின்றன. அதற்கமைவாக இலங்கை வணிக வர்த்தக புள்ளிவிபரங்களின் பன்னாட்டு ஒப்பீட்டை இயலுமைப்படுத்த இணக்குவிப்பு குறியீட்டின் அடிப்படையில் தொகுக்கப்படுகின்ற நடைமுறை வர்த்தக புள்ளிவிபரங்களுக்கு பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் அடிப்படையில் மீள்வகைப்படுத்த முடியும்.

தற்போதைய வகைப்படுத்தல் மற்றும் பன்னாட்டு வர்த்தக வகைப்பாட்டு நியமத்திற்கு இடையிலான தொடர்பின் ஓர் வரைபு பிரதிநிதித்துவம் உரு ஆ. 4.1 இல் வழங்கப்பட்டுள்ளது.

உருவம் சி.கு. 4.1

**நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் மற்றும் மத்திய வங்கியின் வகைப்படுத்தலுக்கிடையிலான தொடர்பு**




வே.கு. வேறெங்கும் குறிப்பிடப்படாதவை

இரண்டு வகைப்பாடுகளினதும் செயன்முறைகள் வேறுபட்டதாக இருந்தாலும் கூட மொத்த ஏற்றுமதி மற்றும் இறக்குமதி எண்ணிக்கைகள் தொகுப்பின் இறுதிநிலையில் சமனாக இருக்க முடியும். எனவே இத்தகைய மீள் வகைப்படுத்தலின் காரணமாக பெறுமதியான எந்த தகவல்களும் இழக்கப்படவில்லை. பன்னாட்டு வர்த்தக வகைப்பாட்டு நியதியின் கீழ் புள்ளிவிபரங்கள் 2017 வருடாந்த அறிக்கையில் தற்போது வெளியிடப்படுகின்றது. (புள்ளிவிபர பின்னிணைப்பு அட்டவணைகள் 68, 69, 81 மற்றும் 82). மத்திய வங்கியானது அதன் முக்கிய வெளியீடுகள் மற்றும் தரவுத்தளங்களில் இத்தகைய புள்ளிவிபரங்களை அணுகுதல் மற்றும் வெளியீடுதல் ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு வர்த்தக புள்ளிவிபரங்களைத் தொகுப்பதில் தொடர்ந்து முயற்சிப்பதுடன் உள்நாட்டு கொள்கை நோக்கத்திற்காக வர்த்தக புள்ளிவிபரங்களைத் தொகுப்பதற்கும் பரப்பவதற்கும் முக்கியமாக இணக்குவிப்புக் குறியீட்டை பயன்படுத்தி இருக்கின்றபொழுது பகுப்பாய்வு கருவியாக பன்னாட்டு வர்த்தக வகைப்பாட்டு நியமம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

**உசாத்துணை**

பன்னாட்டு வர்த்தக வகைப்பாட்டு நியமம் - திருத்தம் 4 (2006) ஐக்கிய நாடுகள்

5

சிறுவேளாண்மை உற்பத்திகள் இரண்டிற்குமான ஏற்றுமதி விலைச் சுட்டெண்கள் 7.1 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், வாசனைத்திரவியங்களுக்கான ஏற்றுமதி விலைச் சுட்டெண் வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. அதேவேளை கைத்தொழில் ஏற்றுமதிகள் தொடர்பான ஏற்றுமதி விலைச் சுட்டெண் 2017இல் 0.3 சதவீதத்தினால் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு, போக்குவரத்துச் சாதனங்கள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், பொறிகள் மற்றும் எந்திரசாதனங்கள் மற்றும் பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்களின் ஏற்றுமதி விலைச் சுட்டெண்களில் ஏற்பட்ட குறைப்பே முக்கியமாக வழிவகுத்தது. எனினும், பெற்றோலிய உற்பத்திகளுக்கான விலைச் சுட்டெண் இறப்பர் உற்பத்திகள் (3.6 சதவீதம்), மட்பாண்ட உற்பத்திகள் (1.8 சதவீதம்), உணவு, குடிபானம் மற்றும் புகையிலை (1.8 சதவீதம்) என்பனவற்றின் ஏற்றுமதிக்கான விலைச்சுட்டெண்களுடன் சேர்ந்து 23.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. 2017இன் முதலரைப்பகுதியில் புடவை மற்றும் ஆடைகள் தொடர்பான விலைச் சுட்டெண் 1.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த போதும் ஆண்டின் இறுதியில் இச்சுட்டெண் 0.9 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பிரதிபலித்தது.

**2017ஆம் ஆண்டுப்பகுதியில் இறக்குமதி விலைச் சுட்டெண் அதிகரித்தமைக்கு இடைநிலைப்பொருட்கள் வழியமைத்த வேளையில் நுகர்வுப்பொருட்கள் மற்றும் முதலீட்டுபொருட்களின் இறக்குமதி விலைச் சுட்டெண்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே காணப்பட்டது.** 2017இல் இடைநிலைப்பொருட்களுக்கான இறக்குமதி விலைச் சுட்டெண் 4.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு எரிபொருளுக்கான இறக்குமதி விலைச் சுட்டெண்ணில் 18.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பே தூண்டுதலாக அமைந்தது. மேலும், இடைநிலைப்பொருள் வகைக்குள் பல துணை வகைகளுக்கான இறக்குமதி விலைச்

அட்டவணை 5.6

வர்த்தகச் சுட்டெண்கள் (அ)

2010 = 100

| வகை | பெறுமதிச் சுட்டெண் | | | அளவுச் சுட்டெண் | | | அலகு பெறுமதிச் சுட்டெண் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் % | 2016 | 2017 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் % | 2016 | 2017 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் % |
| ஏற்றுமதிகள் | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **100.9** | **120.0** | **19.0** | **90.8** | **96.5** | **6.3** | **111.2** | **124.3** | **11.9** |
| தேயிலை | 88.1 | 106.2 | 20.5 | 86.2 | 87.4 | 1.3 | 102.2 | 121.6 | 18.9 |
| இறப்பர் | 18.9 | 22.5 | 19.1 | 27.2 | 31.4 | 15.5 | 69.4 | 71.6 | 3.1 |
| தெங்கு | 220.9 | 210.0 | -4.9 | 174.1 | 154.5 | -11.3 | 126.9 | 136.0 | 7.1 |
| வாசனைப் பொருட்கள் | 153.0 | 196.1 | 28.1 | 100.3 | 132.2 | 31.8 | 152.6 | 148.3 | -2.8 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 159.7 | 194.2 | 21.6 | 149.6 | 169.8 | 13.5 | 106.8 | 114.4 | 7.1 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **130.3** | **140.2** | **7.6** | **144.9** | **156.3** | **7.9** | **89.9** | **89.7** | **-0.3** |
| புடவைகளும் ஆடைகளும் | 145.6 | 150.0 | 3.0 | 127.1 | 129.8 | 2.1 | 114.6 | 115.6 | 0.9 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 109.0 | 165.0 | 51.4 | 185.8 | 228.5 | 23.0 | 58.6 | 72.2 | 23.1 |
| இறப்பர் உற்பத்திகள் | 137.9 | 150.1 | 8.8 | 104.2 | 109.4 | 5.0 | 132.4 | 137.2 | 3.6 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **119.7** | **142.4** | **19.0** | **88.9** | **105.6** | **18.8** | **134.6** | **134.8** | **0.2** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **119.6** | **131.8** | **10.2** | **127.0** | **136.7** | **7.6** | **94.1** | **96.4** | **2.4** |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **174.5** | **182.0** | **4.3** | **156.5** | **167.4** | **6.9** | **111.5** | **108.7** | **-2.5** |
| உணவும் குடிப்பானங்களும் | 123.0 | 139.2 | 13.1 | 124.1 | 146.7 | 18.2 | 99.1 | 94.8 | -4.3 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 233.7 | 231.1 | -1.1 | 193.8 | 191.0 | -1.4 | 120.6 | 121.0 | 0.3 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **122.6** | **142.1** | **15.9** | **142.5** | **158.6** | **11.3** | **86.0** | **89.6** | **4.1** |
| எரிபொருள் | 81.6 | 112.7 | 38.2 | 129.5 | 150.7 | 17.4 | 63.0 | 74.8 | 18.7 |
| வளமாக்கி | 57.0 | 42.8 | -24.9 | 68.6 | 53.7 | -21.7 | 83.1 | 79.7 | -4.1 |
| இரசாயன உற்பத்திகள் | 164.7 | 160.5 | -2.5 | 163.4 | 161.6 | -1.1 | 100.8 | 99.3 | -1.5 |
| கோதுமை மற்றும் சோளம் | 93.9 | 134.4 | 43.1 | 92.7 | 134.0 | 44.5 | 101.3 | 100.3 | -1.0 |
| புடைவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 149.5 | 150.6 | 0.7 | 138.2 | 137.6 | -0.4 | 108.2 | 109.4 | 1.1 |
| பிளாத்திக்குகள் மற்றும் அதனுடன் தொடர்புடையவை | 146.1 | 149.6 | 2.4 | 155.7 | 160.5 | 3.1 | 93.8 | 93.2 | -0.7 |
| வைரங்கள், அருமையான கற்கள் மற்றும் உலோகங்கள் | 136.2 | 204.6 | 50.1 | 155.0 | 232.2 | 49.8 | 87.9 | 88.1 | 0.2 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **180.8 (இ)** | **177.7** | **-1.7** | **208.9 (இ)** | **208.7** | **-0.1** | **86.5 (இ)** | **85.1** | **-1.6** |
| கட்டடப் பொருட்கள் | 190.9 | 193.7 | 1.4 | 206.2 | 220.1 | 6.8 | 92.6 | 88.0 | -5.0 |
| போக்குவரத்துக் கருவிகள் | 111.9 (இ) | 113.9 | 1.8 | 110.9 (இ) | 112.8 | 1.8 | 100.9 (இ) | 101.0 | ... |
| பொறியும் கருவியும் | 204.9 | 195.9 | -4.4 | 253.9 | 244.2 | -3.8 | 80.7 | 80.2 | -0.6 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 254.0 | 234.1 | -7.8 | 262.0 | 224.6 | -14.3 | 96.9 | 104.2 | 7.6 |
| **மொத்த இறக்குமதிகள்** | **143.1 (இ)** | **156.5** | **9.4** | **158.5 (இ)** | **171.3** | **8.1** | **90.2 (இ)** | **91.6** | **1.2** |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | | | | | | **104.3 (இ)** | **105.2** | **1.2** |

(அ) ஐ.அ.டொலர் நியதிகளில்
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி.
தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி


5

சுட்டெண்கள் ஊர்திகள் மற்றும் பொறிகளின் உதிரிப்பாகங்கள் தயாரிக்கப்படாத புகையிலை மற்றும் அடிப்படை உலோகங்கள் என்பன உள்ளிட்ட இடைநிலைப்பொருட்களின் வகை 2017இல் அதிகரித்தது. மாறாக, நுகர்வுப்பொருட்களுக்கான இறக்குமதி விலைச்சுட்டெண் 2.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து உணவல்லா நுகர்வுப்பொருட்களில் சிறிதளவு அதிகரிப்புக் காணப்பட்ட போதும் உணவு மற்றும் குடிபானங்களில் காணப்பட்ட விலைக் குறைப்பினைப் பிரதிபலித்தது. உணவு மற்றும் குடிபான வகையில் அரிசி, வாசனைத்திரவியங்கள், காய்கறிகள், குடிபானம் மற்றும் சீனி என்பனவற்றிற்கான இறக்குமதி விலைச் சுட்டெண் வீழ்ச்சியடைந்த வேளையில், பாற்பண்ணை உற்பத்திகள், இக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தன. கட்டடப்பொருட்கள், பொறிகள் மற்றும் சாதனங்களில் ஏற்பட்ட விலைக் குறைப்புக்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் முதலீட்டுப் பொருட்களுக்கான இறக்குமதி விலைச் சுட்டெண் 2017இல் 1.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

### 5.3.5 வர்த்தகத்தின் போக்கு


**2017இல் இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளராக இந்தியாவும் அதனைத் தொடர்ந்து சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்காவும் விளங்கி இலங்கையுடனான மொத்த வர்த்தகத்தில் ஏறத்தாழ 40 சதவீதத்திற்குப் பங்களித்தன.** இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான வர்த்தகத்தின் பெறுமதி 2017இல் ஐ.அ.டொலர் 5 பில்லியனையும் விஞ்சிக் காணப்பட்டதுடன் இலங்கையின் மொத்த வெளிநாட்டு வர்த்தகத்தில் 16.1 சதவீதத்தில் பங்கினைப் பதிவுசெய்தன. சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்காவுடனான வர்த்தகம் முறையே ஐ.அ.டொலர் 4 பில்லியனையும் ஐ.அ.டொலர் 3 பில்லியனையும் விஞ்சிக் காணப்பட்டன. மேலும், 2017இல் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம் மற்றும் யப்பான் என்பனவற்றுடனான வர்த்தகம் ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சியது. இந்தியா, சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம், யப்பான் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பவற்றுடனான வர்த்தகம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த வேளையில் சீனா மற்றும் ஐக்கிய இராச்சியத்துடனான வர்த்தகம் வீழ்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டுகளினால் அவதானிக்கப்பட்ட வர்த்தக மாதிரிகளின் தொடர்ச்சியாக, மேலத்தேய நாடுகள் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பன இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான முக்கிய நாடுகளாக விளங்கிய வேளையில் ஆசியா குறிப்பாக இலங்கையின் இறக்குமதிக்கான முக்கிய நாடுகளாக விளங்கின.

வரைபடம் 5.7
நாடுகளின்படி ஏற்றுமதிகள்




*மூலம்:* இலங்கைச் சுங்கம்

வரைபடம் 5.8
நாடுகளின்படி இறக்குமதிகள்




*மூலம்:* இலங்கைச் சுங்கம்

**ஐக்கிய அமெரிக்கா இலங்கை ஏற்றுமதிகளின் தனிப்பெரும் வாங்குநர் நாடாகத் தொடர்ந்தும் விளங்கி மொத்த ஏற்றுமதிளில் ஏறத்தாழ 25.6 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியமும் (9.1 சதவீதம்) இந்தியாவும் (6.1 சதவீதம்) விளங்கின.** 2017இல் ஐக்கிய அமெரிக்காவிற்கான மொத்த ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 2909 மில்லியனுக்கு 3.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், ஆடைகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் கடலுணவுகள் ஐக்கிய அமெரிக்காவிற்கான மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 85 சதவீதத்திற்கு வகைகூறின. இலங்கையின் மிகப் பெரிய ஆடை ஏற்றுமதி நாடு என்ற ரீதியில் ஐக்கிய அமெரிக்கா மொத்த ஆடை ஏற்றுமதிகளில் 45.2 சதவீதத்திற்கு வகைகூறி 2017இல் ஐ.அ.டொலர் 2,140 மில்லியனை அடைந்தது. இரண்டாவது பெரிய ஏற்றுமதி நாடான ஐக்கிய இராச்சியத்திற்கான ஏற்றுமதிகள் 2017இல் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு ஆடைகள், தெங்கு உற்பத்திகள் மற்றும் இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட சுருக்கமே காரணமாகும். எனினும், 2017இல் ஐக்கிய இராச்சியத்திற்கான கடலுணவு, தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள் மற்றும் தேயிலை ஏற்றுமதிகள் அதிகரித்தன. இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான மூன்றாவது மிகப்பெரும் ஏற்றுமதிப் பங்காளரான இந்தியா, 2017இல் 24.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் வாசனைத்திரவியங்களில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே காரணமாகும். மேலும், அடிப்படை உலோகம் மற்றும் அதன் பொருட்கள், உணவு குடிபானம் மற்றும் புகையிலை, விலங்குணவு மற்றும் ஆடைகள் என்பன 2017இல் இந்தியாவிற்கான ஏற்றுமதிகள் உயர்வடைவதற்குப் பங்களித்தன. மேலும், இலங்கைக்கான நான்காவது மற்றும் ஐந்தாவது மிகப்பெரும் ஏற்றுமதி நாடுகளான ஜேர்மனிக்கும் இத்தாலிக்குமான ஏற்றுமதிகள் 2017இல் முறையே 8.1 சதவீதத்தினாலும் 21.9 சதவீதத்தினாலும் அதிகரித்தமைக்கு ஆடை ஏற்றுமதிகளில் காணப்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட திட்டம்+ வசதி மீளக்கிடைத்தமையினைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கான தடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017இல் 4.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இத்தாலி, நெதர்லாந்து, சுவீடன், ஜேர்மனி மற்றும் டென்மார்க் என்பனவற்றிலிருந்தான உயர்ந்த கேள்வி காரணமாக விளங்கி ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்தான மொத்த ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. ஆடை ஏற்றுமதிகள் ஐரோப்பிய ஒன்றியப் பிராந்தியத்திற்கான முக்கிய ஏற்றுமதி விடயங்களாகத் தொடர்ந்தும் விளங்கி ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 60.0 சதவீதத்திற்கு வகைகூறியது. மேலும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மொத்த ஏற்றுமதிகளில் 2.0 சதவீதத்திற்கு வகைகூறும் ஐரோப்பிய ஒன்றித்திற்கான கடலுணவு ஏற்றுமதிகளும் 2017இல் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்கான கடலுணவு உற்பத்திகளின் ஏற்றுமதி மீதான தடை அகற்றப்பட்டமையுடன் சேர்ந்து முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட திட்டம்+ வசதி மீளக்கிடைத்தமையும் காரணங்களாக விளங்கின. மத்திய கிழக்கு மற்றும் ருஷியாவின் நிலைமைகள் மீட்சியடைந்தமை உறுதியடைந்த எண்ணெய் விலைகளுடன் சேர்ந்தமையின் காரணமாக இந்நாடுகளிலிருந்தான இலங்கைத் தேயிலைக்கான கேள்வி 2017இல் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இதன்படி, 2017ஆம் ஆண்டுப்பகுதியில் துருக்கி, ஈராக் மற்றும் ருஷியாவிற்கான தேயிலை ஏற்றுமதி அதிகரித்து தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 32.3 சதவீதத்தினால் அதிகரிக்கப் பங்களித்தன. 2017இல் இலங்கை மத்திய கிழக்கு மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் 44.5 சதவீதத்தினை மத்திய கிழக்கிற்கும் 11.4 சதவீதத்தினை ருஷியாவிற்கும் ஏற்றுமதி செய்தது.

**2017இல் இந்தியா, இலங்கையின் மொத்தச் செலவினத்தில் குறிப்பிடத்தக்க பங்கான 21.6 சதவீதத்துடன் அதன் முக்கியமான இறக்குமதி நாடென்ற அதன் அந்தஸ்தினை மீண்டும் பெற்றுக்கொண்டது.** 2017ஆம் ஆண்டுப்பகுதியில் இந்தியாவிலிருந்தான இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 4,527 மில்லியனாக விளங்கி 18.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு பெற்றோலிய உற்பத்திகள், அரிசி, அடிப்படை உலோகம் மற்றும் கட்டடப்பொருட்களின் இறக்குமதிகளே முக்கிய காரணமாகும். அதேவேளை, இலங்கையின் இரண்டாவது பெரிய இறக்குமதி நாடான சீனாவிலிருந்தான இறக்குமதிகள், இறக்குமதிகளில் 18.9 சதவீதத்திற்கு வகைகூறி, 2017இல் ஐ.அ.டொலர் 3,955 மில்லியனுக்கு 1.0 சதவீதத்தினால் சிறிதளவிற்கு வீழ்ச்சியடைந்தது. போக்குவரத்துக் கருவிகள், பெற்றோலிய உற்பத்திகள், வளமாக்கி, அடிப்படை உலோகம், இரசாயன உற்பத்திகள் மற்றும் பொறிகள் மற்றும் சாதனங்களின் குறைந்த இறக்குமதிகள் இவ்வீழ்ச்சிக்குப் பங்களித்தன. எனினும், சீனாவிலிருந்தான புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள், தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் மற்றும் பொறிகள் மற்றும் ஊர்திகளின் உதிரிப்பாகங்கள் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தன. மூன்றாவது பெரிய இறக்குமதி நாடான ஐக்கிய அரபு எமிறேற்ஸ் இன் இறக்குமதிகள் மொத்த இறக்குமதிகளில் 8.1 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் பெற்றோலிய உற்பத்திகள், வைரங்கள், பெறுமதிமிக்க கற்கள், மற்றும் உலோகங்கள் என்பன முக்கிய இறக்குமதிகளாகத் தொடர்ந்தும் காணப்பட்டன. சிங்கப்பூர் பெற்றோலிய உற்பத்திகள், வைரங்கள், பெறுமதிமிக்க கற்கள் மற்றும் உலோகங்கள் அதேபோன்று தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் என்பனவற்றின் இறக்குமதிகளுடன் நான்காவது மிகப்பெரிய இறக்குமதி நாடாக விளங்கியது. 2017இல் யப்பானிலிருந்தான இறக்குதிகள் 9.3 சதவீதத்தினால் அதிகரித்தமையானது யப்பானை இலங்கையின் ஐந்தாவது மிகப்பெரிய இறக்குமதி நாடாக மற்றையதுடன் முக்கிய இறக்குமதிகளாக

போக்குவரத்துக் கருவிகள் அடிப்படை உலோகங்கள், இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் மற்றும் கட்டட மூலப்பொருட்கள் என்பன விளங்கின. எனினும், யப்பானிலிருந்தான முக்கிய இறக்குமதி விடயமாக அடங்கியுள்ள ஊர்திகளின் இறக்குமதி 2017இல் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு 2016இல் அறிமுகப்படுத்தப்பட்ட பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகளுக்கு பதிலிறுத்தல் காரணமாகும்.

## 5.4 நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு

### 5.4.1 பணிகளிலுள்ள வர்த்தகம்

**2017இல் பணிகளிலுள்ள வர்த்தகம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தமையின் மூலம் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிற்குத் தொடர்ந்தும் ஆதரவளித்தது.** இவ்வாண்டுப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மிதமானதாகக் காணப்பட்டதுடன் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2016இன் ஐ.அ.டொலர் 7,138 மில்லியனிலிருந்து 2017இல் 7,760 மில்லியனுக்கு 8.7 சதவீதத்தினால் அதிகரித்ததன் மூலம் போக்குவரத்து மற்றும் கணனிப் பணிகளில் காணப்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சிக்குப் பங்களித்தன. பணிகளின் இறக்குமதிக்கான அதிகரித்த கேள்வியின் காரணமாக பணிகள் கணக்கின் பேரிலான வெளிப்பாய்ச்சலும் இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 4,421 மில்லியனுக்கு 3.8 சதவீதத்தினால் அதிகரித்தன. இதன்படி, சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கிற்கு 2016இன் ஐ.அ.டொலர் 2,879 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் 2017இல் ஐ.அ.டொலர் 3,338 மில்லியன் கொண்ட மிகையினைப் பதிவுசெய்தது.

5

### போக்குவரத்துப் பணிகள்

**போக்குவரத்துப் பணிகளில் காணப்பட்ட தொடர்ச்சியான மேம்பாடுகள் 2017இல் பணிகள் கணக்கு விரிவடைய உதவின.** பயணிகள் கட்டணங்களின் சரக்குக் கட்டணங்கள் மற்றும் துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலையம் தொடர்பான நடவடிக்கைகளின் பேரிலான அதிகரித்த வருவாய்கள் போக்குவரத்துத் துறையிலிருந்தான மொத்த உட்பாய்ச்சல்கள் 2017இல் ஐ.அ.டொலர் 2,376 மில்லியனை அடைந்து முன்னைய ஆண்டினைவிட 5.6 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதத்தினைப் பதிவுசெய்ய உதவின. சரக்குக் கட்டணம் மற்றும் வான் பயணப் பணிகளின் மீதான அதிகரித்த செலவிடல் காரணமாக உயர்ந்த துறைமுகம் மற்றும் வானூர்திநிலையத்துடன் தொடர்பான பணிக் கொடுப்பனவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் போக்குவரத்துப் பணிகளின் பேரிலான வெளிப்பாய்ச்சல் இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,688 மில்லியனுக்கு 4.3 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டது. இதற்கமைய, போக்குவரத்துத் துறையிலிருந்தான தேறிய உட்பாய்ச்சல்கள் 2016இன் ஐ.அ.டொலர் 632 மில்லியனிலிருந்து இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 688 மில்லியனுக்கு அதிகரித்தன.

அட்டவணை 5.7
நடைமுறை மற்றும் மூலதன கணக்கு

ஐ.அ.டொலர் மில்லியன்

| விடயம் | 2016 (அ) | | | 2017 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | செலவு | தேறிய | வரவு | செலவு | தேறிய |
| **பொருட்கள் மற்றும் பணிகள்** | **17,448** | **23,442** | **-5,994** | **19,120** | **25,401** | **-6,281** |
| **பொருட்கள்** | **10,310** | **19,183** | **-8,873** | **11,360** | **20,980** | **-9,619** |
| பொது வணிகம் | 10,310 | 18,809 | -8,499 | 11,360 | 20,330 | -8,970 |
| நாணயமல்லா தங்கம் | - | 374 | -374 | - | 650 | -650 |
| **பணிகள்** | **7,138** | **4,259** | **2,879** | **7,760** | **4,421** | **3,338** |
| போக்குவரத்து | 2,250 | 1,618 | 632 | 2,376 | 1,688 | 688 |
| கடல்வழி போக்குவரத்து | 1,059 | 779 | 281 | 1,096 | 790 | 306 |
| சரக்குத் தொகுதி | 1,059 | 779 | 281 | 1,096 | 790 | 306 |
| வான்வழி போக்குவரத்து | 1,191 | 840 | 351 | 1,280 | 898 | 382 |
| பயணிகள் | 1,073 | 753 | 320 | 1,158 | 810 | 348 |
| சரக்குத் தொகுதி | 118 | 87 | 31 | 122 | 88 | 34 |
| பயணம் (இ) | 3,518 | 1,542 | 1,977 | 3,925 | 1,599 | 2,326 |
| கட்டுமானம் | 63 | 29 | 34 | 69 | 32 | 37 |
| காப்புறுதியும் ஓய்வூதியப் பணிகளும் | 121 | 89 | 32 | 123 | 94 | 29 |
| நிதியியல் பணிகள் | 252 | 403 | -151 | 263 | 415 | -152 |
| தொலைத்தொடர்பு மற்றும் கணனி பணிகள் | 858 | 443 | 416 | 926 | 455 | 471 |
| தொலைத்தொடர்புகள் | 134 | 105 | 29 | 140 | 110 | 30 |
| கணனி பணிகள் | 724 | 337 | 387 | 786 | 345 | 440 |
| ஏனைய வியாபார பணிகள் | 42 | 67 | -25 | 44 | 69 | -25 |
| அரச பொருட்கள் மற்றும் பணிகள் என்.ஐ.இ. | 33 | 68 | -35 | 34 | 69 | -35 |
| **முதலாந்தர வருமானம்** | **127** | **2,329** | **-2,202** | **160** | **2,515** | **-2,355** |
| ஊழியர்களுக்கான நட்டஈடு | 20 | 88 | -67 | 26 | 96 | -70 |
| முதலீட்டு வருமானம் | 107 | 2,241 | -2,134 | 134 | 2,418 | -2,285 |
| நேரடி முதலீடு | 15 | 949 | -935 | 14 | 934 | -920 |
| பங்கு இலாபங்கள் | 15 | 500 | -485 | 14 | 431 | -417 |
| மீள் முதலிடப்பட்ட வருவாய்கள் | - | 450 | -450 | - | 503 | -503 |
| சொத்துப் பட்டியல் முதலீடு | - | 829 | -829 | - | 952 | -952 |
| பங்கு மூலதனம் | - | 73 | -73 | - | 80 | -80 |
| வட்டி | - | 756 | -756 | - | 873 | -873 |
| குறுங்காலம் | - | 1 | -1 | - | 6 | -6 |
| நீண்டகாலம் | - | 755 | -755 | - | 866 | -866 |
| ஏனைய முதலீடு | 45 | 462 | -418 | 55 | 532 | -477 |
| ஒதுக்கு சொத்துக்கள் | 47 | - | 47 | 64 | - | 64 |
| **இரண்டாந்தர வருமானம்** | **7,260** | **807** | **6,453** | **7,175** | **848** | **6,327** |
| பொது அரசாங்கம் | 19 | - | 19 | 11 | - | 11 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 7,242 | 807 | 6,434 | 7,164 | 848 | 6,316 |
| **நடைமுறை கணக்கு** | **24,835** | **26,578** | **-1,742** | **26,455** | **28,764** | **-2,309** |
| **மூலதன கணக்கு** | **56** | **31** | **25** | **40** | **29** | **11** |
| மூலதன மாற்றல்கள் | 56 | 31 | 25 | 40 | 29 | 11 |
| பொது அரசாங்கம் | 35 | - | 35 | 20 | - | 20 |
| கூட்டுத்தாபனங்கள் மற்றும் வீட்டுத்துறை | 21 | 31 | -10 | 20 | 29 | -9 |
| **நடைமுறை மற்றும் மூலதன கணக்கு** | **24,892** | **26,609** | **-1,717** | **26,495** | **28,793** | **-2,298** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) வதிவற்றோருக்கு வழங்கப்பட்ட பயணிகள் சேவைகள் என்பன போக்குவரத்து பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**பயணிகள் கட்டணங்களுடன் தொடர்பான உட்பாய்ச்சல்கள் 2017இல் பணிகள் கணக்கு மேம்பாடடைய சாதகமான முறையில் பங்களித்தன.** இதன்படி, பயணிகள் கட்டணங்களிலிருந்தான வருவாய்கள் இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,158 மில்லியனுக்கு 8.0 சதவீதத்தினால் அதிகரித்தன. ஆண்டின் முதற்காலாண்டுப்பகுதியில் பயணிகள் கட்டணங்களிலிருந்தான வருவாய்கள் மிதமடைந்தமைக்கு, ஓடுபாதைக்கு மேற்தளமிடும் வேலைகளுக்காக 2017 சனவரியிலிருந்து ஏப்பிறல் வரையான காலப்பகுதியில் பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி

நிலையம் பகுதியளவில் மூடப்பட்டமையின் காரணமாக இலங்கைக்கு பயணித்த பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். எனினும், ஆண்டின் பிற்பகுதியில் பயணிகள் கட்டணங்களிலிருந்தான வருவாய்களில் படிப்படியான எழுச்சியொன்று காணப்பட்டது. பயணிகள் கட்டணத்துடன் தொடர்பான திருப்திகரமான செயலாற்றத்திற்கு இவ்வாண்டுப்பகுதியில் வான் கட்டணங்களில் செய்யப்பட்ட மேல் நோக்கிய திருத்தங்களும் இலங்கைக்குப் பயணம் செய்த பணிகளின் அதிகரித்த எண்ணிக்கையும் காரணமாகலாம். இம்முன்னேற்றத்திற்கு சிறிலங்கன் எயார்லையின்சினால் பணியாற்றப்பட்ட நாடுகளின் எண்ணிக்கை இலங்கையின் வான் போக்குவரத்து வரலாற்றில் மிக உயர்ந்த எண்ணிக்கைக்கு அதிகரித்தமையும் காரணமாகலாம். இப்புதிய சேரிடங்கள் அவுஸ்திரேலியாவில் மெல்போர்னைம் இந்தியாவில் பல நகரங்களையும் உள்ளடக்கியிருந்தன. மேலும், சிறிலங்கன் எயார்லையின்ஸ் அதன் தொழிற்பாடுகளை உயர்த்தும் நோக்குடன் 2017இல் புதிய எரிபொருள் சிக்கனம் வாய்ந்த ஐந்து வானூர்திகளைக் கொள்வனவு செய்தது. இச்சிக்கன மேம்பாட்டு வழிமுறைகள் விரிவடைந்த பிராந்திய பிரசன்னங்கள் அதிகரித்த பறப்புக்களின் எண்ணிக்கை என்பனவற்றுடன் சேர்ந்து நடுத்தர காலப்பகுதியில் வான் போக்குவரத்துத் துணைத் துறையின் வருமான உருவாக்க இயலளவினை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.


**கொழும்புத் துறைமுகத்தில் கையாளப்பட்ட அதிகரித்த கப்பற்சரக்குகள், கொள்கலன்கள் மற்றும் மாற்றிக் கப்பலேற்றலின் அளவு என்பன அதிகரித்தமையின் விளைவாக சரக்குக் கட்டணங்களின் பேரிலான உட்பாய்ச்சல்கள் 2017இல் அதிகரித்தன.** இதன்படி, 2017இல் துறைமுக மற்றும் வானூர்தி நிலையம் தொடர்பிலான நடவடிக்கைகள் தொடர்பிலான சரக்குக் கட்டணங்களிலிருந்தான மொத்த உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 1,217 மில்லியனுக்கு 3.4 சதவீதத்தினால் அதிகரித்தன. இவ்வாண்டுப்பகுதியில் கொழும்பு துறைமுகம் துறைமுகத்தின் வரலாற்றில் முதற்றடவையாக 6 மில்லியனுக்கும் மேற்பட்ட இருபது அடிக்குச் சமமான கொள்கலன் அலகுகளை கையாள்வதன் மூலம் குறிப்பிடத்தக்கச் சாதனையொன்றினை நிகழ்த்தி கடல் போக்குவரத்துப் பணிகள் துறை விரிவடையப் பங்களித்தது. கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் கையாளல் மற்றும் கப்பல் சரக்குக் கையாளல் என்பனவற்றில் ஏற்பட்ட விரிவாக்கம் கடல் போக்குவரத்துத் துறையின் வளர்ச்சி உத்வேகத்திற்குத் தொடர்ந்தும் உதவியளித்தது. அதேவேளை, வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டினால் பிரசுரிக்கப்பட்ட உலகளாவிய “கப்பல் போக்குவரத்து இணைப்புச் சுட்டெண் - 2017” இன்படி இந்தியாவையும் விஞ்சி தென்னாசிய பிராந்தியத்தில் கடல் போக்குவரத்து நியதிகளில் மிகச் சிறந்த இணைப்பு நாடாக விளங்கி 15ஆவது தரமிடலைப் பெற்றுக்கொண்டது.

## பயணம் மற்றும் சுற்றுலா

**நாட்டின் மிகப் பெரும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளரான சுற்றுலாத் தொழில் துறை 2017இல் மிதமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.** சுற்றுலா வருகைகள் 2017இல் 2,116,407 கொண்ட மிக உயர்ந்த ஆண்டு வருகையைப் பதிவுசெய்த போதும் வருகைகளின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 3.2 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. திருத்த வேலைகள் மற்றும் ஓடுபாதையினைத் தரமுயர்த்தும் வேலைகள் காரணமாக 2017இல் ஏப்பிறல் வரையான காலப்பகுதியில் வானூர்திநிலையத்தில் இடம்பெற்ற பகுதியளவான வேலைகள் காரணமாக பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்திநிலையத்தின் பறப்புக்கள் இரத்துச் செய்யப்பட்டமை மற்றும் தாமதடைந்தமை அதேபோன்று 2017 நடுப்பகுதியில் டெங்கு பரவத் தொடங்கியமை என்பன சுற்றுலாக் கைத்தொழிலின் மந்தமான செயலாற்றத்திற்கு காரணமாயின. எனினும், வருகைகள் ஓரளவு மீட்சியைக் காட்டி 2017 திசெம்பரில் இதற்கு முன்னெப்பொழுதுமில்லாத மிக உயர்ந்த மாதாந்த வருகையினைப் பதிவுசெய்தது.


**மத்திய கிழக்கு தவிர்ந்த அனைத்து முக்கிய பிராந்தியங்களிலுமிருந்தான சுற்றுலா வருகைகள் 2017இல் அதிகரித்தன.** மேற்கு ஐரோப்பா இலங்கைக்கான மிகப் பெரிய சுற்றுலாப் பயணிகளின் மூல இடமாகத் தொடர்ந்தும் விளங்கி மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 32.2 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் இது 680,901 வருகைகளுக்கு 5.8 சதவீதத்தினால் அதிகரித்தது. இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய சுற்றுலாப் பிராந்தியமான தெற்கு ஆசியாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2017இல் 0.9 சதவீதம் கொண்ட சிறிதளவான வளர்ச்சியைப் பதிவுசெய்த போதும் வகைகளின் பங்குகள் 2016இன் 25.0 சதவீதத்திலிருந்து 24.5 சதவீதத்திற்க வீழ்ச்சியடைந்தது. எனினும், 2010 இலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்துவரும்

வரைபடம் 5.9
நாடுகளின்படி சுற்றுலாப் பயணிகளின் வருகை - 2017




*மூலம்:* இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

வரைபடம் 5.10
சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்




*மூலம்:* இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

கிழக்காசியாவிலிருந்தான சுற்றுலாப்பயணிகளின் பங்குகள் 2017இன் மொத்தச் சுற்றுலா வருகைகளில் 21.0 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் 4.5 சதவீதம் கொண்ட மிகையான வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் என்பனவற்றிலிருந்தான வருகைகள் வழிவகுத்தன. இந்தியா முதன்மை சுற்றுலாப் பயணிகளின் நாடு என்ற அதன் முதன்மை இடத்தினை தக்க வைத்துக் கொண்டிருந்ததுடன் 2017இல் 384,628 வருகைகளைக் கொண்ட மிக உயர்ந்த வளர்ச்சிக்குப் பங்களித்த வேளையில் சீனா சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கிடையிலும் இரண்டாவது மிகப்பெரும் நாடு என்ற நிலையினை தக்கவைத்துக் கொண்டதுடன் அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியமும் ஜேர்மனியும் பிரான்சும் காணப்பட்டன. இவ்வைந்து மிகப் பெரிய சுற்றுலா மூலநாடுகளும் ஒன்றுசேர்ந்து 2017இன் இலங்கையின் மொத்த சுற்றுலா வருகைகளில் 51.2 சதவீதத்திற்கு வகைகூறின. அதேவேளை, இலங்கையின் ஏழாவது மிகப்பெரிய சுற்றுலாப் பிராந்தியமான மத்திய கிழக்கிலிருந்தான வருகைகள் 2017இல் வீழ்ச்சியடைந்தன. இலங்கைக்கான விஜயத்தின் நோக்க நியதிகளில் சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானோர் (83.9 சதவீதம்) பொழுது போக்கிற்காக விஜயம் செய்வோராகக் காணப்பட்டனர். வியாபார நோக்கங்களுக்கான சுற்றுலா வருகைகள் 2.9 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில், நண்பர்கள், உறவினர்களைக் காண வருதல், சமயம் மற்றும் கலாச்சார நோக்கங்கள், நலம், கல்வி மற்றும் விளையாட்டு போன்ற ஏனைய நோக்கங்களுக்கான சுற்றுலா வருகைகளின் பங்கு 2017இன் மொத்த வருகைகளில் 13.2 சதவீதமாகக் காணப்பட்டன.



**சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் குறைவான வளர்ச்சி காணப்பட்ட போதும், சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2017இல் சராசரி செலவிடல் மற்றும் சுற்றுலாப் பயணிகளில் தங்கியிருந்த காலம் என்பன அதிகரித்தமையின் காரணமாக சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஆரோக்கியமானதாகக் காணப்பட்டன.** சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2016இன் ஐ.அ.டொலர் 3,518 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இல் ஐ.அ.டொலர் 3,925 மில்லியனுக்கு 11.6 சதவீதத்தினால் அதிகரித்தது. இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் சுற்றுலாப் பயணிகளின் செலவிடல் மற்றும் தங்கியிருக்கும் காலம் என்பனவற்றின் மீது நடத்தப்பட்ட பிந்திய வருடாந்த செலவிடலின்படி, 2017இல் சுற்றுலாப் பயணி ஒருவருக்கான சராசரி செலவிடல் 2016இன் நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 168.2 இலிருந்து நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 170.1 இற்கு உயர்வடைந்தது. மேலும், சுற்றுலாப் பயணி ஒருவரின் சராசரி தங்கியிருக்கும் காலம் 2016இன் 10.2 நாட்களுடன் ஒப்பிடுகையில் 2017இல் 10.9 நாட்களென மதிப்பிப்பட்டது. இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் மற்றும் சுற்றுலாத் துறையோடு தொடர்புடைய உட்கட்டுமானங்களை தரமுயர்த்தல் மற்றும்

அட்டவணை 5.8
சுற்றுலாத் துறையின் செயலாற்றம்

| விடயம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) 2017 |
|---|---|---|---|---|---|---|
| சுற்றுலா பயணிகளின் வருகைகள் (எண்ணிக்கை) | 1,274,593 | 1,527,153 | 1,798,380 | 2,050,832 | 2,116,407 | 3.2 |
| வருகையின் நோக்கத்தின் அடிப்படையில் | | | | | | |
| பொழுதுபோக்கு | 915,208 | 1,037,644 | 1,198,240 | 1,710,027 | 1,766,503 | 3.9 |
| வியாபாரம் | 67,946 | 20,270 | 23,323 | 37,121 | 60,940 | 64.2 |
| ஏனையவை | 291,439 | 469,239 | 576,817 | 303,684 | 278,964 | -8.1 |
| சுற்றுலா விருந்தாளிகளின் இரவுகள் ('000) | 10,909 | 15,119 | 18,163 | 20,918 | 23,068 | 10.3 |
| தங்கும் அறை குடியிருப்பு விகிதம் (%) | 71.7 | 74.3 | 74.5 | 74.8 | 73.3 | -2.0 |
| மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ.மில்லியன்) | 221,720 | 317,479 | 405,492 | 512,373 | 598,143 | 16.7 |
| தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூ) | 173,954 | 207,889 | 225,476 | 249,837 | 282,622 | 13.1 |
| மொத்த தொழில்நிலை (எண்ணிக்கை) (ஆ) | 270,150 | 299,890 | 319,436 | 335,659 | 359,215 | 7.0 |
| நேரடி தொழில்வாய்ப்புக்கள் | 112,550 | 129,790 | 135,930 | 146,115 | 156,369 | 7.0 |
| மறைமுக தொழில்வாய்ப்புக்கள் | 157,600 | 170,100 | 183,506 | 189,544 | 202,846 | 7.0 |

(அ) தற்காலிகமானது
(ஆ) மதிப்பீடுகள்

*மூலங்கள்:* இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
இலங்கை மத்திய வங்க

விரிவாக்கல் என்பவற்றிற்கு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் உதவியுடன் நடுத்தர காலத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருவாய்கள் உறுதியாக வளர்ச்சியடையவுமென எதிர்பார்க்கிறது. அதேவேளையில், பயணத்துடன் தொடர்பான வெளிப்பாய்ச்சல்கள் 2017இல் ஐ.அ.டொலர் 1,599 மில்லியனுக்கு 3.7 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டது. இவ்வபிவிருத்திகளால் பயணம் மற்றும் சுற்றுலா துணைத் துறை 2017இல் ஐ.அ.டொலர் 2,326 மில்லியன் கொண்ட மிகையினைப் பதிவுசெய்தது.

**2017இல் சுற்றுலாத் துறையின் முதலீடுகள் தொடர்ந்து மேலும் விரிவடைந்தன.** சுற்றுலாக் கைத்தொழில் முதலீடு செய்ய ஆர்வமுடைய வளமுடைய முதலீட்டாளர்களுக்கு உதவுவதற்காக தரமுயர்த்தல் மற்றும் வசதிப்படுத்தல் நிலையத்தை மையப்படுத்துவதான 2010இல் இலங்கை சுற்றுலா அபிவிருத்திச்சபையில் ஆரம்பிக்கப்பட்ட ஒரே கூரையின் கீழ் நிறுவப்பட்ட மையம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஏறத்தாழ 639 செயற்றிட்ட முன்மொழிவுகள் இந்நிறுவனத்தினால் பெறப்பட்டுள்ளன. ஐ.அ.டொலர் 5,191 மில்லியன் மொத்த முதலீட்டுடன் 2017 இறுதியில் 29,946 அறைகளுடன் கூடிய 539 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. 2017இல் ஐ.அ.டொலர் 314 மில்லியன் முதலீட்டுப் பெறுமதியுடன் 95 புதிய சுற்றுலாவிடுதிகளுக்கான முதலீட்டு முன்மொழிவுகள் பெறப்பட்டன. 2016இல் ஒப்புதலளிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 126 மில்லியன் தொகை கொண்ட 41 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் 2017இல் ஐ.அ.டொலர் 380 மில்லியன் மொத்தப் பெறுமதிகளுடன் கூடிய 2,393 அறைகளைக் கொண்ட 45 சுற்றுலாவிடுதிகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டது. சங்கிறி - லா கொழும்பு மற்றும் மூவென்பிக் உட்பட பல பன்னாட்டு சுற்றுலாவிடுதிகள் தமது தொழிற்பாடுகளை தொடங்கிய வேளையில் ஹயட் செறட்டன், ஜரிசி மற்றும் நெக்ஸ்ட் போன்ற பல முக்கிய சுற்றுலாவிடுதிச் செயற்றிட்டங்கள் இவ்வாண்டுப்பகுதியிலும் தமது கட்டுமான வேலைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டன. மேலும், போட்டிக்பில்லா, விருந்தினர் விடுதிகள், தங்கியிருக்கும் இல்லங்கள், பாரம்பரிய இல்லங்கள், பங்களாக்கள், வாடகைக்கான மாடிமனைகள் போன்றனவற்றை உள்ளடக்கிய துணை நிறுவனங்களின் எண்ணிக்கை 2017இல் 135 இனால் 1,693 இற்கு அதிகரித்தமையின் மூலம் மொத்த அறைகளின் இயலளவு 974 அறைகளினால் 12,509 இற்கு அதிகரித்தது.

**மாகாண மட்டங்களிலும் சுற்றுலா அபிவிருத்திச் செயற்றிடடங்ளின் மீது மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் 2017 இலும் தொடர்ந்தன.** இதுவரை இலங்கையிலுள்ள சுற்றுலாச் செயற்றிட்டங்களில் மிகப் பெரியதான தெத்துவ போன்ற ஒருங்கிணைக்கப்பட்ட சுற்றுலா அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் அதன் காணிக் கையேற்புச் செயன்முறையினை நிறைவு செய்துள்ளன. மேலும், இரணவில்ல, அகுறல்ல, கல்பிட்டி வலயம் 02 மற்றும் குச்சவெளி ஆகிய இடங்களிலுள்ள மற்றைய ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கான அமைவிடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை எல்ல, அறுகம்குடா, கல்பிட்டி, நுவரெலியா, பேருவள, கிக்கடுவ மற்றும் பின்னவல பிரசேங்களின் சுற்றுலாவிற்குப் பயணிகளைக் கவர்வதற்காக அவை கொண்டிருக்கும் தனித்துவமான தன்மைகளைக் கருத்திற் கொண்டு தனியான சுற்றுலா அபிவிருத்தி முதன்மைத் திட்டமொன்றினை அபிவிருத்தி செய்யும் செயன்முறையொன்றில் ஈடுபட்டு வருகின்றது.

**இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலுக்குக் காணப்படும் உள்ளார்ந்த வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் 2017இல் பல கொள்கை முன்னெடுப்புக்களும் நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன.** சுற்றுலா தொலைநோக்கு - 2025 இற்கு வசதியளிப்பதாகவும் ஐக்கிய நாடுகளின் சுற்றுலா மீதான நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகளை எய்துவதற்கு உதவும் விதத்திலும் புதிய சுற்றுலா உபாயத்திட்டம் 2017 - 2020 அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி 2020 அளவில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்களை ஐ.அ.டொலர் 7 பில்லியனுக்கு உயர்த்தவும் சுற்றுலாவிலும் துணைத் தொழில்களில் 600,000 ஆட்களுக்குத் தொழில் வழங்கவும் சுற்றுலாப்பயணி ஒருவருக்கான நாளாந்தச் செலவினை ஐ.அ.டொலர் 210 இற்கு அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், 2018இல் நடைமுறைப்படுத்துவதற்கிருந்த தேசிய ஏற்றுமதி உபாயம் அதன் ஆறு முக்கிய துறைகளுள் ஒன்றாக நலனோம்புச் சுற்றுலாவினை அடையாளம் கண்டிருக்கிறது. இக்கொள்கை முன்னெடுப்புக்களின் விதந்துரைப்புக்களில் சில ஏற்கனவே பரிசீலனையில் கொள்ளப்பட்டுள்ளதுடன் தேவையான நிதிகள் வரவு செலவுத்திட்டம் - 2018 இனூடாக ஒதுக்கப்பட்டுள்ளன. முறைசாராத் துறை சுற்றுலா நிறுவனங்களை முசைார்ந்த துறைக்குள் கவர்ந்து கொள்வது தொடர்பான நடவடிக்கைகள், பரீட்சிப்புக்களை விரைவுபடுத்துவதற்காக சுற்றுலா நடமாடும் பணிகள், பதிவுசெய்தல் மற்றும் உரிமம் வழங்கல் செயன்முறைகள், சுற்றுலாப் பயணிகள் சிநேகபூர்வ உணவுச்சாலைகளைப் பதிவுசெய்தல் என்பன 2017இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் வர்த்தக கண்காட்சிகளில் பங்குபெறுதல், மற்றும் தரமுயர்த்தல் நடவடிக்கைகள் உட்பட, அடையாளம் காணப்பட்ட 32 சந்தைகளில் நாட்டிற்கே சிறப்பாக உரித்தான தரமுயர்த்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம், சிங்கப்பூர் கோப்பரேசன் என்ரபிறைசஸ் மற்றும் ரெமாசெக் பவுண்டேஷன் இன்ரநஷனல் என்பன கூட்டாக, டிஜிட்டல் மாதிரிப்படுத்தலூடாக சுற்றுலாவினை சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல் தொடர்பில் சிங்கப்பூரின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக 2017 மாச்சில் கூட்டுப்பங்குடமையொன்றினைத் தொடங்கின.

5

அதேவேளை, ஏறத்தாழ 37,000 பயணகளைக் கொண்ட 12 சுற்றுலாப் பயணக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் வரவேற்கப்பட்டு அவர்களுக்கான பணிகள் வழங்கப்பட்டன. சுற்றுலா ஊக்குவிப்பு பிரச்சாரத்தின் பெறுபேறாக, இலங்கை மேலும் அங்கீகாரங்களைப் பெற்றுக்கொண்டதுடன் புளூம்பேர்க் நசனல் ஜோகிரபிக் மற்றும் வோக் போன்ற சுற்றுலாத்துறையோடு தொடர்புடைய புகழ்பெற்ற சஞ்சிகைகள் மற்றும் அமைப்புக்கள் தொடர்பான அங்கீகாரங்கள் மற்றும் விருதுகளைப் பெற்றுக்கொண்டது. குறிப்பாக, இலங்கை 2017இல் உலகப் பயண விருது ஆசியாவில் "ஆசியாவின் முன்னணி சேரிடம்" என்ற விருதிற்குத் தெரிவு செய்யப்பட்டது. மேலும், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்சு மற்றும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளில் இலங்கையின் பிரசன்னத்தினைத் தொடர்ச்சியாகப் பேணும் விதத்தில் "நாடுகளுக்கான பிரதிநிதித்துவ கம்பனிகளை" 2018இல் நியமிக்க எதிர்பார்க்கிறது.

**பொருளாதாரத்தில் முனைப்பானதொரு துறையாக சுற்றுலா தொடர்ந்தும் இருந்து வருகின்ற போதும் இலங்கை உலகளாவிய சந்தைகளிலிருந்து முழு உள்ளார்ந்த வளங்களையும் இன்னமும் பயன்படுத்திக் கொள்ளவில்லை.** இலங்கை 2016இலும் 2017இலும் 2 மில்லியனுக்கு மேற்பட்ட சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து கொண்டதெனினும், தென்கிழக்காசியாவிலுள்ள சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் ஹொங்கொங் போன்ற இலங்கையிலும் பார்க்க சிறிய நாடுகள் ஆண்டொன்றிற்கு 10 மில்லியனுக்கு மேற்பட்ட சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து கொள்கின்றன. எனவே, இலங்கை சுற்றுலாக் கைத்தொழிலின் பயன்படுத்தப்படாத உள்ளார்ந்த வளங்களின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சுற்றுலா உபாயத் திட்டம் 2017 - 2020 இன் ஊடாக வலியுறுத்தப்பட்ட உபாய அணுகுமுறைகளின் நடைமுறைப்படுத்தலை விரைவுபடுத்துவது மிக இன்றியமையாததாகும். 2020 அளவில் சுற்றுலா உபாயத் திட்டத்தின் நீடித்தநிலையான சுற்றுலா இலக்குகளை எய்துவதற்கு தனியார் பங்குடமை தொழில்முயற்சிகளினூடாக அரசாங்கத்திற்கும் சுற்றுலாக் கைத்தொழில் ஆர்வலர்களுக்குமிடையில் இணைப்பு முயற்சியொன்றினை மேற்கொள்வது அவசியமாகும். முக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுநராக இலங்கையினை உத்வேகப்படுத்தும் விதத்தில் இலங்கை கப்பற் பயண சுற்றுலா திமிங்கலம் மற்றும் டொல்பினைக் கண்டுகளித்தல், சுழியோட்டம் மற்றும் நீண்ட நேரம் நீரில் மூழ்கியிருத்தல் போன்ற நீருடன் தொடர்பான சுற்றுலா, பட்டம் விடுதல் அதேபோன்று யாத்திரை சுற்றுலா, சமையல் சுற்றுலா, பறவைகளைக் கண்டுகளித்தல், திருமண சுற்றுலா, திரைப்படச் சுற்றுலா, (கூட்டங்கள், ஊக்குவிப்புக்கள், மாநாடுகள் மற்றும் முக்கிய நிகழ்வுகளுக்கான சுற்றுலா) போன்ற சுற்றுலா நடவடிக்கைகளுக்கான உள்ளார்ந்த வளங்களைக் கண்டறிவது அவசியமாகும்.

### தொலைத்தொடர்பூட்டல்கள், கணினி மற்றும் தகவல் பணிகள்

**பணிகளின் ஏற்றுமதிகளிடையே முக்கிய வளர்ச்சிக்குத் தூண்டுநராகத் தொடர்ந்தும் இருந்துவரும் விதத்தில் தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகளிலிருந்தான வருவாய்கள் 2017இல் உறுதியான வளர்ச்சியை எடுத்துக்காட்டின.** தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகளின் ஏற்றமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 2017இல் ஐ.அ.டொலர் 926 மில்லியனாக அமைந்து 2016இனை விட 7.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. இவ்வாண்டுப்பகுதியில் தொலைத்தொடர்பூட்டல் துணைத் துறை மிதமாக அதிகரித்ததுடன் மொத்த வருவாய்கள் 2016இன் ஐ.அ.டொலர் 134 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 140 மில்லியனுக்கு அதிகரித்தது. இவ்வளர்ச்சியானது முக்கியமாக, அகன்ற பட்டை தரவுப்பணிகளின் உதவியுடன் இணையத்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட தொடர்பூட்டல் வசதிகளின் அதிகரித்த பயன்பாட்டின் மூலமே பெறப்பட்டது. அதேவேளை, பன்னாட்டு நேரடி தொலைபேசி வசதிகளின் பயன்பாட்டில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சி வருவாய்களின் பிரிவினைக் குறிப்பிட்டதொரு அளவிற்குக் கட்டுப்படுத்தியது. 2017இல் இலங்கையின் தொலைத்தொடர்பூட்டல் தொழில் துறை ஐந்தாவது தலைமுறைக்கான (5ஜி) தொழில்நுட்பத்தினைப் பின்பற்றுவதற்கான செயன்முறையில் ஈடுபட்டு வருகிறது. இது தன்னியக்கப் போக்குவரத்தினை அடிப்படையாகக் கொண்ட "இணையத்தளப்பொருட்கள்" போன்ற எதிர்கால தொழில்நுட்பவியல் பிரயோகங்களையும் வீரியம் மிக்கதும் டிஜிட்டல் வியாபாரத் தீர்வுகளைக் கொண்டதுமான வியாபார தீர்வுகளைப் பயன்படுத்துகின்ற தன்னியக்க தொழிலினையும் இயலுமைப்படுத்தும். மேலும், தென்னாசிய பிராந்தியத்தில் டிஜிட்டல் மையமாக மாறுவதனை நோக்கிய முதற்கட்ட நடவடிக்கையாக அதிநவீனத்துவம் வாய்ந்த கடலின் கீழான கம்பிவடங்களைப் பதிப்பதற்கான திட்டம் காலி துறைமுகத்தில் நிறுவப்படவுள்ளது. இவ்வபிவிருத்திகளை அதிகரிக்கப்பட்ட உலகளாவிய இணைப்பு முறைகளினூடாக நடுத்தர காலப்பகுதியில் தொலைத்தொடர்பூட்டல் தொழில்துறையின் அரசிறை உருவாக்க இயலளவினை உத்வேகப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

**கணனி மற்றும் தகவல் பணிகள் துணைத் துறையும் 2017இல் அதன் வளர்ச்சி உத்வேகத்தினைத் தொடர்ந்தும் பேணியது.** இதன்படி, கணனி மற்றும் தகவல் பணிகளுக்கான மொத்த உட்பாய்ச்சல்கள் இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 786 மில்லியனுக்கு 8.5 சதவீதத்தினால் மேம்பட்டன. வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல், வெளியிலிருந்து அறிவினைச் செயன்முறைப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கிய மென்பொருள் மற்றும் தகவல்

5

தொழில்நுட்பவியல் இயலுமைப்படுத்தல் பணிகளின் விரைந்த விரிவாக்கம் இத்துறையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் தொடர்ந்தும் பங்களித்தது. 2017இல் இலங்கையின் தரமிடலானது மூன்று முக்கிய வகைகளான நிதியியல் கவர்ச்சித்தன்மை, மக்களின் தேர்ச்சி மற்றும் கிடைப்பனவு, மற்றும் வியாபாரச்சூழல் என்பன தொடர்பில் 55 நாடுகளிலுள்ள கரைகடந்த நிலத் தோற்றப்பாட்டின் சமதளக்கோட்டின் பகுப்பாய்வினையும் நடவடிக்கைகளையும் ஆராய்கின்ற “ஏ.ரி. கேர்ணியின் உலகளாவிய பணிகள் அமைவிடச் சுட்டெண்ணில்” 2016இல் தரமிடலிலிருந்து மூன்று புள்ளிகளினால் மேம்பாடடைந்து பதினோராவது நிலைக்கு உயர்வடைந்தது. இவ்வாய்வானது, இலங்கை அதன் பிராந்தியத்திலுள்ள அயல்நாடுகளை விட வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்வதனை இயலுமைப்படுத்தும் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த தொழிலாளர் செலவுகள் மற்றும் நீண்ட கால வரிவிடுப்பு என்பனவற்றினை எடுத்துக்காட்டுகின்றது. மேலும், தகவல் தொழில்நுட்பவியல் இயலுமைப்படுத்தல் பணிகள் தொழில்துறையின் முழு உள்ளார்ந்த வளத்தினையும் பயன்படுத்திக் கொள்ளும் நோக்குடன் தகவல் தொழில்நுட்ப கைத்தொழில்களிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கம்பனிகளைத் தொடங்குவதற்கு நிதியியல் உதவிகளைத் தொடங்குவதற்காக அரசாங்கம் அதன் 2018ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் “தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புக்கள்” என அழைக்கப்படும் தனிப்பட்டவர் நிதியமொன்றினை நிறுவுவதற்கு முன்மொழிந்திருக்கிறது.

### 5.4.2 முதலாந்தர வருமானம்

**நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் அதிகரித்த மீள்முதலீட்டு வருவாய்கள், பன்னாட்டு நாட்டிற்கான முறிகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் அரசாங்கத்தின் செயற்றிட்டக் கடன்கள் என்பனவற்றின் காரணமாக அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்குடன் இசைந்து செல்லும் விதத்தில் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை விரிவடைந்தது.** இதன்படி, முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை 2016இன் ஐ.அ.டொலர் 2,202 மில்லியனிலிருந்து 2017இல் ஐ.அ.டொலர் 2,355 மில்லியனுக்கு விரிவடைந்தது. முதலாந்தர வருமானக் கணக்கில் வெளிப்பாய்ச்சலில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும், நேரடி நிதியியல் கணக்கில் பிரதிபலிக்கப்பட்ட இதே தொகை நேரடி முதலீட்டுத் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்புத் தொகையாக இருப்பதனால் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் மீள்முதலீட்டு வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பினைச் சாதகமானதொன்றாகக் கருதமுடியும். 2017இல் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் இலாபத்தன்மை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட மட்டத்தினை ஒத்ததாகக் காணப்பட்ட போதும் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகள் குறைந்தளவு பங்கிலாபங்களை பிரகடனம் செய்வதற்கும் வருவாய்களின் உயர்ந்த மீள்முதலீட்டிற்கும் முன்னுரிமையளித்தன. 2016இன் கூப்பன் கொடுப்பனவுகளுக்கும் புறம்பாக 2016 யூலை மற்றும் 2017 மேயிலும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் புதிய வழங்கல்களின் கூப்பன் கொடுப்பனவுகளுடன் 2017இல் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல் அதிகரித்தமையின் காரணமாக சொத்துப்பட்டியல் முதலீடுகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் மீது 2017இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது. அதேவேளை, 2017இல் இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட பன்னாட்டு முறிகள் முதிர்ச்சியடைந்தமையுடன் வங்கித்தொழில் முறைமையினால் வழங்கப்பட்ட பன்னாட்டு முறிகளின் மீதான கூப்பன் கொடுப்பனவுகள் குறைவடைந்தன. அரசாங்கத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளும் அதிகரித்தமைக்கு புதிய வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகள் மற்றும் அரசாங்கத்தினால் பெறப்பட்ட செயற்றிட்டக் கடன்கள் மீதான அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகளும் காரணங்களாக அமைந்தன. வர்த்தக வங்கிகளின் வட்டிக் கொடுப்பனவுகள் இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அவற்றின் நீண்ட காலப் பொறுப்புக்கள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். எனினும், முதலாந்தர வருமானக் கணக்கிற்கான அதிகரித்த உட்பாய்ச்சலினால் முதலாந்தர வருமானப் பற்றாக்குறையின் விரிவாக்கம் ஓரளவிற்கு மிதமடைந்தது. 2017இல் ஒதுக்குச் சொத்தின் முதலீடுகள் அதிகரித்து 2016 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குமட்டம் அதிகரித்தமையைப் பிரதிபலித்தது. இது வங்கித்தொழில் முறையினால் வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்கள் மீதான அதிகரித்த வருமானத்தினாலும் ஆதரவளிக்கப்பட்டமையின் மூலம் 2017இல் அதிகரித்த உலகளாவிய வட்டி வீதங்களின் தாக்கத்தினைச் சாத்தியமானளவிற்குப் பிரதிபலித்தது.

### 5.4.3 இரண்டாந்தர வருமானம்

**தனியார் மற்றும் அரச மாற்றல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய இரண்டாந்தர வருமானக் கணக்கு 2017ஆம் ஆண்டுப்பகுதியில் குறைவடைந்து காணப்பட்டமைக்கு தொழிலாளர் பணவனுப்பல்களில் காணப்பட்ட மிதமான செயலாற்றமே காரணமாகும்.** தனியார் மாற்றல்களின் முக்கிய மூலமாக விளங்கும் இரண்டாந்தர வருமானக் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சல்களுக்கு வகைகூறும் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2016இல் காணப்பட்ட 3.7 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு மாறாக 2017இல் ஐ.அ.டொலர் 7,164 மில்லியனுக்கு 1.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தொழிலாளர் பணவனுப்பல்களில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு உலகளாவிய பொருளாதாரத்தின் மந்தமான நிலைமையும் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் நிச்சயமற்ற புவிசார் அரசியல்

நிலைமைகளும் அந்நாடுகளின் வருமான மட்டங்களின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த எண்ணெய் விலைகளின் தாழ்ந்த மட்டங்களும் பெருமளவிற்குக் காரணமாக அமைந்தன. மேலும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் வழங்கப்பட்ட தரவுகளின்படி அனைத்துத் தேர்ச்சி வகைகளின் கீழும் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் ஒட்டுமொத்தத் தொழிலாளர்களின் புலம்பெயர்வு 12.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவடைந்தது. உள்நாட்டு தொழிற்சந்தை விரிவடைந்தமை, வீட்டுப்பணிப் பெண்களாகவும் தேர்ச்சியற்ற வேலையாட்களாகவும் புலம்பெயர்வதனை ஊக்கம் குன்றச் செய்வதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தொடர்ச்சியான பல கொள்கை வழிமுறைகள் என்பன வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக செல்பவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைய முக்கிய காரணங்களாக அமைந்தன. இக்கொள்கை வழிமுறைகள் குடும்பப் பின்னணி அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடு, பெண் தொழிலாளர்கள் வெளிச்செல்வதன் மீது முக்கிய தாக்கத்தினைக் கொண்டிருந்த மிகக் குறைந்தமட்ட வயது தேவைப்பாடு விதிக்கப்பட்டமை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலும், இவ்வாண்டுப்பகுதியில் இலங்கையர்களுக்காக வழங்கப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டமைக்கு சட்டத்திற்குப் புறம்பாக புலம்பெயரும் வேலையாட்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட உயர்வு விசா முடிந்த பின்பும் வெளிநாடுகளில் தங்கியிருக்கின்றமை, வெளிநாட்டு தொழில்தருநர்களினால் கோரப்படும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் கடுமையாக பற்றாக்குறையாகவுள்ளமை, புலம்பெயரும் தொழிலாளர்களின் குறிப்பாக, வீட்டுப்பணிப்பெண்கள் உட்பட தேர்ச்சியற்ற ஊழியர்களின் மொழித் தேர்ச்சிப் பற்றாக்குறை என்பன புலம்பெயரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைய முக்கிய காரணங்களாக அமைந்தன. அதேவேளை, அரச மாற்றல்கள் வடிவிலான பெறுகைகளும் இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. இதன் விளைவாக, இரண்டாந்தர வருமானக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 7,175 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டினை விட 1.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றினைக் குறித்துக்காட்டியது.

## 5.5 நடைமுறைக் கணக்கு மீதி

**விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறை முதலாந்தர வருமானக் கணக்கிலிருந்தான உயர்ந்த வெளிப்பாய்ச்சல்கள், சுற்றுலா வருவாய்களில் காணப்பட்ட மிதமான தன்மை, தொழிலாளர் பணவனுப்பல்களில் காணப்பட்ட வீழ்ச்சி என்பனவற்றுடன் இணைந்து 2017இல் வெளிவாரி நடைமுறைக் கணக்கினைக் குறைத்துவிட்டன.** 2017 மாச்சிலிருந்து ஏற்றுமதி வருவாய்களில் படிப்படியான அதிகரிப்பொன்று காணப்பட்ட போதும் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை எதிரீடு செய்வதற்கு அதிகரித்த ஏற்றுமதி வருவாய்கள் போதமானதாக இல்லாமையினால் வர்த்தக மீதி கணிசமானளவிற்கு தேய்வடைந்தது. அரிசி மற்றும் எரிபொருள் போன்ற வரட்சியுடன் தொடர்பான இறக்குமதிகளில் ஏற்பட்ட முக்கிய தூண்டுதலின் காரணமாக இறக்குமதிச் செலவினம் உயர்வடைந்தது. தங்கம், அடிப்படை உலோகங்கள் என்பனவற்றின் உயர்ந்த இறக்குமதிகள் 2017இல் இறக்குமதிச் செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைவதற்குப் பங்களித்தது. அதேவேளை, தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்து உருவாக்கப்பட்ட இரண்டாந்தர வருமானக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் இவ்வாண்டுப்பகுதியில் குறைவடைந்து காணப்பட்ட வேளையில் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை விரிவடைந்தமைக்கு நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் அதிகரித்த மீள்முதலீட்டு வருவாய்களும் வட்டிக் கொடுப்பனவுகளும் காரணங்களாக அமைந்தன. எனினும், சுற்றுலா போக்குவரத்து, கணனிப் பணிகள் துணைத் துறையிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சி வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களித்தன. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2016இன் ஐ.அ.டொலர் 1,742 மில்லியனிலிருந்து 2017இல் ஐ.அ.டொலர் 2,309 மில்லியனுக்கு விரிவடைந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2016இன் 2.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 2.6 சதவீதமாகக் காணப்பட்டது.

## 5.6 மூலதனக் கணக்கு மீதி


**2017இல் மூலதன மாற்றல்கள் வடிவிலமைந்த குறைந்த உட்பாய்ச்சல்களின் காரணமாக மூலதனக் கணக்கு குறைவடைந்து காணப்பட்டது.** அரசு மற்றும் தனியார் துறை இரண்டிற்குமான மூலதன மாற்றல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. இதன்படி, மூலதனக் கணக்கில் காணப்பட்ட மிகை 2016ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 25 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இல் ஐ.அ.டொலர் 11 மில்லியனாக விளங்கின.

## 5.7 நிதியியல் கணக்கு

**நிதியியல் கணக்கிற்கான தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் தேறிய நிதியியல் சொத்துக்களின் கையேற்பு ஆகிய இரண்டும் 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017இல் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.** 2016ஆம் ஆண்டுப்பகுதியில் காணப்பட்ட வெளிப்பாய்ச்சல்களுக்கெதிராக நிதியியல் கணக்கிற்கான உயர்ந்த உட்பாய்ச்சல் 2017இல்

5

வரைபடம் 5.11
நிதியியல் கணக்கு




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.9 அ
நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ.மில்லியன்

| வகை | 2016(அ) | | 2017 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப்படுத்துகை | பொறுப்புக்களின் தேறிய உறப்படல் | நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப்படுத்துகை | பொறுப்புக்களின் தேறிய உறப்படல் |
| **நிதியியல் கணக்கு** | **31** | **2,213** | **2,944** | **5,128** |
| **நேரடி முதலீடு** | **237** | **897** | **72** | **1,375** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதி பங்குகள் | 235 | 710 | 68 | 535 |
| வருவாய்களில் மீள் முதலீடு தவிர்ந்த பங்கு மூலதனம் | 235 | 260 | 68 | 32 |
| நேரடி முதலீட்டு முயற்சிகளில் நேரடி முதலீட்டாளர் | 235 | 260 | 68 | 32 |
| வருமானத்தின் மீள் முதலீடு | - | 450 | - | 503 |
| படுகடன் கருவிகள் | 2 | 187 | 4 | 840 |
| நேரடி முதலீட்டு முயற்சிகளில் நேரடிமுதலீட்டாளர் | 2 | 187 | 4 | 840 |
| **சொத்துப்பட்டியல் முதலீடு** | **...** | **993** | **...** | **1,772** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | - | 24 | - | 359 |
| படுகடன் கருவிகள் | ... | 969 | ... | 1,413 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | ... | - | ... | -500 |
| நீண்ட காலம் | ... | - | ... | -500 |
| பொது அரசாங்கம் | - | 969 | - | 1,913 |
| குறுங்காலம் (திறைசேரி உண்டியல்கள்) | - | 36 | - | 81 |
| நீண்டகாலம் | - | 932 | - | 1,832 |
| திறைசேரி முறிகள் | - | -361 | - | 360 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | - | -207 | - | -28 |
| நாட்டுக்கான முறிகள் | - | 1,500 | - | 1,500 |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு** | **266** | **323** | **102** | **1,981** |
| நாணயமும் வைப்புக்களும் | 5 | -609 | 78 | -228 |
| மத்திய வங்கி | - | -701 | - | -402 |
| குறுங்காலம் | - | -1 | - | -2 |
| நீண்ட காலம் | - | -700 | - | -400 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 5 | 92 | 78 | 173 |
| குறுங்காலம் | -4 | 92 | 11 | 173 |
| நீண்ட காலம் | 9 | - | 67 | - |
| **பக்கம் 171 இல் தொடர்கிறது.** | | | | |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| **வெளிநாட்டு நேரடி முதலீடுகள்** | | | | |
| பங்கு மூலதனம் | | 260 | | 32 |
| வருவாய்களின் மீள் முதலீடு | | 450 | | 503 |
| கம்பனிகளுக்கிடையிலான கடன்கள் | | 276 | | 959 |
| கம்பனிகளுக்கிடையிலான கடன் மீள் கொடுப்பனவுகள் | | -88 | | -119 |
| **மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (1)** | | **897** | | **1,375** |
| முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான கடன்கள் (2) | | 181 | | 538 |
| **முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான கடன்கள் உள்ளடங்கலாக மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (1+2) (இ)** | | **1,078** | | **1,913** |
| **சிஎஸ்ஈ இற்கான மொத்த தேறிய உட்பாய்ச்சல்கள்** | | **19** | | **279** |
| நேரடி முதலீடுகள் | | -5 | | -80 |
| சொத்துப்பட்டியல் முதலீடுகள் | | 24 | | 359 |
| **ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் (திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள்) இலான தேறிய வெளிநாட்டு முதலீடு** | | **-324** | | **441** |
| வெளிநாட்டு கொள்வனவுகள் | | 1,238 | | 1,667 |
| வெளிநாட்டு விற்பனைகள் | | 1,562 | | 1,226 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) முதலீட்டுச் சபை மதிப்பீடுகளிலுள்ள வேறுபாடானது பரம்பல் மற்றும் தொகுத்தல் முறைகளிலுள்ள வேறுபாடுகளிலானது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

தேறிய நிகழத்தக்க பொறுப்புக்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைத் தோற்றுவித்தன. மேலும், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் குறிப்பிடத்தக்க திரட்சி இவ்வாண்டுப்பகுதியில் சொத்துக்களின் தேறிய கையேற்பில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தது. தேறிய அடிப்படையில் நிகழத்தக்க பொறுப்புக்கள் 2016இன் ஐ.அ.டொலர் 2,213 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இல் 5,128 மில்லியனாக விளங்கிய வேளையில் நிதியியல் சொத்துக்களின் கையேற்பு 2016இன் ஐ.அ.டொலர் 31 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,944 மில்லியனாக விளங்கின. ஐக்கிய நாடுகளின் பெடரல் றிசேர்வினால் வட்டி வீதங்கள் மேலும் உயர்வடையுமென எதிர்பார்ப்புக்களின் பின்னணியில் 2016இன் நான்காம் காலாண்டில் காணப்பட்ட அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான வெளிநாட்டு முதலீட்டாளர்களின் குறிப்பிடத்தக்க குறைச் சேமிப்புக்கள் 2017இன் முதலாம் காலாண்டிலும் தொடர்ந்தன. இது வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியிலிருந்தான தொடர்ச்சியான தலையீடுகளைத் தேவைப்படுத்தியதன் மூலம் 2017ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைத் தோற்றுவித்தது. மேலும், ஐ.அ.டொலர் 400 மில்லியன் தொகை கொண்ட இந்திய ஒதுக்கு வங்கியுடனான நாணய பரஸ்பர பரிமாற்ற ஒழுங்குகளும் 2017இன் முதலாம் காலாண்டில் முதிர்ச்சியடைந்தன. எனினும், நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் 2017இன் இரண்டாம் காலாண்டிலிருந்து குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு மேம்பட்ட ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டின் மீது முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரித்தமையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அரச பிணையங்களில் காணப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பிலான வெளிப்பாய்ச்சல்கள் குறிப்பிடத்தக்களவிற்கு மாற்றமடைந்தமை மற்றும் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட இரு கூடுதலான தொகுதிகளுடன் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தமை என்பன காரணங்களாக அமைந்தன. நிதியியல் கணக்கு அம்பாந்தோட்டை துறைமுகச் செயற்றிட்டம், கொழும்பு துறைமுக நகர் செயற்றிட்டம் என்பனவற்றில் காணப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் துறையில் காணப்பட்ட முதலீடுகள் மற்றும் மற்றைய செயற்றிட்டங்களின் கலப்பான அபிவிருத்திகள் என்பனவற்றின் ஆதரவுடன் வெளிநாட்டு

5

நேரடி முதலீடுகளின் முன்னொருபோதுமில்லாத உயர்ந்த ஆண்டு உட்பாய்ச்சல்களுடன் மேலும் வலுவடைந்தது. மேலும், ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் தொகை கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல் மற்றும் வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதியின் பெறுகைகளிலிருந்து கிடைத்த ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட பெறுகை என்பனவும் நிதியியல் கணக்கிற்கு உதவின. இவ்வாண்டுப்பகுதியில் வெளிநாட்டு கடன் உட்பாய்ச்சல்கள் மற்றும் தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளினால் மேற்கொள்ளப்பட்ட மீள்கொடுப்பனவுகள் ஆகிய இரண்டிலும் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. மேலும், வங்கித்தொழில் துறை வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள் ஆகிய வடிவங்களில் அவற்றின் வெளிநாட்டுப் பொறுப்புக்களை அதிகரித்துக் கொண்ட வேளையில் இலங்கை வங்கி 2017ஆம் ஆண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட பன்னாட்டு முறியொன்றினை மீளச்செலுத்தியது. இவ்வபிவிருத்திகள் 2017 மாச்சிலிருந்து மத்திய வங்கியினால் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தேறிய கொள்வனவுகளுடன் சேர்ந்து 2017 இறுதியளவில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைக் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரிப்பதற்கு வழிவகுத்தது.

### 5.7.1 நேரடி முதலீடுகள்

5

**முதலீட்டுச் சபைக் கம்பனிகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகளை உள்ளடக்கிய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2017இல் வரலாற்றிலேயே மிக உயர்ந்த உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன.** இதன்படி, முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டு கடன்கள் உட்பாய்ச்சல் உள்ளிட்ட மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2016இன் ஐ.அ.டொலர் 1,078 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இல் ஐ.அ.டொலர் 1,913 மில்லியனாக விளங்கின. முதலீட்டுச் சபைக் கம்பனிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் நீங்கலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் 2016இன் ஐ.அ.டொலர் 897 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இல் ஐ.அ.டொலர் 1,375 மில்லியன் தொகை கொண்ட குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இவ்வாண்டுப்பகுதியில் முதலீட்டுச் சபைக் கம்பனிகளின் வெளிநாட்டுக் கடன்கள் நீங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் பங்குரிமை மூலதனத்திலுள்ள ஐ.அ.டொலர் 32 மில்லியன் கொண்ட தேறிய முதலீடுகளையும் மீளமுதலீடு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 503 மில்லியன் கொண்ட வருவாய்களையும் கம்பனிகளுக்கிடையிலான ஐ.அ.டொலர் 840 மில்லியன் கொண்ட கம்பனிக்குள்ளான படுகடனையும் உள்ளடக்கியிருந்தன. மேலும், தொடர்பற்ற தரப்பினரிடமிருந்து முதலீட்டுச் சபைக் கம்பனிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் 2016இன் ஐ.அ.டொலர் 181 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இல் ஐ.அ.டொலர் 538 மில்லியனாகக் காணப்பட்டன. வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் முக்கிய உட்பாய்ச்சல்கள் அம்பாந்தோட்டை துறைமுகச் செயற்றிட்டம், கொழும்பு துறைமுக நகரச் செயற்றிட்டம் என்பனவற்றிக்குப் பெறப்பட்ட பெறுகைகளும் உள்ளடக்கியிருந்தன. இரண்டு செயற்றிட்டங்களும் 2018இலும் அதற்கு அப்பாலும் கணிசமானளவு வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவருமென எதிர்பார்க்கப்படுவதன் மூலம் மிகவும் தேவைப்படும் படுகடனை உருவாக்காத வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களினூடாக வெளிநாட்டுத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுக்கு உதவியளிக்கும். துறைவாரியான அடிப்படையில் முக்கியமான உட்பாய்ச்சல்கள் துறைமுகங்கள், வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தியாளர்கள், தொலைத்தொடர்பூட்டல்கள் மற்றும் சுற்றுலாவிடுதி துறையினரிடமிருந்து பெறப்பட்டன. மேலும், தயாரிப்புத் துறை இவ்வாண்டுப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மிதமான தொகையொன்றைப் பெற்றன. மேலும், உடனடி முதலீட்டாளர்களின் நாடுகளின் அடிப்படையில் சீனா, ஹொங்கொங், இந்தியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் 2017இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் முதல் ஐந்து முக்கிய நாடுகளாகக் காணப்பட்டன. அதேவேளை, இலங்கைக் கம்பனிகளினால் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் வடிவில் தேறிய சொத்துக்களின் கையேற்பு 2016இன் ஐ.அ.டொலர் 237 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இல் ஐ.அ.டொலர் 72 மில்லியனாகக் காணப்பட்டன. 2017இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் 2016இன் வழமையான போக்குகளை விட குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வானதாகக் காணப்பட்டமைக்கு இலங்கையின் ஆடைத் துறையினால் செய்யப்பட்ட முக்கிய வெளிநோக்கிய முதலீடுகளே காரணமாகும்.

### 5.7.2 சொத்துப்பட்டியல் முதலீடுகள்

**பங்குரிமை மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள வெளிநாட்டு நேரடி முதலீடுகளல்லா வெளிநாட்டு முதலீடுகளினூடான பங்குரிமை மூலதனத்திலுள்ள சொத்துப்பட்டியல் முதலீடுகள் 2017இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.** இலங்கையின் தொழில்முயற்சியொன்றின் மொத்தப் பங்குடமையில் 10 சதவீதத்திற்கும் குறைவான தனிப்பட்ட வெளிநாட்டு முதலீட்டிற்கான பங்குரிமை மூலதனக் கணக்குகளிலுள்ள சொத்துப்பட்டியல் முதலீட்டினையும் முக்கியமாக வெளிநாட்டு நேரடிக் கொடுக்கல்வாங்கல்கள் என வகைப்படுத்தப்படாத கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள வெளிநாட்டு முதலீடுகளையும் உள்ளடக்குகிறது. இதன்படி, பங்குரிமை மூலதன வடிவிலுள்ள சொத்துப்பட்டியல் முதலீடுகள் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 359 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. இது, ஐ.அ.டொலர் 202 மில்லியன் கொண்ட இரண்டாந்தரச் சந்தைக்கான

தேறிய உட்பாய்ச்சல்களையும் ஐ.அ.டொலர் 157 மில்லியன் கொண்ட முதலாந்தரச் சந்தை உட்பாய்ச்சல்களையும் உள்ளடக்கியிருந்தது. இது பங்குரிமை மூலதன வடிவத்தில் அமைந்த சொத்துப்பட்டியல் முதலீட்டின் தேறிய மிதமான உட்பாய்ச்சலான 2016இன் ஐ.அ.டொலர் 24 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மிகக் கடுமையானதொரு அதிகரிப்பாகும். 2017 மாச்சிலிருந்து முதலீட்டாளர் மனோபாவத்தில் ஏற்பட்ட சாதகமான மாற்றங்கள் அரச பிணையங்கள் சந்தையின் வெளிநாட்டு முதலீடுகளில் பிரதிபலிக்கப்பட்டதுடன் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் சொத்துப்பட்டியல் பங்குரிமை மூலதன முதலீடுகள் இரண்டிலும் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் வெளிநாட்டு முதலீடுகளில் காணப்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சிக்குப் பங்களித்தன.

### படுகடன் பிணையங்கள்

**படுகடன் பிணையங்களிலுள்ள வெளிநாட்டு முதலீடுகள் 2017இல் நிதியியல் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சலாகக் காணப்பட்டன.** ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் தொகை கொண்ட பதினோராவது நாட்டிற்கான பன்னாட்டு முறியினை இலங்கை வெற்றிகரமாக வழங்கிய வேளையில் 2017இல் திறைசேரி முறிகளில் வெளிநாட்டு முதலீடுகள் குறிப்பிடத்தக்க தொகையினைப் பெற்றன. 10 ஆண்டு முதிர்ச்சிக் காலத்துடன் கூடிய பதினோராவது நாட்டிற்கான பன்னாட்டு முறி உலகளாவிய ரீதியில் வட்டி வீதம் அதிகரித்துச் செல்லும் காலப்பகுதியொன்றில் ஒப்பீட்டு ரீதியில் 6.20 சதவீதம் கொண்ட கூப்பன் வீதமொன்றில் வழங்கப்பட்டமையானது இலங்கையின் பேரண்டப் பொருளாதார அடிப்படைகளின் மீது முதலீட்டாளர்கள் தொடர்ந்து நம்பிக்கையை வைத்திருந்தமையை எடுத்துக்காட்டியது. இது, 2016இல் ஐ.அ.டொலர் 361 மில்லியன் தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2017இல் திறைசேரி முறிகளில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 360 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்களின் மூலம் உதவியளிக்கப்பட்டது. பொதுவாக 2017இன் முதற் காலாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 415 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்று காணப்பட்ட போதும் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பனவற்றிலுள்ள வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 413 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைக் கொண்டிருந்தது. 2017ஆம் ஆண்டுப்பகுதியில் படுகடன் பிணையங்கள் தொடர்பிலான முக்கிய வெளிப்பாய்ச்சல் இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட ஐந்தாண்டு முதிர்ச்சியுடன் கூடிய பன்னாட்டு முறிகள் தொடர்பிலானதாகக் காணப்பட்டது. அதேவேளை, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களினால் வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் வடிவிலான சொத்துக்கள் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் மாற்றமின்றிக் காணப்பட்டன.

### 5.7.3 ஏனைய முதலீடுகள்

#### நாணயம் மற்றும் வைப்புக்கள்

**2017இல் நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்புக்கள் வீழ்ச்சியடைந்த வேளையில் நாணயம் மற்றும் வைப்புக்களின் வடிவிலான சொத்துக்கள் அதிகரித்தன. இந்திய ஒதுக்கு**

அட்டவணை 5.9 ஆ
நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ.மில்லியன்

| வகை | 2016 (அ) | | 2017 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப்படுத்துகை | பொறுப்புக்களின் தேறிய உறப்படல் | நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப்படுத்துகை | பொறுப்புக்களின் தேறிய உறப்படல் |
| **ஏனைய முதலீடு (பக்கம் 169 இலிருந்து தொடர்கிறது)** | | | | |
| கடன்கள் | - | 793 | - | 1,839 |
| மத்திய வங்கி | - | -123 | - | 184 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | - | -123 | - | 184 |
| துணைநில் ஒழுங்கு | - | -455 | - | -235 |
| விரிவாக்கப்பட்ட நிதிய வசதி | - | 332 | - | 419 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | -507 | - | 271 |
| குறுங்காலம் | - | -608 | - | -280 |
| நீண்ட காலம் | - | 100 | - | 551 |
| பொது அரசாங்கம் | - | 1,287 | - | 1,215 |
| நீண்ட காலம் | - | 1,287 | - | 1,215 |
| ஏனைய துறைகள் (இ) | - | 136 | - | 170 |
| நீண்ட காலம் | - | 136 | - | 170 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | -118 | 84 | 54 | 309 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | -3 | - | 17 | - |
| குறுங்காலம் | -3 | - | 17 | - |
| ஏனைய துறைகள் (ஈ) | -115 | 84 | 38 | 309 |
| குறுங்காலம் | -115 | 84 | 38 | 309 |
| பெறவேண்டிய/செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள் | 379 | 55 | -31 | 61 |
| மத்திய வங்கி | - | 55 | - | 61 |
| குறுங்காலம் (உ) | - | 55 | - | 61 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 379 | - | -31 | - |
| குறுங்காலம் | 379 | - | -31 | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | | - | | - |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **-472** | | **2,771** | |
| நாணய தங்கம் | - | | - | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | -5 | | 2 | |
| பா.நா. நிதியத்தில் ஒதுக்கு நிலைமை | - | | - | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | -467 | | 2,768 | |
| நாணயமும் வைப்புக்களும் | -1,267 | | 393 | |
| நாணய அதிகார சபைகள் மீதான பெறுகைகள் | -1,365 | | 859 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான பெறுகைகள் | 98 | | -465 | |
| பிணையங்கள் | 800 | | 2,375 | |
| படுகடன் பிணையங்கள் | 800 | | 2,375 | |
| நீண்ட காலம் | 800 | | 2,375 | |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **-2,182** | | **-2,184** | |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| **அரசாங்கத்திற்கான நீண்டகால கடன்கள் (தேறிய)** | | **1,287** | | **1,215** |
| உட்பாய்ச்சல்கள் (பகிர்ந்தளிப்புக்கள்) | | 2,163 | | 2,535 |
| செயற்திட்டக்கடன்கள் | | 1,278 | | 1,535 |
| வெளிநாட்டு நாணய நியதிகளில் நிதியிடல் வசதிகள் | | 700 | | 1,000 |
| நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் கடன்கள் | | 185 | | - |
| மீள்கொடுப்பனவுகள் | | 876 | | 1,320 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) அரசுக்குச் சொந்தமான வர்த்தக தொழில்முயற்சிகள் மற்றும் தனியார்துறை கம்பனிகளை உள்ளடக்குகின்றது.
(ஈ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக கொடுகடன்களை உள்ளடக்குகின்றது.
(உ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் தேறிய கொடுக்கல்வாங்கல்கள்

*மூலம் :* இலங்கை மத்திய வங்கி

வங்கியின் ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட பன்னாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகளின் எஞ்சியுள்ள மீதிகளின் முதிர்ச்சியுடன் மத்திய வங்கியின் நாணய மற்றும் வைப்புப் பொறுப்புக்கள் வீழ்ச்சியடைந்தன. இதன்படி, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் நாணய மற்றும் வைப்புப் பொறுப்புக்கள் ஐ.அ.டொலர் 173 மில்லியனால் அதிகரித்த வேளையில் சொத்துக்கள் வடிவிலான நாணயம் மற்றும் வைப்புக்கள் ஐ.அ.டொலர் 78 மில்லியனால் அதிகரித்தன.

### கடன்கள்

**நிதியியல் கணக்கிற்கான மொத்த கடன் உட்பாய்ச்சல்கள் 2017இல் அரசு மத்திய வங்கி மற்றும் தனியார் துறைக்கான கணிசமான கடன் உட்பாய்ச்சல்களின் காரணமாக குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாகக் காணப்பட்டன.** அரசாங்கத்திற்கான வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 2,535 மில்லியனாக விளங்கி வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதியின் இரண்டு தொகுதிகளிலிருந்து பெறப்பட்ட ஐ.அ.டொலர் ஒரு பில்லியன் கொண்ட தொகையினையும் நீண்ட காலச் செயற்றிட்டக் கடன்களின் வடிவிலமைந்த எஞ்சிய தொகையினையும் உள்ளடக்கியிருந்தது. 2017ஆம் ஆண்டுப்பகுதியில் அரச செயற்றிட்டத்திற்கான முக்கிய உட்பாய்ச்சல்கள் தென்பகுதி விரைவுப்பாதைப் பிரிவு 1, 2 மற்றும் 4 இன் விரிவாக்கக் கட்டுமானத்திற்கான கடன் பெறுகைகளும் வெளிச்சுற்று நெடுஞ்சாலைச் செயற்றிட்டம் கட்டம் III இன் நிருமாணம் ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பிரிவு 3 அம்பாந்தோட்டை மைய அபிவிருத்திச் செயற்றிட்டம், இரண்டாவது நலத் துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் கொழும்புப் பெரும்பாக பரிமாற்ற மற்றும் விநியோகத்திலான இழப்புக்களைக் குறைக்கும் செயற்றிட்டம், நீர்வழங்கல் மற்றும் வடிகால் மேம்பாட்டுச் செயற்றிட்டம் மற்றும் அணைப் பாதுகாப்பு மற்றும் நீர் மூலவளத் திட்டமிடல் செயற்றிட்டத்திற்கான மேலதிக நிதியிடல் என்பனவற்றிற்கான கடன் பெறுகைகளை உள்ளடக்கியிருக்கிறது. அதேவேளை, மத்திய வங்கி இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஐ.அ.டொலர் 419 மில்லியனை கொண்ட இரண்டு தொகுதிகளை பெற்றுக்கொண்டது. தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகள் என்பனவற்றிற்கான கடன் உட்பாய்ச்சல் நியதிகளில் தனியார் துறையானது 2017இல் ஐ.அ.டொலர் 535 மில்லியனைப் பெற்றதுடன் இவ்வாண்டுப்பகுதியில் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளுக்கு ஐ.அ.டொலர் 182 மில்லியன் கொண்ட கடன் உட்பாய்ச்சலொன்று காணப்பட்டது.



அட்டவணை 5.10
2017 இல் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளின் மூலம் நிதியிடப்பட்ட பிரதான செயற்றிட்டங்கள்

| கடன் வழங்குநரும் செயற்றிட்டமும் | வழங்கப்பட்ட தொகை ஐ.அ.டொ. மில்லியன் |
|---|---|
| **அரசாங்க திட்டங்கள் - மொத்தம்** | **1,535** |
| இதில் | |
| **சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி** | **491** |
| இதில் | |
| தெற்கு விரைவுப்பாதையின் நீடிப்பு கட்டுமானம் - பகுதி 1 | 147 |
| தெற்கு விரைவுப்பாதையின் நீடிப்பு கட்டுமானம் - பகுதி 4 | 107 |
| வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை கட்டுமானச் செயற்றிட்டம் - கட்டம் III | 79 |
| தெற்கு விரைவுப்பாதையின் நிட்டிப்பு கட்டுமானம் - பகுதி 2 | 62 |
| அம்பாந்தோட்டை மைய அபிவிருத்திச் செயற்றிட்டம் | 59 |
| பெரும் குருநாகல நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அமைப்புச் செயற்றிட்டம் | 18 |
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | **360** |
| இதில் | |
| ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீடு நிகழ்ச்சித்திட்டம் - தொகுதி 3 | 91 |
| தூய வலு மற்றும் வலையமைப்பு செயற்றிறன் மேம்பாடு செயற்றிட்டம் | 38 |
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு கடன் வசதி | 38 |
| ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீடு நிகழ்ச்சித்திட்டம் - தொகுதி 2 | 30 |
| கல்வித் துறை அபிவிருத்தி செயற்றிட்டம் | 29 |
| **பன்னாட்டு அபிவிருத்திச் சபை** | **207** |
| இதில் | |
| இரண்டாம் நலத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | 62 |
| நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாடு செயற்றிட்டம் | 35 |
| அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்களின் திட்டமிடல் செயற்றிடத்திற்கான மேலதிக நிதியிடல் | 25 |
| வானிலை மீட்டெழுச்சி மேம்படுத்தல் முகாமைத்துவச் செயற்றிட்டம் | 20 |
| திறன் விருத்திச் செயற்றிட்டம் - பகுதி (அ) | 19 |
| **யப்பானிய அரசாங்கம்** | **156** |
| இதில் | |
| பெரும் கொழும்பு கடத்தல் மற்றும் வழங்கல் இழப்புக்களை குறைத்தல் செயற்றிட்டம் | 52 |
| களனி ஆற்றிற்கு மேலான புதிய பாலக் கட்டுமானச் செயற்றிட்டம் | 48 |
| தேசிய வீதி வலையமைப்பின் பாரிய பாலங்களின் கட்டுமானச் செயற்றிட்டம் | 18 |
| **இந்திய அரசாங்கம்** | **62** |
| இதில் | |
| வடக்கு புகையிரத சேவைகளின் மீள்நிலைப்படுத்தல் | 35 |
| இரு முற்போக்கான கரைகடந்த கண்காணிப்பு கலன்களின் கொள்வனவு | 17 |
| **டெய்ச் வங்கி ஏஜி** | **35** |
| 537 இரும்பு கோள் பாலங்களின் கட்டுமானம் | 35 |
| **கலியோன் கிரெடிட் அக்றிகோல்** | **28** |
| இதில் | |
| பெரும் மாத்தளை நீர் வழங்கல் செயற்றிட்டத்தின் நடைமுறைபடுத்தல் | 15 |
| **ஸ்பெயின் இராச்சியம்** | **25** |
| இதில் | |
| மூன்று மேம்பாலங்களின் வழங்கல் | 17 |
| **அரசிற்குச் சொந்தமான வர்த்தக தொழில்முயற்சிகள் - மொத்தம்** | **182** |
| இலங்கை எயர்லைன்ஸ் | 125 |
| அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செயற்திட்டம் - கட்டம் II | 57 |

மூலம்: தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

**அனைத்துத் துறையினராலும் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவுகள் 2017இல் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாகக் காணப்பட்டது.** மொத்த வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவுகளில் அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட தொகை 2017இல்

ஐ.அ.டொலர் 1,320 மில்லியனாக அமைந்து ஐ.அ.டொலர் 280 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதியின் பேரிலான மீள்கொடுப்பனவுகளையும் நீண்ட செயற்றிட்டக் கடன்கள் தொடர்பிலான மீள்கொடுப்பனவுகளின் பேரிலான எஞ்சிய தொகையினையும் உள்ளடக்கியது. மத்திய வங்கி, பன்னாட்டு நாணய நிதிய துணைநில் ஒழுங்கு வசதியின் கீழ் 2009 - 2012 காலப்பகுதியின் மீள்கொடுப்பனவுகளை 2017 யூன் அளவில் முழுமையாக் செலுத்தியது. அதேவேளை, வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் 2017இல் ஐ.அ.டொலர் 271 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தது. வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவுகள் தனியார் துறையினாலும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளினாலும் செலுத்தப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவுகள் முறையே இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 362 மில்லியனாகவும் ஐ.அ.டொலர் 186 மில்லியனாகவும் விளங்கின.

**பொதுவாக கடன்கள் வடிவில் நிதியியல் கணக்கிற்கேற்பட்ட உட்பாய்ச்சல்கள் கடன் மீள்கொடுப்பனவுகளிலும் பார்க்க உயர்வானதாக இருந்ததுடன் இதன் விளைவாக வெளிநாட்டுக் கடன்களின் தேறிய உட்பாய்ச்சல் 2016 உடன் ஒப்பிடுகையில் 2017இல் உயர்வானதாகக் காணப்பட்டது.** 2016இன் ஐ.அ.டொலர் 793 மில்லியன் கொண்ட தேறிய கடன் உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2017இல் நிதியியல் கணக்கிற்கான கடன்களின் தேறிய உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 1,839 மில்லியனாக விளங்கியது. இவ்வதிகரிப்பு அரசாங்கம் மத்திய வங்கி, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை என்பனவற்றினால் பெறப்பட்ட முறையே ஐ.அ.டொலர் 1,215 மில்லியன், ஐ.அ.டொலர் 184 மில்லியன், ஐ.அ.டொலர் 271 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 173 மில்லியன் ஆகிய தொகைகளை உள்ளடக்கியிருந்த வேளையில் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளினால் பதிவுசெய்யப்பட்ட தேறிய கடன்களின் வெளிப்பாய்ச்சல் 2017இல் ஐ.அ.டொலர் 4 மில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டது.

### பெறத்தக்க/ கொடுபடத்தக்க வர்த்தகக் கொடுகடன் முற்பணங்கள் மற்றும் ஏனைய கணக்குகள்

**வதிவற்றோரிடமிருந்து பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் முற்பணங்களும் வதிவற்றோருக்கு வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் முற்பணங்களும் 2017இல் அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.** வதிவற்றோரிடமிருந்து பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடன்களும் முற்பணங்களும் உயர்வடைந்தமைக்கு 2017இல் செய்யப்பட்ட மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் கடன் அடிப்படையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட உயர்ந்தளவு எண்ணெயே முக்கிய காரணமாகும். பெற்றோலிய கூட்டுத்தாபனம் தவிர்ந்த தனியார் கம்பனிகளினால் பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடன் 2016இல் காணப்பட்ட குறைப்புடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டுப்பகுதியில் காணப்பட்ட இறக்குமதிப் பொருட்களில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் அதிகரித்தது. இதன் விளைவா, வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களில் தேறிய நிகழ்தகவுகள் 2016இன் ஐ.அ.டொலர் 84 மில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2017இல் ஐ.அ.டொலர் 309 மில்லியனாகக் காணப்பட்டது. அதேவேளை, வதிவற்றோருக்கு இலங்கையின் கம்பனிகளினாலும் வங்கித்தொழில் துறையினாலும் வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன்களும் முற்பணங்களும் 2016இன் ஐ.அ.டொலர் 118 மில்லியன் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 54 மில்லியனால் வீழ்ச்சியடைந்தன. 2017இல் வதிவற்றோருக்கான வர்த்தகக் கொடுகடன் முக்கியமாக ஆடைத் துறையிலுள்ள இலங்கைக் கம்பனிகளினால் முக்கியமாக வழங்கப்பட்டன. இதே வேளையில் மத்திய வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் பிரதானமாக ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறுப்புக்கள் உள்ளடங்களான ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள் ஐ.அ.டொலர் 61 மில்லியனால் அதிகரித்தபோது வைப்புக்களை எற்கும் கூட்டுத்தாபனங்களினால் பெறத்தக்க ஏனைய கணக்குகள் 2017இல் ஐ.அ.டொலர் 31 மில்லியனால் குறைவடைந்தது.

### 5.7.4 ஒதுக்குச் சொத்துக்கள்

**ஒதுக்குச் சொத்து நிலைமையில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் ஒதுக்குச் சொத்துக்களுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன.** ஐ.அ.டொலர் 2,721 மில்லியன் கொண்ட ஒதுக்குச் சொத்துக் கொடுக்கல்வாங்கல்களில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு 2016இல் காணப்பட்ட ஐ.அ.டொலர் 472 மில்லியன் கொண்ட ஒதுக்குச் சொத்துக் கொடுக்கல்வாங்கல்களில் ஏற்பட்ட தேறிய வீழ்ச்சிக்கு பெருமளவு மாறானதாகும். ஒதுக்குச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு ஐ.அ.டொலர் 2,375 மில்லியன் கொண்ட நிலையான வருமானப் பிணையக் கொடுக்கல்வாங்கல்களில் ஏற்பட்ட அதிகரிப்பினையும் ஐ.அ.டொலர் 393 மில்லியனால் அதிகரித்த நாணய மற்றும் வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பினையும் உள்ளடக்கியிருக்கிறது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளுக்கான அதிகரித்த உட்பாய்ச்சல்கள் இவ்வாண்டுப்பகுதியில் மத்திய வங்கியின் ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட நீண்ட கால நிலையான வருமானப் பிணையங்களின் உயர்ந்த முதலீட்டிற்கு வசதியளித்தது. 2016ஐப் போன்றே 2017ஆம் ஆண்டுப்பகுதியிலும் நாணய தங்கத்திலான கொடுக்கல்வாங்கல்கள் எதுவும் இடம்பெறவில்லை.

## 5.8 திரண்ட நிலுவை

**நிதியியல் கணக்கில் ஏற்பட்ட முன்னேற்றங்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் சென்மதி நிலுவை இரண்டு தொடர்ச்சியான ஆண்டுகளில் திரண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்த பின்னர் 2017இல் சென்மதி நிலுவை திரண்ட மிகையொன்றினைப் பதிவுசெய்தது.** நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகள் உட்பட நிதியியல் கணக்கிற்கான குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்கள், வெளிநாட்டு நாணயக் கால நிதியிடல் வசதிகளிலிருந்தான பெறுகைகள், அரசாங்கத்தினால் கடனாகப் பெறப்பட்ட தேறிய செயற்றிட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டக் கடன்கள், இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல், இலங்கை மத்திய வங்கியினால் தேறிய விதத்தில் ஈர்த்துக் கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க வெளிநாட்டுச் செலாவணியின் என்பன தேறிய பன்னாட்டு ஒதுக்குகளை 2016 இறுதியின் ஐ.அ.டொலர் 4,529 மில்லியனிலிருந்து 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 6,597 மில்லியனுக்கு அதிகரித்தது. இதன் விளைவாக இரு காலப்பகுதிகளிலும் தேறிய பன்னாட்டு ஒதுக்கில் ஏற்பட்ட மாற்றங்களுக்கிடையிலான வேறுபாடாக விளங்கும் சென்மதி நிலுவையின் மிகை 2016இன் ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட பற்றாக்குறைக்கெதிராக 2017இல் ஐ.அ.டொலர் 2,068 மில்லியனாக விளங்கியது.

## 5.9 பன்னாட்டு முதலீட்டு நிலைமை

5

**உலகின் எஞ்சிய பகுதிக்கும் நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிலுள்ள நாட்டின் நிலைமையின் பெறுமதி மற்றும் உள்ளமைப்பினைக் காட்டும் பன்னாட்டு முதலீட்டு நிலைமையின் நியதிகளில் இலங்கையின் வெளிநாட்டு பொறுப்பு நிலைமையும் அதேபோன்று சொத்து நிலைமையும் 2016 உடன் ஒப்பிடுகையில் 2017 இறுதியில் அதிகரித்தன.** மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 12,366 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு ஒதுக்குச் சொத்து நிலைமையில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாக அமைந்த வேளையில் நேரடி முதலீட்டின் சொத்து நிலைமை வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் நாணய மற்றும் வைப்புக்கள் என்பன இவ்வதிகரிப்பிற்குப் பங்களித்தன. அதேவேளை, மொத்த வெளிநாட்டு பொறுப்பு நிலைமை 2016 இறுதியின் ஐ.அ.டொலர் 54,857 மில்லியனிலிருந்து 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 60,721 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு நேரடி முதலீடுகள், சொத்துப்பட்டியல் முதலீடுகள், வெளிநின்ற கடன் பொறுப்புக்கள் மற்றும் வர்த்தகக் கொடுகடன் நிலைமைகள் என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. பன்னாட்டு முதலீட்டு நிலைமையின் தேறிய பொறுப்பு நிலைமை 2016 இறுதியின் ஐ.அ.டொலர் 44,591 மில்லியனிலிருந்து 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 48,355 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு வெளிநாட்டுச் சொத்து நிலைமையில் ஏற்பட்ட அதிகரிப்பினை

அட்டவணை 5.11
**பன்னாட்டு முதலீட்டு நிலைமை**

ஐ.அ.டொ.மில்லியன்
(கால முடிவிலான நிலைமை)

| வகை | 2016 (அ) | | 2017 (ஆ) | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| **நேரடி முதலீடு (இ)** | **1,219** | **9,845** | **1,278** | **11,070** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதிப் பங்குகள் | 1,214 | 7,020 | 1,268 | 7,406 |
| படுகடன் கருவிகள் | 5 | 2,825 | 9 | 3,664 |
| **சொத்துப்பட்டியல் முதலீடுகள்** | **-** | **13,684** | **-** | **15,578** |
| மூலதனம் மற்றும் முதலீட்டு நிதிப் பங்குகள் | | 1,419 | | 1,491 |
| ஏனைய துறைகள் | | 1,419 | | 1,491 |
| படுகடன் பிணையங்கள் (ஈ) | - | 12,265 | - | 14,087 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | 2,190 | - | 1,666 |
| நீண்ட காலம் | - | 2,190 | - | 1,666 |
| பொது அரசாங்கம் | | 9,903 | | 12,244 |
| குறுங்காலம் | | 80 | | 167 |
| நீண்ட காலம் | | 9,823 | | 12,077 |
| ஏனைய துறைகள் | | 172 | | 177 |
| நீண்ட காலம் | | 172 | | 177 |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு** | **3,028** | **31,329** | **3,130** | **34,073** |
| **நாணயமும் வைப்புக்களும்** | **706** | **2,442** | **784** | **2,213** |
| மத்திய வங்கி | | 403 | | 1 |
| குறுங்காலம் | | 3 | | 1 |
| நீண்ட காலம் | | 400 | | - |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 706 | 2,039 | 784 | 2,212 |
| குறுங்காலம் | 535 | 2,039 | 546 | 2,212 |
| நீண்ட காலம் | 171 | | 238 | |
| **கடன்கள்** | | **26,342** | | **28,912** |
| மத்திய வங்கி | | 554 | | 765 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | | 554 | | 765 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | | 4,562 | | 4,833 |
| குறுங்காலம் | | 3,209 | | 2,929 |
| நீண்ட காலம் | | 1,354 | | 1,904 |
| பொது அரசாங்கம் | | 17,295 | | 19,201 |
| நீண்ட காலம் | | 17,295 | | 19,201 |
| ஏனைய துறைகள் (உ) | | 3,931 | | 4,114 |
| நீண்ட காலம் | | 3,931 | | 4,114 |
| **வர்த்தக கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள்** | **707** | **1,480** | **761** | **1,790** |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 93 | | 109 | |
| குறுங்காலம் | 93 | | 109 | |
| ஏனைய துறைகள் (ஊ) | 614 | 1,480 | 652 | 1,790 |
| குறுங்காலம் | 614 | 1,480 | 652 | 1,790 |
| **பெறவேண்டிய/செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள்** | **1,615** | **533** | **1,584** | **594** |
| மத்திய வங்கி (எ) | | 533 | | 594 |
| குறுங்காலம் | | 533 | | 594 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 1,615 | | 1,584 | |
| குறுங்காலம் | 1,615 | | 1,584 | |
| **சிறப்பு எடுப்பனவு உரிமைகள்** | | **532** | | **563** |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **6,019** | | **7,959** | |
| நாணய தங்கம் | 830 | | 928 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 2 | | 4 | |
| ப.நா.நி. இல் ஒதுக்கு நிலைமை | 64 | | 68 | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 5,122 | | 6,958 | |
| நாணயமும் வைப்புக்களும் | 2,644 | | 3,037 | |
| நாணய அதிகார சபைகள் மீதான பெறுகைகள் | 802 | | 1,660 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான பெறுகைகள் | 1,842 | | 1,377 | |
| பிணையங்கள் | 2,478 | | 3,921 | |
| படுகடன் பிணையங்கள் | 2,478 | | 3,921 | |
| **மொத்த சொத்துக்கள்/பொறுப்புக்கள்** | **10,266** | **54,857** | **12,366** | **60,721** |
| **தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை** | | **-44,591** | | **-48,355** |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| பமுறி-முதிர்ச்சி அடிப்படையிலான பகுப்பாய்வு | 10,266 | 54,857 | 12,366 | 60,721 |
| குறுங்காலம் | 6,395 | 8,763 | 6.925 | 9,184 |
| நீண்ட காலம் | 3,871 | 46,095 | 5,441 | 51,537 |

(அ) திருத்தப்பட்டது

*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

(ஆ) தற்காலிகமானது

(இ) முதலீட்டு சபை, கொழும்புப் பங்கு பரிவர்த்தனை மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளின் நேரடி முதலீட்டு நிலைமைகளினை உள்ளடக்குகின்றது.

(ஈ) உள்நாட்டு நாணய வெளியீடுகள் புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட அதேவேளை வெளிநாட்டு நாணய படுகடன் வெளியீடுகள் சந்தைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

(உ) அரசிற்கு சொந்தமான வர்த்தக தொழில் முயற்சிகளால் பெறப்பட்ட செயற்திட்ட கடன்களின் வெளிநின்ற நிலைகளை உள்ளடக்குகின்றது.

(ஊ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகள் என்பவற்றின் வெளிநின்ற வர்த்தக கொடுகடன் நிலைமையை உள்ளடக்குகின்றது.

(எ) மத்திய வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் வெளிநின்ற நிலைமை

விஞ்சிக் காணப்பட்ட வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமையில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். இலங்கையின் தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை தொடர்ந்தும் எதிர்மறை நிலைமையில் காணப்பட்ட போதும் நேரடி முதலீடுகள் வடிவில் காணப்பட்ட உட்பாய்ச்சல்களும் நிதியியல் கணக்கிற்கான படுகடனை உருவாக்காத ஏனைய உட்பாய்ச்சல்களும் இவ்வாண்டுப்பகுதியில் முன்னேற்றங்களைக் காட்டின.

### 5.9.1 நேரடி முதலீட்டு நிலைமை

**நேரடி முதலீடுகளின் குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல் 2017 இறுதியில் நேரடி முதலீட்டுப் பொறுப்பு நிலைமையில் அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தது.** இதன்படி, வருடாந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் வரலாற்றிலே மிக உயர்ந்த உட்பாய்ச்சல்களையும் நேரடி முதலீட்டுப் பங்குரிமை மூலதனத்திலும் அதேபோன்று வெளிநின்ற கம்பனிக்கிடையிலான படுகடன் நிலைமையிலும் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் நேரடி முதலீட்டு பொறுப்பு நிலைமை 2016 இறுதியின் ஐ.அ.டொலர் 9,845 மில்லியனிலிருந்து 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 11,070 மில்லியனுக்கு அதிகரித்தது. பங்குரிமை மூலதன வடிவத்தில் நேரடி முதலீடுகளின் மதிப்பீட்டு இழப்புகள் 2016இல் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வர்த்தகப்படுத்தத்தக்க பங்குரிமைப் பிணையங்களின் குறிப்பிடத்தக்க மதிப்பீட்டு இழப்புகளுடன் ஒப்பிடுகையில் 2017இல் மிதமானதாகக் காணப்பட்டது. முதலீடுகளின் நேரடி நாட்டின் அடிப்படையில் நெதர்லாந்து, இந்தியா, சீனா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் என்பன முதல் ஐந்து நாடுகளாக விளங்கி 2017 இறுதியில் மிக உயர்ந்த நேரடி முதலீட்டு பொறுப்பு இருப்பு நிலைமைகளைக் கொண்டிருந்தன. அதேவேளை, இலங்கையின் வதிவோரினால் வெளிநாட்டில் வைத்திருக்கப்பட்ட நேரடி முதலீடுகள் 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 1,278 மில்லியன் கொண்ட வெளிநின்ற நேரடி முதலீட்டுச் சொத்து நிலைமையினைப் பதிவுசெய்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டின.

### 5.9.2 சொத்துப்பட்டியல் முதலீட்டு நிலைமை

**பதினோராவது நாட்டிற்கான பன்னாட்டு முறிகளிலிருந்தான பெறுகைகள் திறைசேரி முறிகளில் வெளிநின்ற வெளிநாட்டு முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக சொத்துப்பட்டியல் முதலீட்டு நிலைமை அதிகரித்த வேளையில் வங்கித்தொழில் துறையின் வெளிநின்ற படுகடன் பிணையங்களின் நிலைமை 2017 இறுதியில் குறைவடைந்தது.** இதன்படி, சொத்துப்பட்டியல் முதலீட்டு பொறுப்புக்களின் இருப்பு நிலைமை 2016 இறுதியில் ஐ.அ.டொலர் 13,684 மில்லியனிலிருந்து 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 15,578 மில்லியனுக்கு அதிகரித்தது. சொத்துப்பட்டியல் முதலீட்டு பங்குரிமை மூலதன பொறுப்பு நிலைமை ஆண்டின் இறுதியில் ஐ.அ.டொலர் 1,491 மில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தமைக்கு கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய உட்பாய்ச்சலில் அதிகரிப்புக் காணப்பட்டமைக்கிடையிலும் குறிப்பிடத்தக்க மதிப்பீட்டு இழப்புக்கள் காரணமாக அமைந்தது. அதேவேளை, இவ்வாண்டுப்பகுதியில் இலங்கை வங்கியினால் ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட பன்னாட்டு முறி தீர்ப்பனவு செய்யப்பட்டமையின் விளைவாக வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் படுகடன் பிணையங்கள் பொறுப்பு நிலைமை வீழ்ச்சியைப் பதிவுசெய்த போதிலும் சந்தை விலைகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க இலாபத்தன்மை காரணமாக வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தைப் பெறுமதி 2017 இறுதியின் ஐ.அ.டொலர் 9,650 மில்லியன் கொண்ட முகப்புப் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 10,347 மில்லியனாகக் காணப்பட்டது. 2017ஆம் ஆண்டுப்பகுதியில் படுகடன் பிணையங்கள் பொறுப்பு நிலைமை அதிகரித்தமைக்கு நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்கல்களினூடாக ஐ.அ.டொலர் 1,500 மில்லியன் வரையிலான பெறுகைகளும் திறைசேரி முறிகளின் வெளிநின்ற வெளிநாட்டு முதலீட்டு நிலைமையில் ஏற்பட்ட அதிகரிப்புக்களும் முக்கிய காரணங்களாக அமைந்தன.

### 5.9.3 ஏனைய முதலீட்டு நிலைமை

#### நாணயம் மற்றும் வைப்புக்கள்

**நாணயம் மற்றும் வைப்புச் சொத்து நிலைமை அதிகரித்த வேளையில் பொறுப்பு நிலைமைகள் 2017 இறுதியில் வீழ்ச்சிடைந்தன.** இலங்கை மத்திய வங்கியின் நாணய மற்றும் வைப்புப் பொறுப்பு நிலைமை வீழ்ச்சியடைந்தமைக்கு 2017 மாச்சில் இந்திய றிசேர்வ் வங்கியுடனான ஐ.அ.டொலர் 400 மில்லியன் தொகை கொண்ட பன்னாட்டு பரஸ்பர ஒழுங்குகள் தீர்ப்பனவு செய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும். வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் நாணய மற்றும் வைப்புப் பொறுப்பு நிலைமை ஐ.அ.டொலர் 2,212 மில்லியனுக்கு அதிகரித்த வேளையில் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் சொத்து நிலைமை, 2017 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் மொத்த சொத்துக்களில் ஏற்பட்ட மிதமான அதிகரிப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 784 மில்லியனுக்கு அதிகரித்தது.

#### கடன்கள்

**பன்னாட்டு முதலீட்டு நிலைமையில் காணப்பட்ட வெளிநாட்டுக் கணக்குப் பொறுப்பு நிலைமை 2017 இறுதியில் அதிகரித்தமைக்கு அரசாங்கத்தினதும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களினதும் மத்திய வங்கியினதும் வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமையில் ஏற்பட்ட அதிகரிப்பே**

5

**முக்கிய காரணமாகும்.** இதன்படி, வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமை 2016 இறுதியின் ஐ.அ.டொலர் 26,342 மில்லியனிலிருந்து 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 28,912 மில்லியனுக்கு அதிகரித்தது. அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமை 2016 இறுதியின் ஐ.அ.டொலர் 17,295 மில்லியனிலிருந்து 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 19,201 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு புதிய செயற்றிட்டக் கடன்களும் இரண்டு புதிய வெளிநாட்டு நாணயக் கால நிதியிடல் வசதிகளின் பேரிலான ஐ.அ.டொலர் 1 மில்லியன் கொண்ட பெறுகைகளும் முக்கிய காரணங்களாக அமைந்தன. மொத்த வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்களில் ஏறத்தாழ 38 சதவீதத்தினை உள்ளடக்கியிருக்கும் ஐ.அ.டொலர் தவிர்ந்த ஏனைய வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட வெளிநின்ற அரச கடன்கள் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் அனைத்து முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கும் எதிராக ஐ.அ.டொலர் குறிப்பிடத்தக்களவிற்கு தேய்வடைந்தமையின் விளைவாக ஐ.அ.டொலரிற்கு மாற்றப்படும் பொழுது குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் துறை கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்களும் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தன. மேலும், மத்திய வங்கியின் வெளிநின்ற கடன் நிலைமை அதிகரித்தமைக்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் மூன்றாவது மற்றும் நான்காவது தொகுதிகள் பெறப்பட்டமை காரணமாக இருந்த வேளையில் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் பன்னாட்டு நாணய நிதியம் - துணைநில் ஒழுங்கு வசதிகளின் எஞ்சிய வெளிநின்ற பொறுப்புக்கள் முழுமையாக மீளச்செலுத்தப்பட்டன.

5

### வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள்

**பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் முற்பணங்களின் வெளிநின்ற பொறுப்பு நிலைமை மற்றும் வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களுக்கு வழங்கப்பட்ட சொத்து நிலைமையும் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் அதிகரித்தன.** தனியார் துறையின் வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பண பொறுப்பு நிலைமை 2016 இறுதியின் ஐ.அ.டொலர் 1,480 மில்லியனிலிருந்து 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 1,790 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற வர்த்தகக் கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணச் சொத்து நிலைமைகளின் பேரிலான வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் துறையினரால் வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் 2016 இறுதியின் ஐ.அ.டொலர் 707 மில்லியனிலிருந்து 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 761 மில்லியனுக்கு அதிகரித்தது.


### பெறத்தக்க/ கொடுபடத்தக்க ஏனைய கணக்குகள் மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள்

**2017இல் பெறத்தக்க ஏனைய கணக்குகளின் வெளிநின்ற நிலைமை வீழ்ச்சியடைந்த வேளையில் கொடுபடத்தக்க ஏனைய கணக்குகள் அதிகரித்தன.** வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் குறுங்கால வெளிநின்ற நிலைமைகளை உள்ளடக்கிய பெறத்தக்க ஏனைய கணக்குகளின் வெளிநின்ற நிலைமை 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 1,584 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, மத்திய வங்கியின் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்துடன் தொடர்பான பொறுப்புக்களை உள்ளடக்கிய ஏனைய கொடுபடத்தக்க கணக்குகளின் வெளிநின்ற நிலைமை 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 594 மில்லியனுக்கு அதிகரித்தது. மேலும், சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் வெளிநின்ற நிலைமை 2016 இறுதியின் ஐ.அ.டொலர் 532 மில்லியனிலிருந்து 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 563 மில்லியனுக்கு அதிகரித்தது.

### 5.9.4 ஒதுக்குச் சொத்து நிலைமை

**இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் கணியம்சார் மற்றும் தரம்சார் நியதிகள் இரண்டிலும் மேம்பட்டு 2016 இறுதியில் ஐ.அ.டொலர் 6.0 பில்லியனிலிருந்து 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 8.0 பில்லியனுக்கு ஆரோக்கியமான மட்டமொன்றினை அடைந்தது.** மொத்த அலுவல்சார் ஒதுக்கு நிலைமை மேம்பட்டமைக்கு உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணி ஈர்த்துக் கொள்ளப்பட்டமையும் நாட்டிற்கான பன்னாட்டு முறி வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதி பன்னாட்டு நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் தொழிற்பாடுகளை சீன மேர்ச்சன்ட் போர்ட் ஹோல்டிங்ஸ் கம்பனி லிமிடெட்டிற்கு கையளித்ததன் பேரிலான முதலீட்டுப் பெறுகைகளின் முதலாவது தொகுதி கிடைக்கப்

வரைபடம் 5.12
காலாண்டுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.12
மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை

(கால இறுதியிலான நிலைமை)

| | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 (அ) |
| 1. அரசின் வெளிநாட்டு சொத்துக்கள் | 465 | 635 | 470 | 289 | 488 |
| 2. மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்துக்கள் | 7,030 | 7,573 | 6,834 | 5,730 | 7,470 |
| 3. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (1+2) | 7,495 | 8,208 | 7,304 | 6,019 | 7,959 |
| 4. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டு சொத்து | 1,078 | 1,676 | 2,033 | 2,414 | 2,478 |
| 5. மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் (3+4) (ஆ) | 8,573 | 9,884 | 9,337 | 8,433 | 10,436 |
| 6. ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புக்கள் (இ) | 2,347 | 1,691 | 2,275 | 1,490 | 1,361 |
| 7. தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் (3-6) | 5,148 | 6,517 | 5,029 | 4,529 | 6,597 |
| 8. திரண்ட நிலுவை (ஈ) | 985 | 1,369 | -1,489 | -500 | 2,068 |
| 9. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மாதங்களின்படி | | | | | |
| 9.1 பொருட்களின் இறக்குமதிகள் | 5.0 | 5.1 | 4.6 | 3.8 | 4.6 |
| 9.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 4.2 | 4.3 | 3.8 | 3.1 | 3.8 |
| 10. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மாதங்களின்படி | | | | | |
| 10.1 பொருட்களின் இறக்குமதிகள் | 5.7 | 6.1 | 5.9 | 5.3 | 6.0 |
| 10.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 4.8 | 5.1 | 4.9 | 4.3 | 4.9 |

(அ) தற்காலிகமானது
(ஆ) 'வெளிநாட்டில் நேரடி முதலீடு' மற்றும் 'வழங்கப்பட்ட வர்த்தக்கடன் மற்றும் முற்பணங்கள்' வடிவிலுள்ள வெளிநாட்டுச் வங்கி சொத்துக்கள் நீங்கலாக
(இ) வெளிநின்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நீங்கலாக மத்திய வங்கியின் மொத்த வெளிநின்ற படுகடன்
(ஈ) ஆண்டுக்காலப்பகுதியில் தேறிய பன்னாட்டு ஒதுக்கு நிலமையின் மாற்றம்

*மூலம்:* இலங்கை மத்திய


பெற்றமை போன்ற ஏனைய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் முக்கிய காரணங்களாக அமைந்தன. 2017 இறுதியில் நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டம் 4.6 மாத இறக்குமதிப் பொருட்களுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தது. இவ்வாண்டுப்பகுதியில் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 1,664 மில்லியன் கொண்ட உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவுகள் மற்றும் உள்நாட்டு வங்கிகளுடனான ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகள் இளைப்பாறியமை என்பனவற்றின் முன்னேற்றங்கள் காரணமாக ஒதுக்குகளின் தரத்தில் குறிப்பிடத்தக்க மேம்பாடொன்று அவதானிக்கப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணியின் நேரடி ஈர்ப்பினூடாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் கட்டியெழுப்பப்பட்டமையானது பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேறிய பன்னாட்டு ஒதுக்கு இலக்குகளை மத்திய வங்கி பூர்த்தி செய்வதனை இயலுமைப்படுத்தியது. பன்னாட்டு ஒதுக்குகளில் காணப்பட்ட கணியம்சார் மற்றும் தகைமைசார் மேம்பாடுகள் இரண்டினையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் குறுங்காலப் படுகடன் மற்றும் பொறுப்புக்களின் சதவீதமாக ஒதுக்குகளின் போதுமாந்தன்மையானது 2017 இறுதியில் 63.3 சதவீதத்திற்கு மேம்பட்டது. அதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2016 இறுதியின் ஐ.அ.டொலர் 8.4 பில்லியனிலிருந்து 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 10.4 பில்லியனுக்கு அதிகரித்து 6.0 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்குச் சமமானதாக விளங்கியது. குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்த வேளையில் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 2016 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2017 இறுதியில் அதே மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது.

## 5.10 வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவு

### 5.10.1 வெளிநாட்டுப் படுகடன்

**அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2017இல் உயர்வடைந்தது.** நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 5.4 பில்லியனால் ஐ.அ.டொலர் 51,824 மில்லியனுக்கு அதிகரித்தது. அரசாங்கம் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்கியதன் மூலமும் வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளைத் திட்டியதன் மூலமும் 2017இல் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 4 பில்லியனைத் திரட்டியது. அரசாங்கப் பிணையங்கள் சந்தைக்கான சாதகமான தேறிய உட்பாய்ச்சல்கள் அரசாங்கத்தின் உயர்ந்த வெளிநாட்டு படுகடன் நிலைமைக்கு மேலும் பங்களித்தது. இவ்வாண்டுப்பகுதியில் பன்னாட்டு நாணய நிதியம் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் ஐ.அ.டொலர் 419 மில்லியன் கொண்ட பெறுகைகள் காணப்பட்ட போதும் மத்திய வங்கியின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2016 இறுதியில் அறிக்கையிடப்பட்ட ஐ.அ.டொலர் 2,022

வரைபடம் 5.13
வெளிநாட்டுப் படுகடன்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

5

அட்டவணை 5.13
**வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலை**

ஐ.அ.டொ.மில்லியன்
(கால இறுதியிலான நிலைமை)

| வகை | 2016 (அ) | 2017 (ஆ) |
|---|---|---|
| **அரசாங்கம்** | **27,197** | **31,444** |
| குறுங்காலம் | 80 | 167 |
| படுகடன் பிணையங்கள் | 80 | 167 |
| திறைசேரி உண்டியல்கள் (இ) | 80 | 167 |
| **நீண்ட காலம்** | **27,118** | **31,277** |
| படுகடன் பிணையங்கள் | 9,823 | 12,077 |
| திறைசேரி முறிகள் (இ) | 1,440 | 1,700 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் (ஈ) | 58 | 31 |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (உ) | 8,325 | 10,347 |
| கடன்கள் | 17,295 | 19,201 |
| **மத்திய வங்கி** | **2,022** | **1,924** |
| **குறுங்காலம்** | **536** | **596** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 3 | 1 |
| செலுத்த வேண்டிய ஏனைய கணக்குகள் | 533 | 594 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள் | 533 | 594 |
| **நீண்ட காலம்** | **1,486** | **1,329** |
| சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்குகள் | 532 | 563 |
| நாணய மற்றும் வைப்புகள் | 400 | - |
| கடன்கள் | 554 | 765 |
| ப.நா.நி உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | 554 | 765 |
| துணைநில் ஒழுங்குகள் | 232 | - |
| விரிவாக்கப்பட்ட நிதிய வசதி | 322 | 765 |
| **வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்** | **8,790** | **8,711** |
| **குறுங்காலம்** | **5,247** | **5,140** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் (ஊ) | 2,039 | 2,212 |
| வர்த்தக வங்கிகள் | 2,039 | 2,212 |
| கடன்கள் | 3,209 | 2,929 |
| வர்த்தக வங்கிகள் | 3,209 | 2,929 |
| **நீண்ட காலம்** | **3,543** | **3,571** |
| படுகடன் பிணையங்கள் (உ) | 2,190 | 1,666 |
| வர்த்தக வங்கிகள் | 1,128 | 613 |
| வைப்புக்களை ஏற்கும் ஏனைய கூட்டுத்தாபனங்கள் | 1,062 | 1,053 |
| கடன்கள் | 1,354 | 1,904 |
| வர்த்தக வங்கிகள் | 1,339 | 1,886 |
| வைப்புக்களை ஏற்கும் ஏனைய கூட்டுத்தாபனங்கள் | 14 | 19 |
| **ஏனைய துறைகள் (எ)** | **5,584** | **6,080** |
| **குறுங்காலம்** | **1,480** | **1,790** |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் (ஏ) | 1,480 | 1,790 |
| **நீண்ட காலம்** | **4,104** | **4,290** |
| படுகடன் பிணையங்கள் (உ) | 172 | 177 |
| கடன்கள் | 3,931 | 4,114 |
| தனியார் துறை கூட்டுத்தாபனங்கள் | 1,689 | 1,871 |
| அரசிற்கு சொந்தமான நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | 2,242 | 2,243 |
| **நேரடி முதலீடு : கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் (ஐ)** | **2,825** | **3,664** |
| **மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமை** | **46,418** | **51,824** |
| **மொ.உ.உ. சதவீதமாக** | | |
| மொத்த வெளிநாட்டு படுகடன் | 56.8 | 59.5 |
| குறுங்கால படுகடன் | 9.0 | 8.8 |
| நீண்டகால படுகடன் | 47.8 | 50.6 |
| **மொத்த வெளிநாட்டு படுகடனின் சதவீதமாக** | | |
| குறுங்கால படுகடன் | 15.8 | 14.8 |
| நீண்டகால படுகடன் | 84.2 | 85.2 |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | |
| **படுகடன் பிணையங்கள்-முகப்பெறுமதியில் துறைவாரியான பகுப்பாய்வு** | **12,219** | **13,566** |
| அரசாங்கம் | 9,944 | 11,791 |
| திறைசேரி உண்டியல்கள் | 86 | 180 |
| திறைசேரி முறிகள் | 1,650 | 1,930 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 58 | 31 |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் | 8,150 | 9,650 |
| மத்திய வங்கி தவிர்ந்த, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனம் | 2,100 | 1,600 |
| வர்த்தக வங்கிகள் | 1,100 | 600 |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 1,000 | 1,000 |
| ஏனைய துறைகள் | 175 | 175 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(ஈ) முகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(உ) சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டது
(ஊ) வெளிநாட்டு நாணயங்களை வைத்திருக்கும் வதிவற்றோரின் வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது
(எ) தனியார் துறை மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது
(ஏ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகளின் வெளிநின்ற வர்த்தக கொடுகடனை உள்ளடக்கியுள்ளது
(ஐ) முதலீட்டுச்சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் மீது கம்பனிகளுக்கிடையிலான கடன் பெறுகைகள் மற்றும் பங்குதாரர் முற்பணங்கள் உள்ளடங்கலாக

*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

மில்லியனிலிருந்து 2017 இறுதியளவில் ஐ.அ.டொலர் 1,924 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு பன்னாட்டு நாணய நிதியம் - துணைநில் ஒழுங்கு வசதியின் கீழ் ஐ.அ.டொலர் 235 மில்லியன் கொண்ட மீள்கொடுப்பனவுகளும் ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட இந்திய றிசேர்வ் வங்கியுடனான பன்னாட்டு வெளிநாட்டு நாணய பரஸ்பர ஒழுங்குகள் தீர்ப்பனவு செய்யப்பட்டமையும் காரணங்களாக அமைந்தன. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ஐ.அ.டொலர் 8,711 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 79 மில்லியனால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தமைக்கு வர்த்தக வங்கிகளின் படுகடன் பிணையங்கள் உடமையில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். மேலும், 2017ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று தனியார் துறைக் கூட்டுத்தாபனங்கள் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் கம்பனிகளின் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் கடன்வழங்கல் என்பனவற்றில் பதிவுசெய்யப்பட்டது.

**அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்புடன் நாட்டின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக 2016 இறுதியின் 56.8 சதவீதத்திலிருந்து 2017 இறுதியளவில் 59.5 சதவீதத்திற்கு அதிகரித்தது.** எனினும், சாதகமான அபிவிருத்தியொன்றினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மொத்த வெளிநாட்டுப் படுகடனின் நீண்டகாலப் பங்கு 2016 இறுதியின் 84.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017 இறுதியில் 85.2 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தமைக்கு குறுங்காலப் படுகடனில் ஏற்பட்ட சமாந்தரமான வீழ்ச்சி காரணமாக அமைந்து நீண்டகால முதிர்ச்சிகளை நோக்கி சுமூகமான மாற்றமொன்று இடம்பெற்று வருவதனைக் காட்டியது. அரச வெளிநாட்டுப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பினைத் தொடர்ந்து மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனில் அரச படுகடனின் பங்கு 2016 இறுதியில் காணப்பட்ட 58.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017 இறுதியில் 60.7 சதவீதமாக விளங்கியது.

### 5.10.2 வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

**இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் மீதான மூலதனக் கொடுப்பனவுகளையும் வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2017இல் தொடர்ந்தும் அதிகரித்தன.** மூலதனக் கொடுப்பனவுகள் 2016இன் ஐ.அ.டொலர் 3,243 மில்லியனிலிருந்து 2017இல் ஐ.அ.டொலர் 3,156 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதில் அரசாங்கம் ஐ.அ.டொலர் 1,354 மில்லியனுக்கு வகைகூறியது. அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிதியிடல் செயற்றிட்டங்களுக்காகப் பெறப்பட்ட நீண்ட கால வெளிநாட்டுக் கடன்களின் ஐ.அ.டொலர் 1,320 மில்லியன்

அட்டவணை 5.14
**வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்**

| வகை | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா.மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 | 2016 (அ) | 2017 (ஆ) | 2013 | 2014 | 2015 | 2016 (அ) | 2017 (ஆ) |
| **1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | **4,044** | **3,635** | **4,772** | **4,461** | **4,560** | **522,155** | **474,527** | **648,541** | **648,315** | **694,127** |
| **1.1 கடன் தீர்த்தல்** | **2,985** | **2,479** | **3,580** | **3,243** | **3,156** | **385,362** | **323,626** | **487,275** | **472,270** | **481,028** |
| பொது அரசாங்கம் | 1,555 | 1,296 | 1,976 | 1,040 | 1,354 | 200,705 | 169,150 | 265,662 | 151,236 | 206,531 |
| செயற்றிட்டக் கடன்கள் | 836 | 793 | 798 | 876 | 1,320 | 107,906 | 103,540 | 107,536 | 127,396 | 201,430 |
| படுகடன் பிணையங்கள் | 719 | 503 | 1,178 | 164 | 34 | 92,799 | 65,610 | 158,126 | 23,840 | 5,101 |
| மத்திய வங்கி | 653 | 719 | 907 | 1,555 | 635 | 84,285 | 93,917 | 125,686 | 226,118 | 96,584 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 453 | 719 | 507 | 455 | 235 | 58,463 | 93,917 | 68,775 | 65,956 | 35,601 |
| சுவப் மற்றும் ஏனைய பொறுப்புகள் | 200 | - | 400 | 1,100 | 400 | 25,822 | - | 56,911 | 160,162 | 60,983 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 777 | 464 | 698 | 648 | 1,167 | 100,372 | 60,559 | 95,928 | 94,916 | 177,913 |
| வெளிநாட்டு கடன்கள் | 774 | 309 | 553 | 559 | 548 | 99,952 | 40,280 | 76,199 | 81,944 | 83,520 |
| படுகடன் பிணையங்கள் | - | - | - | - | 500 | - | - | - | - | 76,169 |
| நேரடி முதலீடு தொழில் முயற்சி கம்பனிகளுக்கிடையிலான படுகடன் | 3 | 155 | 145 | 88 | 119 | 420 | 20,279 | 19,729 | 12,972 | 18,225 |
| **1.2 வட்டிக்கொடுப்பனவுகள்** | **1,060** | **1,156** | **1,192** | **1,219** | **1,405** | **136,793** | **150,901** | **161,266** | **176,045** | **213,099** |
| பொது அரசாங்கம் | 832 | 876 | 870 | 862 | 1,064 | 107,357 | 114,368 | 117,496 | 124,042 | 161,898 |
| செயற்றிட்ட கடன்கள் | 255 | 260 | 266 | 264 | 334 | 32,982 | 33,883 | 36,024 | 38,440 | 50,832 |
| படுகடன் பிணையங்கள் | 576 | 616 | 604 | 597 | 731 | 74,376 | 80,485 | 81,472 | 85,602 | 111,065 |
| மத்திய வங்கி | 35 | 20 | 13 | 10 | 16 | 4,507 | 2,546 | 1,693 | 1,436 | 2,378 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 33 | 20 | 10 | 8 | 12 | 4,313 | 2,546 | 1,395 | 1,179 | 1,897 |
| சுவப் மற்றும் ஏனைய பொறுப்புகள் | 2 | - | 2 | 2 | 3 | 194 | - | 298 | 257 | 482 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 193 | 260 | 309 | 347 | 325 | 24,929 | 33,986 | 42,077 | 50,567 | 48,823 |
| வெளிநாட்டு கடன்கள் | 145 | 118 | 148 | 179 | 174 | 18,663 | 15,470 | 20,128 | 26,121 | 26,466 |
| படுகடன் பிணையங்கள் | 48 | 142 | 159 | 159 | 142 | 6,157 | 18,517 | 21,779 | 23,186 | 20,948 |
| நேரடி முதலீடு தொழில் முயற்சி கம்பனிகளுக்கிடையிலான படுகடன் | 1 | - | 1 | 9 | 9 | 109 | - | 170 | 1,260 | 1,409 |
| **2. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள்** | 15,079 | 16,735 | 16,943 | 17,448 | 19,120 | | | | | |
| **3. பொருட்களின் ஏற்றுமதிகள், பணிகள், வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்களிலிருந்தான பெறுகைகள்** | 21,639 | 23,936 | 24,078 | 24,835 | 26,455 | | | | | |
| **4. படுகடன் பணி விகிதம்** | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 26.8 | 21.7 | 28.2 | 25.6 | 23.9 | | | | | |
| ப.நா.நி. கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக | 23.6 | 17.3 | 25.1 | 22.9 | 22.6 | | | | | |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 18.7 | 15.2 | 19.8 | 18.0 | 17.2 | | | | | |
| ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 16.4 | 12.1 | 17.7 | 16.1 | 16.3 | | | | | |
| **5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 2,386 | 2.172 | 2,846 | 1,901 | 2,418 | | | | | |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 59.0 | 59.7 | 59.6 | 42.6 | 53.0 | | | | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பன்னாட்டு நாணய நிதியத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

கொண்ட மீள்கொடுப்பனவுகள் அரசாங்கத்தின் அதிகரித்த படுகடன் தீர்ப்பனவுகளுக்கு முக்கியமாகப் பங்களித்தது. எனினும், 2017இல் மத்திய வங்கியின் மீள்கொடுப்பனவுகள் 2016இன் ஐ.அ.டொலர் 1,555 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 635 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. இது இந்திய றிசேர்வ் வங்கியுடனான பன்னாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகளின் தீர்ப்பனவுகள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியம், துணைநில் ஒழுங்கு வசதியின் தீர்ப்பனவு என்பனவற்றினை உள்ளடக்கியிருந்தது. மாறாக, தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் மீள்கொடுப்பனவுகள் அதிகரித்தமைக்கு ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட இலங்கை வங்கியின் பன்னாட்டு முறி வழங்கல் தீர்ப்பனவு செய்யப்பட்டமை காரணமாக விளங்கியது. இவ்வாண்டுப்பகுதியில் வட்டிக் கொடுப்பனவுகள் மிதமாகவேனும் 2016இன் ஐ.அ.டொலர் 1,219 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1,405 மில்லியனுக்கு மிதமாக அதிகரித்தன. தனியார் துறையினாலும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களினாலும் செலுத்தப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி அரசாங்கத்தின் படுகடன் கடப்பாடுகளின் மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பினை விஞ்சிக்காணப்பட்டது. படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட உயர்வு வணிகப்பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பினை எதிரீடு செய்தமையின் காரணமாக

வணிகப்பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியின் சதவீதமாக மொத்த வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2016இன் 25.6 சதவீதத்திலிருந்து 2017இல் 23.9 சதவீதமாக அதிகரித்தது. மேலும், அரசாங்கப் படுகடன் நாட்டின் படுகடன் இருப்பில் பெரும்பங்கினை பிரசன்னப்படுத்துவதனால் அரசாங்கப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 2017இன் மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளில் 53.0 சதவீதத்திற்கு வகைகூறின.

**குறிப்பாக, நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் 2019இலிருந்து 2023 வரையான காலப்பகுதியில் முதிர்ச்சியடைவது தொடர்பாக வெளிநாட்டுத் துறைப் பொறுப்புக்களின் ஒரே தடவையில் முதிர்ச்சியடைவது குறுங்காலத்திலிருந்து நடுத்தர காலப்பகுதியில் வெளிநாட்டுத் துறையில் காணப்படும் கரிசனைக்குரியதொரு விடயமாக இருக்கும்.** 2018இல் ஆக்கப்படவிருக்கும் இறைப் பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் முன்மதியுடைய பொதுப்படுகடன் முகாமைத்துவத்திற்கான சட்ட ரீதியான கட்டமைப்பொன்றினை வழங்குகின்றது. ஒரேநேரத்திலான பெருந்தொகை முதிர்ச்சிகள் உட்பட பொதுப்படுகடன் முகாமைத்துவத்தில் காணப்படும் தற்போதைய பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முக்கியமானதொரு நடவடிக்கையாக இது காணப்படுகிறது. நாட்டின் வெளிநாட்டுப் படுகடனில் ஏற்படும் ஒட்டுமொத்த அதிகரிப்பு உயர்ந்த வட்டிக் கொடுப்பனவுகளூடாக வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் மீது குறிப்பிடத்தக்கத் தாக்கமொன்றினைக் கொண்டிருக்கும். ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வ் வங்கியினால் அறிவிக்கப்பட்ட அண்மைய வட்டி வீத உயர்வு முக்கிய மத்திய வங்கிகளினால் மேலும் உயர்த்தப்படுமென எதிர்பார்க்கப்படும் வட்டி வீதங்கள் என்பனவற்றின் காரணமாக உலகளாவிய வட்டி வீதங்கள் அதிகரிக்கும் போக்கொன்றினை எடுத்துக்காட்டுகின்றன. வட்டி வீதங்களில் ஏற்படும் உயர்வு படுகடன் தீர்ப்பனவுச் செலவினை அதிகரிப்பதன் வாயிலாக இலங்கையின் வெளிநாட்டுத் துறையின் மீது தாக்கமொன்றினைக் கொண்டிருக்கக்கூடும் போல் தெரிகிறது.

## 5.11 செலாவணி வீத அசைவுகள்

**இவ்வாண்டுக் காலப்பகுதியில் வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கூடியளவிற்கு சந்தைசார்ந்த செலாவணி வீதக் கொள்கையின் கீழ் 2017இல் இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி ஒப்பீட்டு ரீதியில் உறுதியாகக் காணப்பட்டமையானது வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீட்டினை பன்னாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கு மாத்திரம் மட்டுப்படுத்துகிறது.** குறிப்பாக, 2017இன் முதல் இரண்டு மாத காலப்பகுதியில் நிலவிய ரூபாவின் மீதான குறிப்பிடத்தக்க தேய்வு அழுத்தங்களுக்கு இறக்குமதிச் செலவினத்திலிருந்து தோன்றிய தொடர்ச்சியான வெளிப்பாய்ச்சல்கள் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் அரச பிணையங்கள் சந்தையில்

அட்டவணை 5.15
### செலாவணி வீத அசைவுகள்

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கான ரூபா | | | | | | முன்னைய ஆண்டுடனான சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிறுதி வீதம் | | | ஆண்டுச் சராசரி வீதம் | | | ஆண்டிறுதி | | ஆண்டுச் சராசரி | |
| | 2015 | 2016 | 2017 | 2015 | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 |
| யூரோ | 157.37 | 157.87 | 182.49 | 150.84 | 161.16 | 171.73 | -0.32 | -13.49 | -6.40 | -6.16 |
| இந்திய ரூபா | 2.17 | 2.21 | 2.39 | 2.12 | 2.17 | 2.34 | -1.72 | -7.54 | -2.25 | -7.48 |
| யப்பானிய யென் | 1.20 | 1.29 | 1.36 | 1.12 | 1.34 | 1.36 | -7.05 | -5.10 | -16.48 | -1.12 |
| ஸ்டேர்லிங் பவுண் | 213.57 | 184.04 | 205.54 | 207.99 | 197.15 | 196.47 | 16.04 | -10.46 | 5.50 | 0.35 |
| ஐ.அ.டொலர் | 144.06 | 149.80 | 152.85 | 135.94 | 145.60 | 152.46 | -3.83 | -2.00 | -6.64 | -4.50 |
| சி.எ.உ. | 199.63 | 201.38 | 217.69 | 190.16 | 202.39 | 211.49 | -0.87 | -7.49 | -6.04 | -4.31 |
| தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் (ஆ) (இ) | ஆண்டிறுதி சுட்டெண் | | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | | | முன்னைய ஆண்டை விட சதவீத மாற்றம் | | | |
| | | | | | | | ஆண்டிறுதி சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | |
| (2010=100) | 2015 | 2016 | 2017 | 2015 | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 |
| பெ.தா.செ.வீ 24 - நாணயங்கள் | 93.53 | 92.64 | 85.46 | 96.61 | 92.46 | 88.07 | -0.95 | -7.75 | -4.29 | -4.75 |
| உ.தா.செ.வீ 24 - நாணயங்கள் | 107.28 | 110.18 | 104.83 | 109.50 | 106.94 | 106.10 | 2.70 | -4.85 | -2.34 | -0.78 |

(அ) இலங்கை ரூபாவிற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. (-) அடையாளம் என்பது ஒவ்வொரு நாணயத்துக்கும் எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானத்தை குறிப்பிடுகின்றது.


(ஆ) பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது (பெ.தா.செ.வீ) 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் நாணயமாற்று வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். ஒவ்வொரு நாணய கூடைகளிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கும் வர்த்தகப் பங்குகளின் அடிப்படையில் நிறையிடப்பட்டது. நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்துடனும் தொடர்புடைய பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (உ.தா.செ.வீ) கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உண்மை தாக்கமுள்ள நாணயமாற்று வீதத்தை கணிப்பிட பயன்படுத்தப்பட்டது.


(இ) நாணயமாற்று வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதி தேய்வு என்பது பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியல் நேரடியாக பிரதிபலித்தது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

5

வரைபடம் 5.14
செலாவணி வீத அசைவுகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

காணப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் வெளியேறியமை என்பன இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியைப் பாதுகாப்பதற்கு உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையினை நிரம்பல் செய்வதற்கு மத்திய வங்கியைத் தேவைப்படுத்தியமையே காரணமாகும். எனினும், இந்நிலைமையானது குறிப்பாக, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை மற்றும் அரசாங்க பிணையங்கள் சந்தைக்குக் கிடைத்த உயர்ந்த வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் ஏற்றுமதிப் பெறுகைகளின் அதிகளவிற்கு மாற்றப்பட்டமை என்பனவற்றின் காரணமாக இந்நிலைமையானது 2017 மாச்சிலிருந்து தலைகீழாக மாற்றமடைந்தது. இது, மத்திய வங்கிக்கு, சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையை ஈர்த்துக்கொள்வதற்கு சந்தர்ப்பமொன்றை வழங்கியது. நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல், வெளிநாட்டு நாணயக் கால நிதியியல் வசதிகளின் கிடைப்பனவு, பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் தொகுதிகளின் பகிர்ந்தளிப்புக்கள் என்பனவற்றின் காரணமாக மேயிலிருந்து ரூபா மீதான தேய்மான அழுத்தங்கள் படிப்படியாக இலகுபடுத்தப்பட்டன. இது, முதலீட்டாளர் நம்பிக்கை மேம்பாடடைய உதவியது. இந்நிலைமையானது 2017 மாச்சு இறுதியிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதியில் ஐ.அ. டொலரிற்கெதிராக ரூபா உறுதியடைவதற்கும் சில காலங்களில் இலங்கை மத்திய வங்கியினால் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை கணிசமானளவிற்கு ஈர்த்துக்கொள்வதற்கு மத்தியிலும் ரூபா படிப்படியாக உயர்வடைவதற்கும் பங்களித்திருக்கிறது. இவ்வபிவிருத்திகளின் காரணமாக, ரூபா, 2017இன் முதற்காலாண்டுப் பகுதியில் 1.28 சதவீதத்தினால் தேய்வடைந்த ரூபா இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 2016 இறுதியில் ரூ.149.80 இலிருந்து 2017 இறுதியில் ரூ.152.85 இற்கு 2.00 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்தத் தேய்மானமொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் 2017இல் ஐ.அ.டொலரிற்கெதிராக 4.50 சதவீதத்தினால் ரூ.152.46 இற்குத் தேய்வடைந்தது.

**பன்னாட்டுச் சந்தைகளில் ஐ.அ.டொலருக்கெதிராக குறுக்கு நாணய செலாவணி வீதங்களின் அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017இல் மற்றைய அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் குறிப்பிடத்தக்களவில் தேய்வடைந்தது.** இதன்படி, இலங்கை ரூபாவின் செலாவணி வீதம் யூரோவிற்கெதிராக 13.49 சதவீதத்தினாலும் இந்தியா ரூபாவிற்கெதிராக 7.54 சதவீதத்தினாலும் யப்பானிய யென்னிற்கெதிராக 5.10 சதவீதத்தினாலும் ஸ்ரேலிங் பவுணுக்கெதிராக 10.46 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது. முக்கிய நாணயங்களுக்கெதிராக ரூபா தேய்வடைந்தமையின் இணைந்த தாக்கம் காரணமாக இலங்கை ரூபாவும் இவ்வாண்டுப்பகுதியில் சிஎஉ இற்கெதிராக 7.49 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

### 5.11.1 பெயரளவு மற்றும் உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

**கூடை நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவுகளை அளவிடுகின்ற உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் (2010 = 100) இவ்வாண்டுப்பகுதியில் தேய்வடைந்தன.** பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் தேய்வடைந்தமை, டொலர் மற்றும் கூடையிலுள்ள நாணயங்களெனக் கருதப்படும் மற்றைய முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் பெயரளவுத் தேய்மானத்தைப் பிரதிபலித்தது. ஐந்து நாணயப் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் 8.68 சதவீதத்தினால் தேய்வடைந்த வேளையில் 24 நாணயச் சுட்டெண் 2017இல் 7.75 சதவீதத்தினால் தேய்வடைந்தது. அதேவேளை, உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் பெயரளவுச் செலாவணி வீதங்களிலுள்ள வேறுபாடுகளுக்குப் புறம்பாக நாடுகளுக்கிடையேயான பணவீக்க வேறுபாடுகளை பரிசீலனையில் எடுக்கின்ற இலங்கையின்


5

வெளிநாட்டுப் போட்டித்தன்மையின் குறிகாட்டியொன்றான உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களும் இவ்வாண்டுப்பகுதியில் தேய்வடைந்தன. 5 நாணயங்கள் மற்றும் 24 நாணயங்களை அடிப்படையாகக் கொண்ட உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதக் கூடைகளின் அடிப்படையாகக் கொண்டு உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் முறையே 4.83 சதவீதத்தினாலும் 4.85 சதவீதத்தினாலும் தேய்வடைந்து 100 சுட்டெண் புள்ளி அடையாளங்களை அண்மித்துக் காணப்பட்டன. உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களின் நடத்தை ரூபாவின் வெளிநாட்டுப் போட்டித்தன்மையினை எடுத்துக்காட்டிய போதும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் நாட்டில் காணப்பட்ட உயர்ந்த பணவீக்கத்தின் காரணமாக 100 இற்கு மேல் காணப்பட்டன.

### 5.11.2 உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தி

**2016இல் தீவிரமற்றதாகக் காணப்பட்ட உடனடிச் சந்தை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கூடியளவிற்குச் சந்தையை அடிப்படையாகக் கொண்ட செலவாணி வீதக் கொள்கைகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில் 2017இல் மீட்சியடைந்த வேளையில் முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் அளவு சிறிதளவினால் வீழ்ச்சியடைந்தது.** உடனடிச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2016ஆம் ஆண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 14,780 மில்லியனிலிருந்து இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 16,451 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. உடன் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2016இன் ஐ.அ.டொலர் 6,072 மில்லியனிலிருந்து 2017இல் ஐ.அ.டொலர் 8,426 மில்லியனுக்கு (மொத்தக் கொடுக்கல்வாங்கல்களில் 51.2 சதவீதம்) கணிசமாக அதிகரித்தது. அதேவேளை, இவ்வாண்டுப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் பிரசன்னம் 2017இல் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 1,664 மில்லியன் கொண்ட ஈர்ப்பினைத் தோற்றுவித்தது. இது, ஐ.அ.டொலர் 2,214 மில்லியன் கொண்ட ஈர்ப்பினையும் ஐ.அ.டொலர் 550 மில்லியன் கொண்ட நிரம்பலையும் உள்ளடக்கியிருந்தது. இது, மத்திய வங்கி ஐ.அ.டொலர் 1,132 மில்லியன் கொண்ட ஐ.அ.டொலர்களை கொள்வனவு செய்த வேளையில், ஐ.அ.டொலர் 1,900 மில்லியன் தொகை கொண்ட வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை நிரம்பல் செய்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017இல் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தலையீட்டு நியதிகளில் இது முற்றிலும் மாறானதொரு தன்மையாகும். 2017இல் தேறிய ஈர்ப்பின் உயர்ந்த மட்டத்திற்கு ஆண்டின் இறுதி மூன்று காலாண்டுப்பகுதிகளிலும் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களில் காணப்பட்ட முன்னேற்றம் காரணமாக இருந்ததுடன் இது மத்திய வங்கி நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக மிகையான வெளிநாட்டுத் திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்தவற்கான அதன் தலையீடுகளை மட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கியை இயலச்செய்தது. வெளிநாட்டுச் செலாவணி ஈர்த்துக் கொள்ளப்பட்டமையானது பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட பன்னாட்டு ஒதுக்கு இலக்குகளை மத்திய வங்கி பூர்த்தி செய்வதற்கு உதவியது.

வரைபடம் 5.15
காலாண்டுக்கான வங்கிகளுக்கிடையிலான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல் அளவுகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**வர்த்தக வங்கிகளின் ஒரு மாத முன்னோக்கிய கட்டணம் மற்றும் தேறிய ஆரம்ப நிலைமை என்பனவற்றின் அசைவுகள் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைப் பங்கேற்பாளர்களின் 2017இன் செலாவணி வீதத்தில் காணப்பட்ட தேய்வின் அண்மைக்கால எதிர்பார்ப்புக்களைப் பிரதிபலித்தது.** இதன்படி, ஒரு மாத ஒப்பந்தத்திற்கான முன்னோக்கிய கட்டணம் 2017 காலப்பகுதியின் சராசரி வட்டி வீத வேறுபாடுகளுக்கு மேல் தொடர்ந்தும் காணப்பட்டது. அதேவேளை சந்தையின் அண்மைக்கால தேய்வு எதிர்பார்ப்புக்களை எடுத்துக்காட்டுகின்ற விதத்தில் வர்த்தக வங்கிகளின் தேறிய ஆரம்ப நிலைமையும் இவ்வாண்டுப்பகுதியில், சராசரியாக சாதகமான மட்டமொன்றில் காணப்பட்டன. எனினும், இவ்வாண்டுப்பகுதியில் மூன்று மாத மற்றும் ஆறு மாத முன்னோக்கிய கட்டணங்கள் வட்டி வீத வேறுபாட்டிற்குக் கீழே தொடர்ந்தும் காணப்பட்டு, குறுங்காலத்தில் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் அசைவொன்றின் எதிர்பார்ப்புக்களை எடுத்துக்காட்டுகின்றன.

## சிறப்புக்குறிப்பு 05
## 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களினை மேலும் தளர்த்தல்

### 1. அறிமுகம்

அதிகளவிலான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருந்த இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் 1977ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை ஆட்சி முறையின் கீழ் பரந்த பொருளாதாரச் சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாகத் தளர்த்தப்பட்டது. திறந்த பொருளாதாரக் கொள்கையின் அறிமுகத்தினால் ஏற்படுத்தப்பட்ட வர்த்தக தளர்த்துகையானது காலப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் பாரிய தளர்த்துகையின் அடித்தளமொன்றாகக் கருதப்பட முடியும். 1994ஆம் ஆண்டின் பன்னாட்டு நாணய நிதியத்தின் பொது விதிகள் VIII இனை ஏற்றுக்கொண்டதன் பின்னர் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களிற்கான வெளிநாட்டுச் செலாவணியின் தடையற்ற பாய்ச்சலினை அனுமதிக்கின்ற நடைமுறைக் கணக்கு பாரியளவில் தளர்த்தப்பட்டது. மேலும், 1977இலிருந்து மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் விசேடமாக மூலதன உட்பாய்ச்சல்கள் பாரியளவில் தளர்த்தப்பட்ட அதேவேளை, குறுக்கு எல்லை முதலீடுகளை வசதிப்படுத்துவதற்காக மூலதன வெளிப்பாய்ச்சல்கள் பகுதியளவில் தளர்த்தப்பட்டன. எவ்வாறாயினும், அனுமதிக்கப்பட்ட ஆரம்ப எல்லையினை விஞ்சுகின்ற ஏதேனும் வெளிமுக மூலதனக் கொடுக்கல்வாங்கல்களிற்கு இலங்கை மத்திய வங்கியின் முன்கூட்டிய அனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும். இருப்பினும், வெளிநாட்டு நாணயக் கணக்குகளினை வைத்திருக்கும் ஆட்கள் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக நாட்டிற்கு வெளியில் ஏதேனும் நோக்கத்திற்காக அத்தகைய கணக்குகளிலுள்ள நிதிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினை சட்டமாக்குவதன் மூலம் வெளிநாட்டுக் கொடுக்கல்வாங்கல்களுக்காக புதியதொரு சட்டம் மற்றும் கொள்கைக் கட்டமைப்பானது 2017 நவெம்பர் 20இல் (நியமனத் திகதி) அறிமுகப்படுத்தப்பட்டது. மூலதனப் பாய்ச்சலினை மேலும் தளர்த்துதல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய நடைமுறைகளினை இலகுவாக்குவதன் ஊடாக உள்நாட்டு மூலதனச் சந்தையினை உலகளாவிய மூலதனைச் சந்தையுடன் இணைப்பதனை வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் இலக்கிடுகின்றது.

### 2. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் முனைப்பான கூறுகள்

#### 2.1. சட்டத்தின் நிருவாகம்

மத்திய வங்கியின் விடயத்திற்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் (அமைச்சர்) வெளியிடப்பட்ட பணிப்புரைகளுடன் இணைந்து வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் வெளிநாட்டு செலாவணியின் முன்னேற்றம் மற்றும் ஒழுங்குவிதிகளின் பொறுப்புக்களை இலங்கை அரசின் முகவராகத் தொழிற்படுகின்ற இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கியுள்ளது. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகள் வெளிநாட்டுச் செலாவணிப் பணிப்பாளரினால் தலைமை தாங்கப்படும் புதிதாக நிறுவப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினூடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இவ்வேறுபாடானது, நீக்கப்பட்ட 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழான அதிகாரமளித்தலினை பெருமளவில் ஒத்ததாகும்.

#### 2.2. அமைச்சரின் அதிகாரங்கள்

வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் பின்வரும் அதிகாரங்கள் அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அ. சட்டத்தின் ஏற்பாடுகளினைக் கொண்டு நடாத்துவதற்கு நாணயச் சபைக்கு பணிப்புரைகளை வழங்கல்.

ஆ. இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடுவதற்கு எவரேனும் நபருக்கு இலங்கை மத்திய வங்கி வழங்கக்கூடிய விசேட அனுமதியின் நோக்கங்களை விபரித்தல்.

இ. நாணயச் சபையுடன் கலந்துரையாடி மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகை அல்லது வகைகளினை ஒழுங்குவிதிகளின் மூலம் அதிகாரமளித்தல்.

ஈ. நாணயச் சபையுடன் கலந்துரையாடி வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் பராமரிக்கப்படும் கணக்குகளை ஒழுங்குவிதிகளின் மூலம் அதிகாரமளித்தல்.

உ. வெளிநாட்டு நாணயம்/ இலங்கை நாணயத்தின் ஏற்றுமதி/ இறக்குமதி மற்றும் வெளிநாட்டு நாணயத்தினை உடைமையில் வைத்திருப்பதற்கான நோக்கங்கள், வரையறைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் விபரித்தல்.

ஊ. "இலங்கையில் வதியும் நபர் ஒருவரினை" வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் விபரித்தல்.

எ. பின்வருவனவற்றிற்கு இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட வேண்டிய வழிகாட்டல்கள் மற்றும் பணிப்புரைகளினை அனுமதித்தல்:

- மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வேறு கொடுக்கல்வாங்கல்கள் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்/ மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்
- ஏனைய ஆட்கள்

5

- சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கத் தவறிய அதிகாரமளிக்கப்பட்ட/ மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்.

ஏ. மேல் முறையீட்டுடன் ஈடுபடுவதற்கான விசாரணை சபையின் அங்கத்தவர்களை நியமித்தல், நீக்குதல் மற்றும் மாற்றுதலைத் தீர்மானித்தல்.

ஐ. நிதியியல் உறுதிப்பாட்டிற்கு வலுவான அச்சுறுத்தல் ஒன்று காணப்படுமாயின் நாணயச் சபையின் ஆலோசனை மற்றும் மேலதிக 12 மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கக்கூடிய 6 மாத காலத்தினை விஞ்சாத அமைச்சரவையின் அனுமதியுடன் வெளிநாட்டுச் செலாவணியின் உள் மற்றும் வெளி அனுப்பல்களினைக் கட்டுப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல். தற்போது நாணய விதிச்சட்டமானது அவ்வாறான அதிகாரத்தினை நாணயச் சபைக்கு ஒப்படைத்துள்ளது.

**2.3. வெளிநாட்டுச் செலாவணியினைக் கையாள்வதற்கு ஆட்களை அனுமதித்தல்**

வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுத்துவதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக அனுமதிக்கப்பட்ட அடிப்படை முகவர்களான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுடன் ஒப்பிடுகையில் பின்வரும் மூன்று பிரதான வகை நபர்களினை அடையாளம் காண்பதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடுவதற்கான பரப்பு மற்றும் நுழைவுத் தன்மையினை வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் விரிவுபடுத்தியுள்ளது.

**அ. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்:** உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் இரண்டையும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உள்ளடக்குகின்றது. உத்தேசிக்கப்பட்ட திகதியில் காணப்பட்ட அனைத்து உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகத் தொழிற்படுவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்படுவதற்கு கருதப்பட்ட அதேவேளை, வங்கித் தொழிலிற்கான உரிமத்தினை வழங்கிய திகதியிலிருந்து ஏனைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகத் தொழிற்படுவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட வேண்டும். உத்தேசிக்கப்பட்ட திகதியில் காணப்பட்ட அனைத்து உரிமமளிக்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்படவுள்ள புதிய உரிமமளிக்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் அத்தகைய அதிகாரமளித்தலில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களிற்காக வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடுவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்படல் வேண்டும்.

**ஆ. மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்:** அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்கு மேலதிகமாக, அத்தகைய அனுமதியில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடுவதற்கு நபர்களின் ஏதேனும் வகை அல்லது வகைகளினை இலங்கை மத்திய வங்கி அனுமதிக்கலாம். நாணயமாற்றுநர்களை அல்லது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் தவிர எவரேனும் நபரினை மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் உள்ளடக்குகின்றது. இது வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடுவதற்கான நியமனத் திகதியிலிருந்தாகும்.

**இ. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் தவிர ஏனையோர்:** வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சரினால் விபரிக்கப்பட்ட நோக்கங்களிற்காக இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களாக இல்லாத எவரேனும் நபர்களிற்கு இலங்கை மத்திய வங்கி சிறப்பு அனுமதியினை வழங்கலாம்.

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் மற்றும் ஏனைய அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களில் அவர்களின் சான்றினை உறுதிப்படுத்தல் மற்றும் உண்மைத்தன்மையினை நிலைநாட்டுவதன் மூலம் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இலங்கை மத்திய வங்கியின் ஈடுபாடானது முதன்மையாக, பேரண்ட மட்ட கண்காணிப்பினைக் கவனத்தில் கொண்டு முன்மதியுடைய ஒழுங்குபடுத்தலை வழங்குவதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காகும்.

**2.4. அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்**

வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம், கைத்தொழில் ஆற்றலினைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் எழக்கூடிய சாதகமான கொடுக்கல்வாங்கல்களினை இயைபுபடுத்துவதற்கு நடைமுறை, மூலதனம் மற்றும் ஏனைய கொடுக்கல்வாங்கல்களாக பரந்த முறையில் கொடுக்கல்வாங்கல்களினை வகைப்படுத்துகின்றது.

**அ. நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்:** நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் பன்னாட்டு நாணய நிதியத்தின் பொதுவிதிகள் XXX (ஈ) உடன் இணைந்து செல்லும் விதத்தில் பின்வரும் 4 பிரதான வகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட முடியும் என்பதுடன் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் அவர்களிற்கு வழங்கப்பட்ட அனுமதியின் அடிப்படையில் மேற்கொள்ளவும் முடியும்.

5

(i) பணிகள் மற்றும் சாதாரண குறுகிய கால வங்கித்தொழில் மற்றும் கொடுகடன் வசதிகள் உட்பட வெளிநாட்டு வர்த்தகம், ஏனைய நடைமுறை வியாபாரத்துடன் தொடர்புடைய கொடுப்பனவுகள்,

(ii) கடன்கள் மீதான வட்டியின் கொடுக்கப்பட வேண்டிய மீதிகள் மற்றும் ஏனைய முதலீடுகளிலிருந்தான தேறிய வருவாய்களின் கொடுப்பனவுகள்,

(iii) கடன்களின் தீர்ப்பனவிற்காக அல்லது நேரடி முதலீடுகளின் கழிவிற்கான மிதமான தொகைகளின் கொடுப்பனவுகள், மற்றும்

(iv) குடும்ப வாழ்க்கைச் செலவிற்கான மிதமான அனுப்பல்களின் கொடுப்பனவுகள்.

மேலே விடயம் (iii) மற்றும் (iv), செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களாகக் கருதப்படவில்லை என்பதுடன் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மட்டுமே நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**ஆ. மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்:** நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தவிர்ந்த குறுக்கு எல்லைக் கொடுக்கல்வாங்கல்கள் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களாக வரையறுக்கப்படுகின்றன. நாணயச் சபையின் கலந்துரையாடலுடனும் அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதியுடனும் அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலம் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்பு அல்லது வகுப்புக்கள் அனுமதியளிக்கப்படல் வேண்டும். அனுமதியளிக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடுவதற்கு குறித்துரைக்கப்பட்ட நபர்கள் அனுமதிக்கப்பட்ட எல்லைக்குட்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களினூடாக அத்தகைய கொடுக்கல்வாங்கல்களினை மேற்கொள்ள முடியும்.

**இ. ஏனைய கொடுக்கல்வாங்கல்கள்:** மூலதன மற்றும் நடைமுறை தவிர்ந்த, அமைச்சரின் அனுமதியுடன் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்களின் மூலம் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்படும் கொடுக்கல்வாங்கல்கள்.

ஈ. சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் தவிர்ந்த இலங்கையில் வதியும் எந்தவொரு நபரும் இலங்கைக்குள் அல்லது வெளியில் இலங்கை ரூபாவினை அல்லது சொத்தினை வெளிநாட்டுச் செலாவணிக்கு உருமாற்றம் செய்தலில் ஈடுபட்டு வெளிநாட்டுச் செலாவணியைக் கையாள முடியாது.

உ. இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியில் வெளிநாட்டுச் செலாவணியில் வங்கிக் கணக்கொன்றைக் கொண்டுள்ள அல்லது ஏதேனும் வெளிநாட்டுச் சொத்தினை உரிமையில் கொண்டுள்ள இலங்கையில் இருக்கும் அல்லது இலங்கையில் வதியும் எந்தவொரு நபரும் பின்வரும் முறையில் பெறப்படாத:

i) இலங்கைக்குள் ரூபாவினை உருமாற்றல் அல்லது கழித்தொதுக்கல் அல்லது ஏதேனும் நிதியினை அல்லது உண்மைச் சொத்தினை உருமாற்றல், அல்லது

ii) வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடுகின்ற வியாபாரத்திலிருந்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவர் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வணிகரொருவரின் மூலம்,

அத்தகைய வெளிநாட்டுச் செலாவணியினை இலங்கைக்குள் அல்லது வெளியில் அத்தகைய நபரின் நடைமுறை அல்லது மூலதனக் கணக்கின் கொடுக்கல்வாங்கலிற்காக ஏதேனும் கொடுப்பனவினை செய்வதற்கு பயன்படுத்தலாம். அத்தகைய கொடுப்பனவு இலங்கையிலிருந்து மேற்கொள்ளப்படுமாயின் அது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வணிகரினூடாகவே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஊ. ஆளொருவர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் எல்லைகளிற்காக மட்டுமே வெளிநாட்டுச் செலாவணியினை ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்ய அல்லது ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணியை தனது உடமையில் அல்லது வங்கிக்கணக்கொன்றில் வைத்திருக்க மற்றும் இலங்கை ரூபாவினை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்தல் வேண்டும்.

எ. இலங்கையில் வதியும் ஒருவர் இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியினை அனுப்புபவராயின் அது:

i) இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணிக்கு ரூபா உருமாற்றம் செய்யப்பட்டதாக அல்லது ஏதேனும் நிதியியல் அல்லது உண்மைச் சொத்தின் ஏதேனும் கழித்தொதுக்கல் / உருவமாற்றத்தில் ஈடுபடாததாக இருத்தல்

ii) உண்ணாட்டரசிறையின் ஆணையாளர் நாயகத்திற்கு அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு சான்றுப்படுத்தப்பட்டதாகவிருக்கும், மற்றும்

iii) பணம் தூயதாக்கல் அல்லது கையூட்டலுடன் தொடர்பான குற்றங்களுடன் தொடர்பான சொத்தாக இல்லாததாக,

5

இருத்தல் வேண்டும் என்பதுடன் அவர் அத்தகைய அனுப்புதல்கள் 1 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை விஞ்சவில்லை என்பதனை உறுதிப்படுத்தி ஒழுங்குவிதிகளின் மூலம் அமைச்சரினால் விபரிக்கப்பட்ட அனுப்பல் கட்டணமொன்றை மட்டுமே செலுத்துவதற்கு கேட்டுக்கொள்ளப்படுகின்றார். இலங்கை அபிவிருத்தி முறியொன்றில் பணம் முதலீடு செய்யப்பட்டிருக்குமாயின் அனுப்பல் கட்டணம் செலுத்தப்படத் தேவையில்லை என்பதுடன் அத்தகைய நிதியங்களைத் தொடர்ச்சியாக நாட்டிற்கு திருப்பியனுப்புவதிலும் தடைகள் இல்லை.

**2.5. தண்டப்பணங்கள் மற்றும் மேன்முறையீட்டு செயன்முறைகள்**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் இணங்கியொழுகாமையானது குற்றச்சட்டத்தின் கீழ் அடையாளப்படுத்தப்பட்ட அதேவேளை, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் இணங்கியொழுகாமையானது சிவில் சட்டத்தின் கீழ் அடையாளப்படுத்தப்படுகின்றது. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் தண்டப்பணங்கள் மற்றும் மேன்முறையீட்டுச் செயற்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

அ. இலங்கை மத்திய வங்கியின் தீர்மானத்தின் மூலம் குற்றம் செய்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் அல்லது ஏனைய நபர்களின் மேன்முறையீடுகளைக் கையாள்வதற்கு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட விசாரணை சபையொன்றின் உருவாக்கம் உள்ளடங்கலாக விசாரணை செயற்பாடொன்றின் கிடைப்பனவு.

ஆ. இலங்கை மத்திய வங்கியானது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு எதிராக எந்தவொரு நேரத்திலும் விசாரணையொன்றினை நடாத்த முடியும் என்பதுடன் தண்டப்பணங்களை விதித்தல், உரிமைப் பத்திரத்தினை மீளப்பெறல் அல்லது 6 மாத காலத்திற்கு நடவடிக்கைகளை தற்காலிகமாகத் தடைசெய்தல்.

இ. வெளிநாட்டுச் செலாவணி அல்லது வெளிநாட்டுச் சொத்தின் பெறுமதியினை விஞ்சாத பெறுமதியினை செலுத்துமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களை இலங்கை மத்திய வங்கி கேட்டுக்கொள்ள முடியும்.

ஈ. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வணிகர் தவிர்ந்த நபரொருவரினால் மீறப்படுமாயின் தண்டப்பணமானது ரூ. 1 மில்லியனை விஞ்சாதவொரு தொகையாக இருக்கலாம்.

உ. அமைச்சரின் அனுமதியுடன் நீடிப்பொன்று பெறப்பட்டாலொழிய அனைத்து விசாரணைகளும் புலனாய்வுகளும் 6 மாத காலத்திற்குள் நிறைவுசெய்யப்பட வேண்டும்.

**2.6. இடைக்கால ஏற்பாடுகள்**

அ. அனைத்து வழக்குகள், நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டதுடன் நிலுவையிலுள்ளவை நடவடிக்கையெடுப்பதற்கு கருதப்பட்டதுடன் செயற்பாடுகள் நீடிக்கப்பட்ட சட்டத்தின் கீழ் நிறுவனமயமாக்கப்பட்டதுடன் நீடிக்கப்பட்ட சட்டத்தின் கீழ் கேட்கப்பட்டு முடிவுசெய்யப்படும்.

ஆ. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அனைத்து விசாரணைகளும் புலனாய்வுகளும் நீடிக்கப்பட்ட சட்டத்தின் கீழ் உள்ளதாகக் கருதப்படும் நிலுவைகளும் 6 மாத காலப்பகுதிக்குள் முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

**3. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகள்**

**3.1. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள்**

வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில் பின்வரும் மூன்று ஒழுங்குவிதிகளும் இரண்டு கட்டளைகளும் அமைச்சரினால் வெளியிடப்பட்டது.

**அ) 2017இன் 1ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் வெளிநாட்டுச் செலாவணியில் மேற்கொள்ளப்படும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்)**

நாடுகளில் முதலிடுவதனை முதன்மைப்படுத்துகின்ற வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இறுதிக் கட்டுப்பாடுகளையும் விளக்கமான கொள்கை வழிகாட்டல்களையும் கொண்டிருக்கவில்லை. கட்டுப்படுத்தும் நடைமுறையிலிருந்து வசதிப்படுத்தும் நடைமுறைக்கு பாரியளவில் மாறுவதன் மூலம் கட்டுப்பாடுகளற்ற உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்களின் பரந்த கருத்தின் மூலம் வழிப்படுத்தப்பட்ட புதிய ஒழுங்குவிதிகள், மூலதனக் கணக்கின் மேலதிகத் தளர்த்தலின் மீது பிரதான கவனத்தைக் கொண்டுள்ளது. புதிய வெளிநாட்டு முதலீடுகள் அல்லது உட்பாய்ச்சல்களைக் கவருகின்ற அதேவேளை, பொருளாதார முகவர்களுக்காக தெளிவு, ஊடுருவும் தன்மை, வாடிக்கையாளர் இசைவு, பரந்த முதலீட்டு வழிவகைகளை உருவாக்கல், குறிப்பிட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் எல்லைகளை மேம்படுத்தல் மற்றும் பரந்த சேவைகளின் கிடைப்பனவை உறுதிப்படுத்தல் என்பன புதிய கொள்கை ஆரம்பிப்புக்களின் பிரதான குறிக்கோள்களாகும். முன்னைய நடைமுறையின் கீழ் ஒழுங்கமைப்பாளரின் அனுமதிக்கு உட்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில்

ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இக்கொள்கை நடைமுறையின் கீழ் பொது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தடைகளை நீக்குவதன் மூலம் இவ்விசைந்து செல்லும் செயற்பாட்டின் அறிமுகமானது இலங்கையின் போட்டித்தன்மையினை வலுப்படுத்தும் என்பதுடன் ஏனைய உலக நாடுகளுடன் இலகுவாக வியாபாரம் செய்வதனையும் மேம்படுத்துகின்றது. 2017இன் 1ஆம் இலக்க ஒழுங்குவிதி வெளிநாட்டில் முதலிடுவதற்கு பிரதானமாக தொழில்நுட்பம் மற்றும் சந்தைப்படுத்தலை பன்னாட்டு நுட்பத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு வணிக மையங்களுக்கான சந்தர்ப்பங்களை உருவாக்குவதன் மூலம் சென்மதி நிலுவையின் மூலதனக் கணக்கினை மேலும் தாராளமயப்படுத்தும் அதேவேளை அவர்கள் பன்னாட்டு வியாபாரக் காலாச்சாரத்தினை புரிந்துகொள்வதனை இயலச்செய்வதுடன் உலகளாவிய பெறுமதி சங்கிலியுடன் இணைகின்றது. இதன்படி, மூலதன உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்களின் மீதான பிரதான தளர்த்தல்கள் கீழ்வருமாறு,

(i) **வதிவோரினால் வெளிநாட்டில் முதலீடு:** வெளிமுக மூலதனக் கொடுக்கல் வாங்கல்களில் ஆரம்ப எல்லையினை அதிகரித்து வெளிமுக முதலீடுகளின் வகைகளினை விரிவுபடுத்தும் அதேவேளை, அத்தகைய முதலீடுகள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் வழங்கப்பட்ட பணிகளின் மூலம் வசதிப்படுத்தப்படுகின்றது.

**அட்டவணை ஆ 5.1: வெளிமுக முதலீடுகளின் ஆரம்ப வரையறைகள் ஒப்பீடு**

| முதலீட்டாளர்களின் வகை | முதலீடுகளின் வகை | | வரையறைகள் | |
|---|---|---|---|---|
| | செ.க.ச. | வெ.செ.ச. | செ.க.ச. | வெ.செ.ச. |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட ஏதேனும் கம்பனி | • பங்குகள்<br>• நாட்டிற்கான முறிகள் | • பங்குகள்<br>• நாட்டிற்கான முறிகள்<br>• கூறுகள்<br>• படுகடன் பிணையங்கள் | ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 500,000 | கலண்டர் ஆண்டொன்றிற்கு ஐ.ெ.டொ. 2 மில்லியன். |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படாத ஏதேனும் கம்பனி | | | ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 100,000 | கலண்டர் ஆண்டொன்றிற்கு ஐ.ெ.டொ. 500,000 |
| இலங்கையில் பதிவு செய்யப்பட்ட தேனும் பங்குடமை | | | வாழ்நாளிற்கு ஐ.அ.டொலர் 100,000 | வாழ்நாளிற்கு ஐ.அ.டொலர் 300,000 |
| எவரேனும் தனிநபர் | | | வாழ்நாளிற்கு ஐ.அ.டொலர் 100,000 | வாழ்நாளிற்கு ஐ.அ.டொலர் 200,000 |
| ஏதேனும் கம்பனி அல்லது பங்குடமையொன்று | | | ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 100,000 | கலண்டர் ஆண்டொன்றிற்கு ஐ.ெ.டொ. 300,000 |

(ii) **வதிவற்றோரினால் இலங்கையில் முதலீடுகள்:** இலங்கையில் முதலிடுவதற்கு வதிவற்றோருக்கு கிடைக்கக் கூடிய பரப்புக்கள், ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடனான நிலையான வைப்புக்களுக்கு மேலதிகமாக, இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்கமைக்கப்படும் உரிமமளிக்கப்பட்ட சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகள், உரிமமளிக்கப்பட்ட நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட குத்தகைக்குவிடும் கம்பனிகளின் நிலையான வைப்புக்களை உள்ளடக்குவதன் மூலம் விரிவுபடுத்தப்பட்டது. மேலும், இலங்கை மத்திய வங்கியினால் அல்லது வேறு ஏதேனும் நியதிச் சட்ட சபைகளினால் வழங்கப்படட பிணையங்கள், இலங்கையில் கூட்டிணைக்கப்படாததும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டதுமான கம்பனிகளின் பிணையங்களில் முதலீடு செய்வதற்கு முதலீட்டாளர்கள் தற்போது அனுமதிக்கப்பட்டள்ளனர். இது நிலையான அடிப்படையொன்றில் இலங்கைக்குள் மூலதனப் பாய்ச்சல்களைக் கவரும் நோக்குடன் எதிர்கால முதலீட்டாளர்களிற்கான புதிய சந்தர்ப்பங்களை உருவாக்குவதுடன் முதலீட்டு வழிவகைகளினை மேம்படுத்துகின்றது.

(iii) **புலம்பெயர்ந்தோர் நிதி மாற்றல்கள்:** இலங்கையை சொந்தமாகக் கொண்ட புலம்பெயர்ந்தவர்களை வசதிப்படுத்தும் நோக்குடன் தசாப்தங்கள் பழைய புலம்பெயர்ந்தோர் முற்பணங்களின் எல்லை (ஆரம்ப முற்பணம் மற்றும் வருடாந்த முற்பணம் இரண்டும்) மேம்படுத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் முன்கூட்டிய அனுமதியின்றி தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் பராமரிக்கப்படும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகளினூடாக மேம்படுத்தப்பட்ட புலம்பெயர்ந்தோர் முற்பணங்களை அனுப்புவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அட்டவணை ஆ 5.2)

**அட்டவணை ஆ 5.2: புலம்பெயர்ந்தோர் முற்பணங்களின் ஆரம்ப வரையறைகளின் ஒப்பீடு**

| புலம்பெயர்ந்தோர் முற்பணங்கள் | செ.க.ச. கீழ் வரையறைகள் | வெ.செ.ச. கீழ் வரையறைகள் |
|---|---|---|
| ஆரம்ப புலம்பெயர்ந்தோர் முற்பணம் | நபரொருவருக்கு ஐ.அ.டொ. 150,000 | நபரொருவருக்கு ஐ.அ.டொ. 200,000 |
| வருடாந்த புலம்பெயர்ந்தோர் முற்பணம் | நபரொருவருக்கு ஐ.அ.டொ. 20,000 | நபரொருவருக்கு ஐ.அ.டொ. 30,000 |

**(iv) வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு கடன்கள்:** தேசிய பொருளாதாரத்திற்கு அவர்கள் மேற்கொள்ளும் பெறுமதிவாய்ந்த பங்களிப்பின் அங்கீகரிப்பில், ஒழுங்குவிதிகளின் பிரயோகத்தினை இலகுபடுத்துவதற்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடமிருந்தான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை உயர்த்துவதற்கும் ஏற்கனவே நிலவிய மூன்று வகையான கடன் திட்டங்களினை இணைப்பதன் மூலம் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கான ஒற்றைக் கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

**ஆ) 2017இன் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கு கணக்குகளைத் திறந்து பராமதித்தல்)**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஏறத்தாழ 17 வெவ்வேறு வகையான வெளிநாட்டு நாணயக் கணக்குகள் இலகுமுறை மற்றும் தொழிற்பாட்டுடன் இசைந்து செல்வதற்காக மீள வகைப்படுத்தப்பட்டன. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் திறந்து பராமரிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய மற்றும் ரூபாக் கணக்குகளின் சிக்கலான அமைப்பினை இலகுவாக்குவதன் மீது ஒழுங்குவிதிகள் 2 மற்றும் 3 என்பன கவனம் செலுத்துகின்றன. மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கான ஐந்து வகையான வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் ரூபாக் கணக்குகளின் திறத்தல் மற்றும் பராமரித்தலுடன் ஒழுங்குவிதி 2 ஈடுபடுகின்றது. (அட்டவைண ஆ.5.3).

**அட்டவைண ஆ.5.3: மூலதனக் கொடுக்கல்வாங்கல்களிற்கான கணக்குகளின் ஒப்பீடு**

| புலம்பெயர்ந்தோர் முற்பணங்கள் | செ.க.ச. கீழ் வரையறைகள் |
|---|---|
| • பிணையங்கள் முதலீட்டு கணக்கு<br>• சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கு | உள்முக முதலீட்டுக் கணக்குகள் |
| • வெளிமுக முதலீட்டுக் கணக்கு | மாறாது அவ்வாறேயுள்ளது. |
| • வதிவற்றோர் ரூபாக் கணக்குகள்<br>• வதிவற்றோர் தடுத்துவைக்கப்பட்ட கணக்குகள்<br>• புலம்யெர்ந்தோர் தடுத்துவைக்கப்பட்ட கணக்குகள் | மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகள் |
| • இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள்<br>• இராஜதந்திர ரூபாக் கணக்குகள் | மாறாது அவ்வாறேயுள்ளது. |

**இ) 2017இன் 3ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (வெளிநாட்டுச் செலாவணி கணக்குகளின் திறத்தல் மற்றும் பராமரித்தல்)**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் பராமரிக்கப்பட்ட 9 கணக்குகளை இணைப்பதன் மூலம் பொதுவாக இரண்டு வகைகளின் கீழ் வெளிநாட்டு நாணயக் கணக்குகளினை இவ்வொழுங்குவிதிகள் வகைப்படுத்துகின்றது. (அட்டவணை ஆ 5.4)

**அட்டவணை ஆ.5.4: வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் ஒப்பீடு**

| செ.க.ச. கீழான கணக்குகள் | வெ.செ.ச. கீழ் மீள் பெயர்குறித்துரைக்கப்பட்ட கணக்குகள் |
|---|---|
| • வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்<br>• வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்<br>• வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்<br>• வதிவற்ற இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்<br>• ஊழியர்களின் கொள்ளளவினைப் பொறுத்து வெளிநாட்டு சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் ஊழியர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள் | தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் |
| • வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகள்<br>• வெளிநாட்டு கடற்றொழில்/ வானூர்தி முகவர் ஒருவருக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள்<br>• உள்முக பணவனுப்பல்கள் பகிர்ந்தளிப்புக் கணக்குகள்<br>• ஊழியர்களின் கொள்ளளவினைப் பொறுத்து வெளிநாட்டு சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் ஊழியர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள் | வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் |

- **சுனாமிக்குப் பின்னான உள்முக பணவனுப்பல்கள் கணக்குகளின் புதிய திறத்தல் இடைநிறுத்தப்பட்டதுடன் அத்தகைய கணக்குகளிற்கான கோரிக்கைகளிற்கேற்ப சாதாரண இலங்கை ரூபாக் கணக்குகளினூடாகப் பேணப்பட முடியும்.**

- **இலங்கையினை அவர்களின் இரண்டாவது வீடாக கருதும் வெளிநாட்டுப் பிரஜைகளை இசைவுபடுத்துவதற்கு, அரசாங்கத்தினால் சிறப்பு வைப்புச் சட்டம் சட்டமாக்கப்படும் வரை வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குகள், மூத்த வெளிநாட்டவர் நிலையான வைப்புக் கணக்குகள் மற்றும் மூத்த வெளிநாட்டவர் ரூபாக் கணக்குகள் மீளப் பெயர்குறிக்கப்படாது தொடரப்படலாம்.**

- **செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஏற்கனவே திறப்பட்ட வெளிவாரி வர்த்தக கடன்படுகை கணக்குகள் அத்தகைய திட்டங்களின் கீழ் பெறப்பட்ட கடன்களின் பூரணத் தீர்ப்பனவு வரை மட்டும் தொடரப்பட முடியும்.**

**3.2. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளைகள்**

**அ) வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் இலங்கை ரூபாவின் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் உடமையில் வைத்திருத்தல் மீதான நோக்கங்கள், வரையறைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானிக்கும் கட்டளை.**

இக்கட்டளையின் நியதிகளில், இலங்கைக்கு வரும் அல்லது இலங்கையிலிருந்து வெளியேறும் எவரேனும் ஆள் அட்டவணை ஆ.5.5இல் உள்ள வெளிப்படுத்துகை தேவைப்பாட்டிற்கு உட்பட்டு, ஏதேனும் பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தினை கொண்டு வர முடியும்.



5

இதன்படி, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வெளிப்படுத்துகையின் ஆரம்ப வரையறைகள் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் மேம்படுத்தப்படும்.

**அட்டவைண ஆ 5.5: சுங்க வெளிப்படுத்துகையின் வெளிநாட்டுச் செலாவணி ஆரம்ப வரையறைகளின் ஒப்பீடு**

| சந்தர்ப்பம் | வெளிப்படுத்துகைத் தேவைப்பாடு* | |
|---|---|---|
| | செ.க.ச. | வெ.செ.ச. |
| ஏதேனும் வடிவில் இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியைக் கொண்டுவரும் ஆளொருவர் | ஐ.அ.டொலர் 15,000 மீறுகையில் | ஐ.அ.டொலர் 15,000 மீறுகையில் |
| நாணயத்தாள்கள் வடிவில் மீள எடுத்துச் செல்லும் நோக்குடன் வருகைதரும் ஆளொருவர் | ஐ.அ.டொலர் 5,000 மீறுகையில் | ஐ.அ.டொலர் 10,000 மீறுகையில் |
| நாணயத்தாள்களுடன் நாட்டை விட்டு வெளியேறும் ஆளொருவர் | ஐ.அ.டொலர் 5,000 மீறுகையில் | ஐ.அ.டொலர் 10,000 மீறுகையில் |
| ஏதேனும் வடிவில் வெளிநாட்டுச் செலாவணியை எடுத்துச்செல்தும் ஆளொருவர் | ஐ.அ.டொலர் 10,000 மீறுகையில் | ஐ.அ.டொலர் 15,000 மீறுகையில் |

*ஐ.அ.டொலரில் அல்லது வேறு வெளிநாட்டு நாணயத்தில்

### ஆ. ஆள் ஒருவரின் வதிவிட அந்தஸ்த்தினை தீர்மானிக்கும் கட்டளை

ஆள் ஒருவரின் வதியியல் நிலைமையினை தீர்மானிப்பதற்கான புதியதொரு பிரமாணமானது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டது போல் நிரந்தரமாக இருக்கும் இடத்தின் மீது கவனம் செலுத்துவதைக் காட்டிலும் இலங்கையில் செலவு செய்கின்ற மொத்த நாட்களின் எண்ணிக்கையின் (183 நாட்கள் அல்லது அதற்கு அதிகமாக) அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஏனைய பன்னாட்டு நியமங்கள் மற்றும் உண்ணாட்டரசிறைச் சட்டம் போன்ற பிரயோகிக்கத்தக்க சட்டங்களுடன் ஒத்துப் போகின்றது. இது நடைமுறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வதிவியலினை தீர்மானிப்பதில் இருபொருள் மயக்கத்தினை நீக்குவதற்கான நோக்காகும்.

### 3.3. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள்

நடைமுறைப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளினை வசதிப்படுத்துவதற்கு வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களாகிய 15 பணிப்புரைகளினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்கு வழங்கியுள்ளது. வெளிநாட்டுச் செலாணிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட இவ்வனைத்து ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளையும் www.dfe.lk வெப்தளத்திலிருந்து பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

## 4. கருத்துக்களின் தொகுப்பு

ஏற்கனவே, கொள்கைகள் வடிவமைக்கப்பட்டதுடன் சட்டம் நடைமுறையில் இருந்த போதிலும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டை அடைவதற்கு வினைத்திறனான நடைமுறைகள் தேவையாகும். புதிய சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட தளர்த்தல்கள் மற்றும் இலகுவாக்கும் அளவீடுகளின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடானது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்/ மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் மூலமான வெற்றிகரமான நடைமுறைக்கிடல் மற்றும் ஆர்வலர்களுடனான அவர்களின் வினைத்திறன் மற்றும் விளைத்திறனான ஈடுபடுகையின் மீது பாரியளவில் தங்கியிருக்கின்றது.

மேலதிகமாக, புதிய கட்டமைப்பானது புதியதொரு கொள்கை ஆரம்பிப்பு என்பதால் கைத்தொழில் இயக்கத்தின் அடிப்படையில் ஆர்வலர்களிடமிருந்து பெறப்படும் பின்னூட்டலினை மையமாகக் கொண்டு தொடர்ச்சியான திருத்தங்களை தேவைப்படுத்தலாம்.

**உசாத்துணை**

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்
1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்
2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்
பன்னாட்டு நாணய நிதிய ஒப்பந்தத்தின் பொதுவிதிகள்.

5